உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

திருக்கைலாசபரம்பரைத்

திருவண்ணாமலையாதீனத்து

ஆறுமுகசுவாமிகளால்

அருளிச்செய்யப்பட்ட

# தலயாத்திரைப் பொதுவிதி.

## காசிமான்மியம்.

இவை

பறங்கிப்பேட்டை

ந. தெய்வநாயகமுதலியாரால்

சென்னபட்டணம்:

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

(*Copyright Reserved.*)

1882.

கணபதி துணை.

# வ ர லா று.

ஸ்ரீகாந்தத்தில் சனற்குமார சம்மிதையில், மலயாத்திரிமுதல் இமயாத்திரிபரியந்தம் தனித்தனி கண்டங்களாகவும், பதுமம், இலிங்கம் முதலிய புராணங்களில், ஓரோர் பிரகரணங்களாகவும், கண்டமாகவும், பாரதமுதலிய இதிகாசங்களில் பிரகரணங்களோடு சேர்த்தும் ஆரிடம், தைவிகம், காணம், சுவாயம்புவ முதலிய தலங்கள் கூறப்படுவனவாம். இன்னும் ஸ்ரீகாமிக வீராகமமுதலிய சைவாகமங்களினும் ஆரிடாதிகள் பொதுமையாயும் சுவாயம்புவங்கள் சிறப்பாயுங் கூறப்படும்.

அவற்றுள், ஆரிடத்துக்குத் தைவிகமும், தைவிகத்துக்குக் காணமும், காணத்துக்குச் சுவாயம்புவமும், ஒன்றுக்கொன்று விசேடமுடையது. ஆரிடம், இருடிகளாற் பூசிக்கப்பட்டதென்றும், தைவிகம், தேவர்களாற் பூசிக்கப்பட்டதென்றும், காணம், கணங்களாற் பூசிக்கப்பட்டதென்றும், சுவாயம்புவம், சிருட்டிகாலத்து உலகுக் கனுக்கிரகிக்கும்பொருட்டுச், சிவபிரான் சாதாக்கியப்பகுப்பாய்ச் சோதிமயமான திவ்வியவிலிங்கமாய்த் தோன்றி, பஞ்சமந்திரதநுவாயெழுந்

தருளியிருக்கு மிடமென்றும், அவற்றின் காரணமும், அந்நூல்களிற் கூறப்படும்.

அச்சுவாயம்புவங்கள், குருக்ஷேத்திரம், நைமிசம், புட்கரம், விரசைமுதலிய தலங்களில், சரஸ்வதிமுதலிய திவ்விய தீர்த்தங்களோடிருத்தலின், தீர்த்தயாத்திரையில் தீர்த்தவிதியோடு ஸ்நானஞ்செய்தற்கு, வாசஸ்பதி முதலியோர் செய்த தீர்த்தசிந்தாமணி முதலிய நூல்களிற் சொல்லப்பட்ட தீர்த்தயாத்திரையோடுகூடிய தலயாத்திரைப் பொதுவிதியும். ஸ்ரீகாசி, சுவாயம்புவங்களுள்ளும், முத்திக்ஷேத்திரங்க ளெல்லாவற்றுள்ளுஞ்சிறந்த விதேகமுத்திக்ஷேத்திரமாதலின், அதனையடைந்து, நியமத்தோடு வசித்து விடடைதற்கு வழியாக நாகேசுரர்செய்த திரித்தலிசேது, சுரேசுராசாரியர் செய்த மிருதிமோக்க நிர்ணயம்; காசிமான்மியம் என்னும் இவைகளினின்றெடுத்துச் சங்கிரகித்த இக்காசிமான்மியமும் ஆகிய இவ்விரண்டும், ஈண்டு யாத்திரை செய்வோர்க்கு உபயோகமாக இயற்றப்பட்டன. இப்பொதுவிதி, யாத்திரைசெய்வோர்க்கு, தீர்த்தவிதி செய்தற்குப் பயன்படுதலேயன்றி, இச்சுருங்கியகாசிமான்மியமும் கலாவதிக்குக்காசிப்படம் சன்மார்க்கர வாசனையால், அதன் மான்மியத்தை விளக்கினற்போல, புராணநூல் வல்லவரல்லாத புண்ணிய பரிபாகிகட்குக் காசிமான்மியத்தைப் புலப்படுத்து மென்பதற்குச் சந்தேகமில்லை.

# ஸ்ரீசைவாகமத்திற் கூறப்படும் சுவாயம்புவத்தலங்களின் மூர்த்திகள்.

ஸ்ரீ காசியில் விசுவேசரும்,
,, பிரயாகையில் சோமேசரும், (சோமேசர் யமுனையின் தென்கரையில்.)

,, நைமிசாரணியத்தில் தேவதேவேசரும்,
,, கயாவில் பிரபிதாமகரும்,
,, குருக்ஷேத்திரத்தில் தாணுவும், (அம்மூர்த்தி, அதின்வடக்கில் தாணுதீர்த்தக்கரையில்.)

,, பிரபாசத்தில் சசிபூடணரும், (பிரபாசம் புட்காரத்துக்குமேற்கு துவாரகைமார்க்கத்தில்.)

,, அட்டகாசத்தில் மகாநாதரும்,
,, புட்காரத்தில் இரசோகந்தரும், (புட்கரம் டில்லிக்குக் கிழக்கு.)

,, உச்சினியில் மகாகாளரும், (மகாகாளம் ஓங்காரத்திற்கு மேற்கு)

,, சங்குகர்ணத்தில் மகாதேசரும்,
,, கோகர்ணத்தில் மகாபலரும், (கோகர்ணம் துளுவத்தில்.)
,, உருத்திரகோடியில் மகாயோகியும்,
,, கேதாரத்தில் ஈசானரும், (கேதாரம் பதிரிகாசிரமத்தைச் சேர்ந்தது இமாலயத்தில்.)

,, இமாலயத்தில் உருத்திரரும், (இமாலயத்தில் கேதாரமல்லாமல் இரண்டு தலமுண்டு அவற்றுள் இஃதொன்று.)

,, வைரவத்தில் வைரவரும்,
,, பத்திரவடத்தில் பத்திரரும்,

,, கனகலத்தில் உருத்திரரும், (கனகலம் அரித்துவாரத்திலிருக்கின்றது.)

,, தேவதாருவனத்தில் தண்டியும்,

,, திரிசந்தியில் ஊர்த்துவரேதரும்,

,, ஏகாம்பரத்தில் கிருத்திவாசரும், (ஏகாம்பரம் காஞ்சி.)

,, காஸ்மீரத்தில் விஜயரும்,

,, பூதேசத்தில் பஸ்மகாயரும்,

,, சப்தகோதாவரியில் வீமரும், (ஸப்தகோதாவரி காக்கைநாடு சமீபம்.)

,, கைலாசத்தில் திரிபுராந்தகரும்,

,, ஏமகூடத்தில் விரூபாக்ஷரும், (விரூபாக்ஷம் அம்பை.)

,, இமத்தானத்தில் கங்காதரரும்.

,, விரசையில் திரிலோசனரும், (விரசை உத்கலதேசத்தில்.)

,, நேபாளத்தில் பசுபதியும்,

,, அமரேசத்தில் ஓங்காரரும், (ஓங்காரம் காண்டுவாவுக்கு மேற்கு.)

,, அரிச்சந்திரத்தில் அரருமென இவர்.

,, ஸ்ரீசயிலாதிகளில் இம்மூர்த்திகளேயன்றி இன்னும் பலமூர்த்திகளுங் கூறப்படுகின்றன.

சிவமயம்.

# தலயாத்திரைப் பொதுவிதி.

சமதமாதி சற்குணசாதன யுக்தரான புருடர்களுக்குக், காமியமாயும், நிட்காமியமாயும், யாகபலனுக்கு விசேடமாய பலன்களைக்கொடுக்கும் பரம புருடார்த்தமென்று, மிருதி,புராணம், இதிகாசமிவைகளிற் கூறப்படுந் தீர்த்தயாத்திரையோடு கூடிய தலயாத்திரைப் பொதுவிதி கூறப்படுகின்றது. சமமென்றது அந்தக்கரணங்களை இந்தியங்களிற் செல்லாமல் நிறுத்துதல். தமமென்றது இந்தியங்களைச் சத்தாதிவிடையங்களிற் செல்லாமல் நிறுத்துதல். ஆதிபதத்தாற் சிரத்தைமுதலியனவும், சற்குணமென்றதனுல் இயமநியமங்களுள் ஏற்பனவும் கொள்க. தீர்த்தயாத்திரைப் பொதுவிதி யென்னுது தீர்த்தயாத்திரையோடுகூடிய தலயாத்திரையென்ற தெற்றுக்கெனின், கங்கைமுதலிய திவ்வியநதிகளில் ஸ்நானஞ்செய்தல் காசிமுதலிய திவ்வியத்தலங்களில், விசேடமாதல்பற்றி யென்க.

# அதிகாரிகள்.

யாத்திரைக்குரிய அதிகாரிகள் யாவரெனின், பிராமணர்முதலிய நான்குவருணத்தாரும், பிறரும் அதிகாரிகளாவர்.

இவருள், வேதாதிகாரிகள் மூவர். அவருள் பிரமசாரிக்குக் குரு அநுமதிப்படி அதிகாரம்; கிரகத்தருள், எக்ஞாதிகாரிக்குப் பத்தினியோ டதிகாரம்; அனதிகாரிக்கும், வேதாதிகாரியல்லாத கிரகத்தனுக்கும் பத்தினியோடதிகாரம்.

அனதிகாரியென்றது ஸ்மார்த்தாக்கினிக் கதிகாரியாய், சிரௌதாக்கினிசெய்யும் யோக்கியதை யில்லாதவனை.

பிராயச்சித்தத்தின்பொருட்டு யாத்திரை செய்கிறவனுக்கும், அபத்தினிகனுக்கும், பத்தினியில்லாமலும் அதிகாரம். பிராயச்சித்தனுவான், மதுபானுதிகள் அறியாதுசெய்து அதனுல் நீக்கப்பட்டுத் தலயாத்திரை செய்வோன்.

விதந்துவுக்குப் புத்திரன் முதலானவர்கள் அநுமதிப்படி யதிகாரம்.

தலங்களிலும், தீர்த்தங்களிலும் ஐந்திராத்திரி வசிக்கவென்று காத்தியாயன சூத்திரத்தில் கூறப்படுதலினுல், சந்நியாசிகளுக்கு மதிகாரம்: பிரமநிட்டனுக்கு அதிகாரமில்லை. பிரமநிட்டனென்றது அச்சந்நியாசிகளில் நிட்பிரபஞ்ச சமாதிநிலை பெற்றவனை.

சிவஞானபோதத்து "ஆலயந்தாமு மரனெனத் தொழுமே" என்று இருத்தலானும், சூதசம்மிதையில்

காசிமுதலிய முத்திக்ஷேத்திரத்தில் வாசஞ்செய்யும் படி, விதித்திருத்தலானும், முமூட்சுக்களுக்கு மதிகாரம்.

முமூட்சுக்களை வேறுகூறவேண்டிய தெற்றுக்கெனின், வைதிகத்தில், துரியன், அவதூதன், பரமாம்சன் என்னும் வித்துவத் சந்நியாசிகள் மூவருமொழித்துக், குடீசகன், வகூதகன், அம்சனென்னும், விவிதிச்சாசந்நியாசிகள் மூவரும், க்ஷத்திரிய வைசியருள், தண்டக் கிரகணத்துக் கதிகாரமில்லாதவராய் விவிதிச்சாசந்நியாசத்திலிருப்போரும், பெண்கள், சூத்திரர்களில் சுகிர்தவசத்தால் சித்தசுத்தி யெய்தினோரும், சிரௌதிகளில், நிட்காமியயாகஞ் செய்வோரும், முமூட்சுக்களாய் அடங்குவரேனும், சத்திநிபாத சிந்நிகளான சிவாச்சிரமிகள் அடங்காமையின் வேறுகூறப்பட்டது. வித்துவச் சந்நியாசிகள் மூவரும் பிரமஞானம்வந்து துறந்த சாத்தியராதலின் முமூட்சுக்களினின்றும் வேறுபிரிக்கப்பட்டனர். சிவாச்சிரமிகளென்றது விசேடம்பற்றி சிவதன்மணி தீக்கைக்கதிகாரிகளாய்ப் பிரமசரியங் கிரகத்தம் சந்நியாசம் இவைகளில் நிற்போரை.

---

## யாத்திரை நியமம்.

தீர்த்தயாத்திரைசெய்வோன், முதனாள் ஏகவாரம் அவிசுபுசித்துப் பிரமசரியாதி நியமமுடையவனாயிருந்து, மறுநாள் முண்டனஞ்செய்து விநாயகர் முதலிய இட்டதேவதைகளைப் பூசித்து, நெய் முக்கியமான கிருதச்சிராத்தத்திற்குரிய தைவதபார்வணஞ்செய்து அன்று உபவசியாய், நல்ல முகூர்த்தத்தில் அபரா

ராத்திரியில், பழம், வஸ்திரம் முதலியவற்றை உத்தானஞ்செய்யக்கடவன். உத்தானஞ் செய்யுங்கால், தானிருக்கின்ற கிராமம் வலமாக ஒரு குரோசத்தில் சமீபக்கிராமத்தை யடைந்து, மறுநாள் கிருதச்சிராத்தஞ்செய்த கிருதசேடத்தோடு பாரணஞ்செய்து, அன்றங்கிருந்து புறப்படக்கடவன். இக்கிருதச் சிராத்தம் ஆறுபார்வணமுடைத்தேனும், தீர்த்தச் சிராத்தமன்று; விருத்திச் சிராத்தமேயாம்.

நியமவான் உபவாசதினத்திற்புறப்படலாம். உறுப்பு,சம்யமம், உபவாசமென விரண்டு: அவற்றுள் சம்யமமாவது, ஏகவாரபோசனமுதலியன; உபவாசமாவது, போசனமின்மைமுதலியன. முதனுட்சம்யமமில்லாதவன், மறுநாள் உபவாசஞ்செய்தல் உடன்பாடன்மையின், ஈண்டு நியமவானென்றது, முதனுள் ஏகவார போசனமுதலிய சம்யமமுடையானை. சம்யமத்திற்குரியவன், உபவாசத்திற்குரியனாதலின் அத்தினம் அவனுக்கு உபவாசதினமாயிற்று.

குரு சுக்கிரர்களுடைய அத்தமயத்தினும், சாந்திரமான அதிகமாசத்தும், சன்மநட்சத்திரத்தும், யாத்திரைப் பிரயாணமாய்ப் புறப்படலாகாது, கோதாவரியுங் கயாவும் அல்லாவிடத்து.

யாத்திரைநியமம் பண்ணிக்கொள்ளும் பொழுது, இடையில் எவ்வளவு தீர்த்தயாத்திரை செய்யவேண்டுமோ அவ்வளவு தீர்த்தயாத்திரையையும் உத்தேசித்துச் சங்கற்பஞ் செய்துகொள்ளவேண்டும்; உத்தேசித்த தீர்த்தமன்றி, வேறுதீர்த்தங்கட்குச் சென்றால்,

பாதியாத்திரைப்பலன் வருமாதலால். தீர்த்தம் தலவிசிட்டமாதலால் தலவிசேடம்பற்றிச் சங்கற்பஞ்செய்ய வேண்டும்.

கூலிவாங்கிக்கொண்டு பிறன்பொருட்டு யாத்திரைசெய்பவனுக்கும், பரான்னபோசனத்தால் யாத்திரைசெய்பவனுக்கும், பதினறி லொருபங்குபலன்.

ஒருவனுக்கு அன்னங்கொடுத்து யாத்திரைசெய்வித்தால், யாத்திரைசெய்பவனுக்கு அதிகமாக நாலுபங்கு அன்னங் கொடுத்தவனுக்குப் பலன்.

சிட்டனுக்கு அன்னங்கொடுத்து யாத்திரை செய்வித்தவனுக்கு, எண்மடங்கு யாத்திரைபலன்.

குடை செருப்பின்றி நடந்து யாத்திரை செய்பவனுக்குப் பூரணபலன்: அவற்றோடு செல்பவனுக்கு முக்காற்பங்குபலன்: கோயானத்துங், குதிரையிலுஞ் செல்பவனுக்குப் பலனில்லை. நரயானத்திற் செல்பவனுக்கு அரைப்பங்கு பலன். அசத்தனுகிற் பூரணபலன். இரண்டுகாலமும் போசனஞ்செய்தால், காற்பங்குபலன். பிரதிக்கிரகஞ் செய்பவனுக்குப் பலனில்லை.

ஏழை வேறுவழியால் சீவித்தல் கூடாவிடத்துப் பிரதிக்கிரகஞ்செய்யலாம்; கெட்ட வழியால் யாசித்த பொருள் குற்றமாம்.

பிராமணனுக்கு நாவாயின்றி நதியைக்கடத்தல் கூடாதவிடத்தன்றி, தீவாந்தரங்களில் நௌகாயாத்திரைசெய்வது குற்றமாம்.

ஓர் யாமத்திற்குரிய நௌகாயாத்திரை குற்றமி ல்லை. அங்கம், கலிங்கம், சவுராட்டிரம், மிலேச்சம் முதலிய தேசங்கள் யாத்திரைக் குரியன வல்ல. தீர்த் தப்பிரதேசங்களிற் செல்லுங்கால் அவை மார்க்கத்தில் வருமாகிற் குற்றமில்லை.

யாத்திரைசெய்யும் மார்க்கத்தில், தீர்த்தவிசேடந் தலவிசேடமிருந்தால்,அங்கும் யாத்திரைசெய்ய வேண் டும். கங்கையொழிந்த தீர்த்தங்களை நருமதைமுதலிய தீர்த்தங்களில் நினைத்தல் கூடாது.

ஸ்நானஞ்செய்யும் நதியின் அக்கரையில், தீர்த்த விசேடமிருந்தால், ஸ்நானஞ்செய்யாமற் போகக்கூ டாது. தலவிசேடங்களுக்கு மப்படியே. சரஸ்வதிக்கு இக்கரையிலேயே ஸ்நானஞ்செய்யவேண்டும். அதற்கு இருகரையிலும் தீர்த்தவிசேடமிருந்தால், அவ்விரண் டிடத்தும் ஸ்நானஞ்செய்யவேண்டும். ஏனையநதிக்கும் இவ்வாறென்றறிக.

யாத்திரை செய்வோனுக்குக் காமக்குரோத மின் மையும், பரநிந்தை செய்யாமையும், பொய்சொல்லா மையுமேயன்றிச், சிவநாமகீர்த்தனஞ் செய்தலும், சிவ சரித்திரங்களை ஓதுதலும், இயன்றளவு சற்பாத்திர தானமும் என இவை முக்கியமான அங்கங்கள்.

இடையில் சூதகம் நேரிட்டால் ஒரூரையடை ந்து, அங்குவசித்துச், சூதகநிவர்த்தியின்மேல் யாத் திரை போகவேண்டும்.

பிராதக்காலத்தில் ஸ்நானமில்லாமலும், ஆந்நிகங்கள்செய்யாமலும் போகலாகாது; காலைச் சந்தியாவந்தநம் மத்தியானத்தும், மாத்தியாநிகம் சாயாநத்தும், நழுவும் படிபோதல் குற்றமாம். யாத்திரை, திருவிழா, தீர்த்தம்முதலிய விடங்களில், தீட்டில்லையேனுஞ், சண்டாளர் முதலியோர் பரிசத்தில் ஸ்நானஞ்செய்ய வேண்டும்.

உத்தேசித்துச் சங்கற்பித்த தலங்கள் இடையில் யாத்திரை செய்யாதொழியின், அச் சங்கற்பப்படி செய்யாமையால்வருங் குற்றத்திற்குப் பிராயச்சித்தஞ் செய்யவேண்டும். மத்தியில் இறந்தவன் புண்ணிய லோகத்தையடைவன். நம்பிக்கை யில்லாதவனுக்குப் பலனில்லை.

புதிதாக யாத்திரைசெய்வோன், விதிதகாலங்களிலன்றி, நிடேதகாலங்களில், தீர்த்தங்களில் மனப்பூர்வமாய்ப் போகலாகாது.

யானத்தில் வருகின்றவன் தலவிசேட தீர்த்தவிசேடங்களை யடைந்து தரிசித்தமாத்திரத்தில், யானமிழிந்து நமஸ்காரஞ்செய்து,பின்பு பாதசாரியாய்நடந்து, தீர்த்தக்கரையை யடைந்து, வஸ்திரத்தோடு ஸ்நானஞ் செய்து, வபனத்தின்பொருட்டுச் சங்கற்பித்து, வபனஞ்செய்து, பின்பு பன்னிருகால் மூழ்கி, மிருத்திகாஸ்நானம் மந்திரவத்தான அகமருடணஸ்நான மிவைகள் செய்து, தீர்த்ததர்ப்பணம், தீர்த்தச்சிராத்தஞ்செய்து,

அன்று தலதரிசனமும், உபவாசமுஞ் செய்யக்கடவன். பாதசாரிக்குமிதொக்கும். உபவாசத்திற் கசக்தன் நக்தபோசனஞ் செய்யக்கடவன்.

இவ்வாறு நியமத்தனாய் ஸ்நானம், தரிசனஞ்செய்து, மூன்றுராத்திரி தலவாசஞ்செய்தவன் எல்லாப் பாவங்களினின்றும் நீங்குவன்.

தீர்த்தத்தை யடையும்போது, உட்ணீடம், ஆயுதம், கங்கணம், உத்தரீயம், முதலியநீக்கி, விநீதவேடனுயுந், தலத்தையடையும்போது ஸ்நானயுக்தனாய், விபூதி, உருத்திராக்கமணிந்து விநீதவேட முடையனாயுஞ் செல்லவேண்டும். விநீதவேடம் இடம்பமில்லாத வேடம்.

கங்கணமென்றது கரபூடணத்தை: யாத்திரையின்பொழுது தரித்துக்கொள்ளும், காஷாய முதலியவற்றுள் ஒன்றாய இரட்சாபந்தத்தை யன்று.

---

## முண்டனவிதி.

தீர்த்தயாத்திரை செய்வோன், தான்செய்யும் முக்கியகாரியங்கட்குச் சுத்தியாக, அக்கினியாதானம், சோமபானம், தீட்சை, இவைகட்குப்போல, விசேட தீர்த்தங்களில் வபனஞ்செய்யவேண்டும். வபனம் முண்டனம் இரண்டிற்கும் ஈண்டொருபொருள்.

விசாலம், புட்கரம், கயா, விரசை இவைகளில் முண்டனமில்லை.

வபன்சங்கற்பமுதலிய சங்கற்பங்களில், காமியவான் காமியமாயும், நிட்காமியவான் நிட்காமியமாயுஞ் சங்கற்பஞ் செய்யவேண்டும்.

முண்டன உபவாசங்கள், சுவர்க்காதி காமியபலனை உத்தேசித்தவனுக்கும்,பிராயச்சித்தத்தின் பொருட்டு யாத்திரை செய்பவனுக்குமேயன்றி, நிட்காமியகன்மிக்கில்லை. அதனால் வெகுதீர்த்தங்களில்,சிட்டாசாரமின்றென்பர்; அது பொருந்தாது: எல்லாத்தீர்த்தங்களிலும் இவ்விதி செய்கவென்று தேவலர் கூறுதலாலும், விசேடதீர்த்தங்களில், செய்கவென்று அபியுக்தவசன மிருத்தலானும்.

தைமாதத்தில் எல்லாத் தீர்த்தங்களும் பிரயாகைக்கு வருதலால் சருவதீர்த்தமென்று பெயர் கூறவேண்டுதலின், முண்டன உபவாசங்கள் பிரயாகைமாத்திரத்திற்கே யென்பர்.

மற்சியபுராணத்தில் எல்லாப்பாவங்களைப் போக்குகின்ற தீர்த்தங்கள் வேறிருக்கின்றனவென்று பிரயாகைப் பிரகரணத்தில் அவைகளைச் சருவதீர்த்தமெனக் கூறுதலினாலும், தேவலர் வெகுவசனத்திற்கு அநுபபத்திவருதலினாலும் அதுவும் பொருந்தாது.

அவ்வாறன்றி, கங்கை, பிரயாகை, பிதா, மாதா, குரு, இவர்களது மரணம், ஆதானம், சோமபானம் ஆகிய ஏழிடங்களில் வபனஞ்செய்கவென்று கூறும் வசனத்தில் பிரயாகையுமொன்ருய், பிரயாகையல்லாத

கங்காதீரத்து வபனஞ்செய்யலாமென்று சித்திக்கப்பட்டது. பிரயாகை, திரிவேணி இரண்டுமொன்று. பிரயாகை பஞ்சக்குரோச பரிமாணமும், அதில் திரிவேணி இருபதுதநுப் பிரமாணமு முடைத்து.

பிராயச்சித்தனுக்கும் விதவைக்கும் சிகையோடு முண்டனம். இழிந்த சூத்திரனுக்கு மப்படியே.

வடக்குப்பார்த்தேனும் கிழக்குப்பார்த்தேனுமிருந்து, பிதாவில்லாதவன் இடதுபக்கமுதலாகவும், உடையவன் வலதுபக்கமுதலாகவும் முண்டனஞ்செய்யவேண்டும். முதலில் முகவாயும், இரண்டாவது கக்ஷமும், மூன்றுவது சிரசுமாக வபனஞ்செய்யவேண்டும்.

சந்நியாசிகள் ஓரிருதுவின் முடிவில் பூரணையில் வபனஞ்செய்பவராதலால் தீர்த்தத்தி லாசாரமில்லை. சடாதாரிக்கும் வபனமில்லை.

ஆகிதாக்கினிகள் பூரணைபல்லாதகாலத்துத் தீர்த்தத்தில் வந்தால், மாதா பிதா இவர்கள் மரணத்து நியமமின்றிப் பண்ணிக்கொள்வதுபோல வபனஞ்செய்வார்கள்.

பிரயாகையில் பிராயச்சித்தனல்லாத சத்தியவான், கன்னிகை, பிதாவையுடையவன், சுமங்கலிகள், கருப்பிணியின்பதி, இவர்களும் முண்டனஞ்செய்யவேண்டும். சுமங்கலிகள் இரண்டங்குலஞ்சேதித்து வேணிதானஞ் செய்வர். கேசத்தைச்சார்ந்து பாவங்களிருக்கின்றன; அதனாற் கேசவபனஞ் செய்கவென்று பிரபாசகண்ட

த்திற் கூறுதலின், கேசங்களைச் சேர்த்துப்பிடித்து நுனியிலிரண்டங்குலஞ் சேதிக்கவேண்டும். திவோதாதியத்தானும், பிராயச்சித்தபிரகரணத்தில் கூறுமிருதியின் பின்பாதியானும், சுமங்கலிகட்கு கேசவபன மிவ்வாறேயாம்.

தேசாசாரத்தில் முண்டனஞ்செய்வாருமுளர்.எந்தத்தேசத்தி லெதற்குப் பரம்பரையான சிட்டாசாரமிருக்கின்றதோ அதை அவ்வாறுசெய்தல் உசிதமாதலின் அவர்க்கது விதியேயாம். வேணிதானஞ்செய்யும்பொழுது சுமங்கலிகள் நாயகனோடிருந்து அவனுக்குச் சுபத்தை விரும்பியே செய்யவேண்டும்.

பிரயாகைமுண்டனம், குருக்ஷேத்திரத்தில் ஆயிரம்பாரம் சுவர்ணத்தை சூரியகிரகணத்தில் தானஞ்செய்தபலனைக் கொடுக்கும். வேணிதானஞ்செய்த சுமங்கலிகளு மவ்வாறுனபலனை யடைவர். யுவதிகள் புத்திர சம்பத்தையுமடைவர்.

சோதிடநிடேதகாலத்து, வபனம் பிரயாகையிற் செய்யலாம்: விசேட தீர்த்தங்களுக்கு மீதொக்கும்.

## ஸ்நானவிதி.

ஸ்நானம், நித்தியம்; நைமித்திகம், காமியம்,என மூவகைப்படும்: அவற்றுள் தீர்த்தயாத்திரையில் செய்யும் ஸ்நானமும், நைமித்திகமெனப்படும். இதற்குக் கோதானுதிகளு மங்கங்கள்.

மகாதீர்த்தங்களில், ஸ்நானஞ்செய்யுங் காலங்களாவன: அயனம், அமாவாசை, பூரணை, மாசப்பிறப்பு, சங்கிராந்தி, சூரியகிரகணம், சந்திரகிரகணம், அர்த்தோதயம், மகோதயம் முதலியனவாம்.

தைமாதச் சங்கிராந்தியில் கங்காசாகரத்தும்,மாசிமாதத்தும், அம்மாதத்து சுக்கிலபட்ச சப்தமியில் பிரயாகையிலும், கார்த்திகைமாதத்தும் அம்மாதத்துப் பர்வத்திலும் புட்கரத்தும், அர்த்தோதய மகோதயங்களில் சேதுவிலும், ஸ்நானஞ்செய்தல் விசேடமெனப்படும். குருக்ஷேத்திரத்தில், தினந்தோறும் மத்தியானத்தில் தாணுதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தல் விசேடம். மூவுலகத்தும் வியாப்பியமாயிருக்கும் பிரமாவினுல் சிருட்டிக்கப்பட்ட, தீர்த்தங்களில், நைமிசாரணியத்து பூமியிலுள்ள தீர்த்தமும், புட்கரத்துச் சுவர்க்கத்திலுள்ள தீர்த்தமும், குருக்ஷேத்திரத்தில், மூவுலகின்கணுள்ள தீர்த்தமும், வியாபித்திருக்கின்றன: ஆதலால் அம்மூன்றும் பாரதத்து விசேடமெனப்பட்டன.

அயோத்தியில், கார்த்திகைமாத வுதயங்களில் கோப்பிரதாரம் விசேடம். அது ஸ்ரீஇராமர் சுவர்க்கமடைந்தவிடம்.

மதுரையில், ஆனி ஆடியில் சுக்கிலதுவாதசியிலும், ஐப்பசியில் சுக்கிலபட்ச யமத்துவிதியையிலும், யமுனுஸ்நானம் விசேடம்.

மாயாபுரியில், வைகாசிமாத உதயங்களிலும், புரட்டாசிமாதக் கிருட்டிணபட்ச சதுர்த்தசியிலும், ஆடி,

கார்த்திகை யிவைகளில் துவாதசியிலும், கங்காஸ்நானம் விசேடம்.

காஞ்சியில், மாசிமாத உதயங்களில் சருவதீர்த்தத்து ஸ்நானம் விசேடம்.

துவாரகையில், புரட்டாசிமாதம் மாளயபட்சம், கோமுதி சங்கமத்துஸ்நானம் விசேடம். கோமுதியில் சந்திரபாகை, கமலையென்னு மிரண்டு நதிகள்கூடச் சங்கமமாகின்றன.

கங்கைக்குக் கங்காபுட்கரமும், கோதாவரிக்குக் கோதாவரிபுட்கரமும், கிருட்டிணைக்கு கிருட்டிணைபுட்கரமும் விசேடம். துங்கபத்திரையில் தக்ஷிணாயனபுண்ணியகாலம் விசேடம்.

மகாதீர்த்தங்களில், சலமெடுத்துச் சவுசஞ்செய்ய வேண்டும். தீர்த்தமல்லாத சலமென்பாருமுளர். இரசச்சுவலைகள் தீர்த்தமெடுத்தன்றி மகாதீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்யலாகாது.

புதிதாகச்சென்ற தீர்த்தத்தில், மலமாசமானலுந தீர்த்தவிதியோடு ஸ்நானஞ் செய்யவேண்டும்.

முன்வந்த தீர்த்தத்தில் பத்துமாதஞ்சென்று பின் வந்தால் தீர்த்தவிதியோடு ஸ்நானஞ்செய்யவேண்டும்.

கங்கையில் ஸ்நானஞ்செய்யுங்கால், ஆமை, மற்சம், அன்னம், நீர்க்காக்கை, முதலை, தவளை, இவைகளை மாவினாலாவது, வெள்ளி, சுவர்ணங்களாலாவது

செய்து, கங்கையைப்பூசித்து, நமஸ்கரித்து விடும் போது பழம், புட்பம் இவைகளோடு விடவேண்டும். இது கங்காதரிசனம்.

இம்மாதத்தில், இப்பக்கத்தில், இத்திதியில், இக்கோத்திரத்தனுகிய இன்னபெயரையுடையநான், இன்னகாரியத்தின்பொருட்டு ஸ்நானஞ்செய்கிறேனென்று சங்கற்பித்து, ஸ்நானஞ்செய்ய வேண்டும். நாலாம்வருணத்தார்க்குக் கோத்திரமில்லை. வண்ணக்கன், வளவேசன் முதலிய குடிப்பெயருடையார், அப்பெயரைக் கோத்திரமாக வழங்குதலு மொன்று.

மாதா, பிதா, மனையாள், சகோதரன், இட்டன், குரு என்னு மறுவருள், எவர்களை யுத்தேசித்து ஸ்நானம்பண்ணினுலு மெட்டிலொருபங்கு ஸ்நானபலனவர்களை யடையும்.

ஒருவரைப்போலப் பிரதிகிருதிபண்ணித் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்வித்தாலும், எட்டிலொருபங்கு ஸ்நானபலன் அவருக்குக்கிடைக்கும், பிரதிகிருதியாவது விதிப்படி முடிந்த தருப்பை. இது உயிரோடிருக்கிறவனுக்கு மிறந்தவனுக்குஞ் செய்விக்கலாம்.

ஸ்நானம், தர்ப்பணம், சிராத்தம், செபம், தானம் இவைகள்செய்யுங் காலங்களில், முஞ்சமென்னும் தருப்பையினுல், பவித்திரம் தரித்துக்கொள்ளவேண்டும். அத்தருப்பை கிடையாவிடத்து, குசம், யவை, அறுகு, விருகி, இவைகளாற் பவித்திரந்தரித்துக்கொள்ளலாம்.

குசசம்பந்தமானதோயம் ஆசமித்தல் சோமபானத்தி ற்குச் சமமென்று வியாசர் கூறினர்.

நோயுடையான், கங்காசலமெடுத்துச் சீதமாயா வது உட்ணமாயாவது ஸ்நானஞ்செய்யலாம்.

காலையில் கோமயமும், மத்தியானத்தில் மிருத்தி கையும், சாயங்காலத்து இவ்விரண்டுமின்றியும், ஸ்நா னஞ்செய்யவேண்டும். அதை அவகாகன ஸ்நானமென் பர். சைவர் காலையினும் மிருத்திகை ஸ்நானஞ்செய்வர்.

நதிக்கபிமுகமாகவும், தடாகம், ஓடைமுதலிய தீர்த்தங்களில் சூரியனுக் கபிமுகமாகவும், ஸ்நானம், மார்ச்சனம், அகமருடணம் முதலியன செய்யவேண் டும். மார்ச்சனம் அகமருடண மிவ்விரண்டும் பிராம ணர்க்குரித்து.

நதியல்லாவிடங்களில் சைவர் வடக்குமுகமாயும் ஸ்நானஞ்செய்யலாம். ஸ்நானமானவுடன் கங்காசமாப னமும் கோதானமுஞ்செய்து பின் தர்ப்பணம் சிரா த்தம் தாமசமின்றிச் செய்யவேண்டும்.

கங்காசமாபனமாவது:—பாகீரதி, திரிபதகை, நந் தினி, நளினி, தேவநதி, கங்கையென்னு நாமங்களை உச்சரித்துக்கொண்டு, கரையிலேறி, தெரிந்தாவது தெரியாமலாவது, என்னுற் செய்யப்படுங்குற்ற முழுவ தையும், உலகமாதாவே, நீ பொறுத்தருளவென்று, அஞ்சலியத்தனுய், நமஸ்காரஞ் சொல்லுதல்.—இது கூர்மபுராணத்திற் கூறப்பட்டது.

அதன்பின்பு, சக்தன், பாதிரிப்பூசிறமுடைய கன்றோடுகூடிய கபிலைப்பசுவைக் குளிப்பாட்டி, கொம்பிற் கிம்புரியும், கழுத்திற் கண்டாமணியுந் தரித்து, பட்டினாற் கஞ்சுகம்போர்த்து, அலங்காரஞ்செய்து, பூசித்து குடும்பியாய், சாங்கமாய் வேதமோதிய சாதுவான பிராமணனுக்கு சுவர்ண தக்ஷிணையோடு தானஞ் செய்யவேண்டும்.

இவ்வாறு தானஞ்செய்தற்குரிய சத்பாத்திர மில்லாவிடத்து, அச்சத்பாத்திரமான பிராமணனை உத்தேசித்து, அவனுக்குக் கொடுக்கிறேனென்று சங்கற்பஞ் சொல்லி, தானசலத்தைக் கங்கையில் விடுத்துத் தத்தஞ்செய்து, அப்பசுவைப் பின் உத்தேசித்த சத்பாத்திரத்தில் கொடுக்கவேண்டும்.

சடகச் சிராத்தத்து,சிராத்தலோபமின்மை தேவலர்க் குடன்பாடானாற்போல, இத்தானத்திற்குறைபாடின்மை,மற்சபுராணத்திற் குடன்பாடாதல் காண்க.

இவ்வாறு ஒரு கோவைத் தானஞ்செய்தவர் அதிகபலனை யடைவர்.

## தர்ப்பணவிதி.

தர்ப்பணம் நித்திய தர்ப்பணம், நைமித்திகதர்ப்பணம், சிராத்தாங்க தர்ப்பணமென மூவகைப்படும். நித்தியதர்ப்பணம் ஸ்நானங்க தர்ப்பணமெனவும், பிரமயக்ஞ தர்ப்பணமெனவு மிருவகைப்படும்.

அவற்றுள் ஸ்நானங்கதர்ப்பணம்,மார்ச்சனம், அகமருடணம், மந்திரமென்னும், மூவகை ஸ்நானங்களுஞ் செய்தவுடன், கிழக்குமுகமாய் நாபியளவுசலத்தினின்று உபவீதியாய் தேவதீர்த்தத்தால் தேவர்க் கோர்காலும், வடக்குமுகமாய் நிவீதியாய் பிராசாபத்தியதீர்த்தத்தால் முனிவர்க் கிருகாலும், தெற்குமுகமாய் பிராசீனவீதியாய் எள்ளோடு பிதிர் தீர்த்தத்தால் பிதிர்கட்கு முக்காலும், தர்ப்பணத்துக்கேற்ற அந்தமாகத் தர்ப்பித்துக் கரையில் வஸ்திர நிட்பீடனஞ் செய்தல்.

மத்தியானத்தில், ஸ்நானங்கதர்ப்பணமும் வஸ்திர நிட்பீடனமு மில்லை.

இவை உதயத்தில் நித்தியஸ்நானஞ் செய்யும்பொழுது சந்தியாவந்தனத்திற்குமுன் செய்யப்படும்.

மாத்தியாங்கிகஞ்செய்து அதன்மேற் பிரமயக்ஞஞ்செய்வர். அப்பிரமயக்ஞத்து நாமகோத்திரங்களோடு தனித்தனி பிதிர் தர்ப்பணமுஞ் செய்யப்படும்.

இப்பிதிர் தர்ப்பணம் ஈரவஸ்திரவுடையார் சலத்தினும் உலர்ந்தவஸ்திரவுடையார் கரையினுஞ் செய்ய வேண்டும்.

கரையிலிருந்து செய்யுங்கால் மட்பாத்திரம் நீக்கி வெள்ளி, பொன், தாமிரம், வெண்கலம், உதும்பரம், கட்கபாத்திரம் என்னும் இவைகளி லொன்றால் தர்ப்பணஞ்செய்யலாம்.

தர்ப்பணம்செய்யும் பொழுது விசேடமாய் பிரா மணன் சர்மாந்தமாகவும், க்ஷத்திரியன் வர்மாந்தமாக வும், வைசியன் குப்தாந்தமாகவும், சூத்திரன் தாசாந்த மாகவும், பிதிரர்களது கோத்திரத்தோடு நாமங்களை உச்சரிக்கவேண்டும்.

சிவதீக்ஷையுடைய நாலுவருணத்தாரும் கோத்தி ரங்களையும் முறையே சிவ, தேவ, குப்த, கணனென்னு மந்தத்தோடு தீக்ஷாநாமங்களையும் தர்ப்பணாதிகளில் உச்சரிப்பர்.

சிவகுலம், சிகாகுலம், சோதிகுலம், சாவித்திரிகு லமென்னு நான்கனுள் பிராமணர்க்குச் சிவகுலமும், க்ஷத்திரியர்க்குச் சிகாகுலமும், வைசியர்க்குச் சோதி குலமும், சூத்திரர்க்குச் சாவித்திரிகுலமுங் கூறப்ப டும். அவருள் முதன்மூவர்க்கும் முனிவர்க்கம் உரித்து. முனிவர்க்கமெனினும் இருடிகோத்திரமெனினு மொக் கும். சூத்திரர்க்குக் கோத்திரமின்மை மேலே கூறினம்.

## அப்பிரமயக்ஞபிதிர் தர்ப்பணக்கிரமம்.

பிதிர்தர்ப்பணம் பிதா, பிதாமகன், பிரபிதாமகன், மாதா, பிதாமகி, பிரபிதாமகி, சாபத்தினிமாதா, மாதா மகன், பிரமாதாமகன், விருத்தப்பிரமாதாமகன், மாதா மகி, பிரமாதாமகி, விருத்தப்பிரமாதாமகி, பிதாவோடு பிறந்தவன், மாதுலன், சகோதரன், அவரவர் பத்தினி கள், தன்பத்தினி, புத்திராதிகள், பிதாவின் சகோதரி, மாதாவின்சகோதரி, அவரவர்கள் நாயகர், அவரவர் புத்

திரர்கள், மாமன், மாமி, குரு, சீடன், ஆப்தன் என்னு மிவ்வரிசைப்படி செய்வது.

மேற்சொல்லிய இருவகை நித்தியதர்ப்பணங்களி லும் திலதர்ப்பணம், விவாகம், சௌளம், உபநயனம் முதலிய கன்மங்களுக்குப்பின் ஆறுமாதம் மூன்றுமா தம் செய்யலாகாதென்றும், புத்திரகாமிக்குச் சப்தமி, சன்மநக்ஷத்திரம், நந்தை, சுக்கிரவாரம், கிருத்திகை, மகம், பரணி, பாநுவாரம் இவைகளில் செய்யலாகா தென்றும் விலக்கப்படும்.

இனி நைமித்திக தர்ப்பணமாவது, புதிதாகவந்த தினத்துத் தீர்த்தத்தில் சிராத்தத்தின்முன் மேற்கூறிய கிரமப்படி பிதாமுதலியோர்க்குச் செய்வது. இதுவ ன்றி, சங்கிராந்தி கிரகணகாலங்களிற் செய்யப்படும் தர்ப்பணமும் நைமித்திகதர்ப்பண மெனப்படும்.

மேற்கூறிய அங்கிடேதகாலங்கள் பிதிர்ச்சிராத்த த்திற்கு இல்லாததுபோல் தீர்த்த தர்ப்பணத்திற்கி ல்லை. அதனால் தீர்த்த விசேடங்களினும், கங்கையினும், மாளயபக்ஷத்தும், நிடேதகாலங்களினுந்திலதர்ப்பண ஞ்செய்யலாமெனக் கூறுவர்.

ஓர்பாத்திரத்து மார்ச்சனம் முதலிய செய்தசேட த்தால், தர்ப்பித்தலும், ஓர் தாரையாய் விடுதலும், ஓர் கையால்விடுதலும் குற்றமாம்.

கரையில் சுத்தபூமியில் தெற்குமுகமாகவிருந்து தருப்பையிட்டு இடதுமுழந்தாள் மடக்கிப் பூமியிலூ

ன்றி நேரேயிருந்து இரண்டுகைகையயுஞ் சேர்த்துத் தர்ப்பணஞ்செய்க.

அதுவன்றித் தாமிரம் முதலியவற்றால் பசுவின் காதுபோற் செய்யப்பட்ட பாத்திரத்தில் சலமெடுத்து இடதுகையில் வைத்துக்கொண்டுந் தர்ப்பணஞ் செய் யலாம்.

அத்தர்ப்பண சலத்தைப் பாத்திரத்திலேற்றுப் பின் சுத்ததேசத்தில் விடவேண்டும். அல்லது சுத்தபூ மியிற் சிறிய பள்ளஞ்செய்து அதினுந் தர்ப்பிக்கலாம்.

தர்ப்பிக்குங்கால் கோவின்கொம்பி னுனிப்பிரமா ணமேயன்றி அதிகசலந் தர்ப்பித்தல் குற்றமாம்.

மாதாவுக்கும், பிதாமகிக்கும், பிரபிதாமகிக்கும் மூன்றஞ்சலி.

சாபத்தினி மாதாவுக்கும், குருபத்தினிக்கும், இர ண்டஞ்சலி.

ஆத்மபத்தினிக் கஞ்சலியொன்றும், உச்சாரணம் மூன்றுமாம்.

ஏனையோர்க்குத் தனித்தனி யஞ்சலி யொன்று.

மாதாமுதல் எல்லோர்க்கும் தனித்தனி ஓரஞ் சலி யென்பாருமுளர்.

தருப்பை, எள்ளு, இவைகள் பொருள்கொடுத் தன்றி, ஒருவரிடத்தில் வாங்குதல் குற்றம். வாங்கின லப்பலன் அவரையடையும்.

வெண்மை, செம்மை, பொன்மை, வெண்கருமை முதலிய நிறங்களையுடைய வஸ்திரம் முறையே பிராமணர் முதலிய நால்வர்க்குந் தரித்தற்குரித்து.

சைவர்க்கு வெள்ளைவஸ்திரமே யுரித்து.

புத்திரனில்லாத விதந்துவும், தீர்த்தத்தில் தர்ப்பணஞ் செய்யலாம்.

கன்னிகைகளுக்குப் பிதாவின் கோத்திரமும், விவாகமானவர்களுக்கு நாயகன் கோத்திரமும், அவரது தர்ப்பணத்தும், சிராத்தத்தும் கொள்ளல்வேண்டும்.

மாதா இருக்கும்பொழுது, பிதாமகிக்கும், பிதா இருக்கும்பொழுது மாதாவுக்குந் தர்ப்பணமில்லை.

மகளிர்க்குத் தர்ப்பணஞ் செய்யுங்கால் தாந்தமா யுச்சரிக்கவேண்டும்.

சிராத்தாங்கதர்ப்பணம் சிலசாகிகட்குரித்து. அத்தர்ப்பணம் தரிசச்சிராத்தத்தில் முதலினும், ஆப்திகத்து மறுநாளுதயத்து நக்ஷத்திர மிருக்கும்போதும், பக்ஷமுழுதும் செய்யும் மாளயத்தும், இரணியச்சிராத்தத்தும், சபிண்டீகரணச் சிராத்தத்தும் உடனேயுஞ் செய்யப்படும்.

மறுநாட் செய்யுங்கால் ஸ்நானமானவுடன் சிராத்தத்தில் சேடித்த திலதருப்பைகளோடு செய்து சந்தியாவந்தனத்தின் பொருட்டுப் பின்னும் ஸ்நானஞ்செய்யவேண்டும்.

நித்தியதர்ப்பணம் காருண்ணிய பிதிர்சிரார்த்தத்தில் முன்னும், வருடச்சிராத்தத்தில் சிரார்த்தானந்தரம் வைசுவதேவஞ்செய்து பின்புசெய்யும் பிரமயக்ஞத்திலும் திலமில்லாமல் செய்யவேண்டும்.

பிரமயக்ஞஞ்செய்து வைசுவதேவஞ் செய்தலே சிட்டாசார மென்பாருமுளர்.

இச்சாகிகளுக்குக் கயாச்சிராத்தத்தும், தீர்த்தச் சிராத்தத்தும், சிராத்தாங்க தர்ப்பணமுண்டு.

தீர்த்தச் சிராத்தம் நைமித்திகமாதலின் அவர்க்கத்தர்ப்பணம் நைமித்திகச் சிராத்தாங்க தருப்பணமெனப்படும்.

ஒருநாளிற் செய்யும் மாளயபக்ஷ சிராத்தத்தில் தர்ப்பணம் மறுநாளுதயத்துச் செய்க.

சிராத்தாங்க தர்ப்பண மில்லாத சாகிகட்கு பிண்டத்தின்மேல் விடும் பாநீய தர்ப்பணமேயன்றி வேறில்லை.

தீர்த்தச் சிராத்தத்தும் கயாச்சிராத்தத்து மவ்வாறு. அவ்விருவரும் தீர்த்தத்தில் வந்தால், திலத்தோடு நிடேதகாலத்தும், விதிதகாலத்தும், தீர்த்த நைமித்திக தர்ப்பணஞ் செய்வர்.

மிருதியில், நாலாம்வருணத்தார்க்குக் கூறிய நித்தியதர்ப்பணம்.

சற்சூத்திரர்க்கு மத்தியானஸ்நானஞ் செய்தவுடன், விதிதமான ஆசனத்திருந்து தருப்பையோடுகூடிய இரண்டு கைகளினுலும் தேவர், மனுடர், பிதிரர் முதலியோர்க்கு ஸ்நாநுங்க தர்ப்பணத்தில் கூறியபிரகாரம் தர்ப்பிக்கும்படி மதனபாரிசாதக் கிரந்தத்தில் யோகயாக்கிய வல்க்கிய முதலியவசனங்கள் காட்டி, மந்திரமின்றி பிரமயக்ஞ நித்தியதர்ப்பணங் கூறப்படும்.

அங்கித்திய தர்ப்பணங்களாவன:—பிரமா, விட்டுணு, உருத்திரன், பிரசாபதி, தேவர்கள், வேதங்கள், இருடிகள், புராணுசாரியர், இதராசாரியர், சம்வத்சரம், சாவயவம், தேவஸ்திரீகள், அப்சரசுகள், அசுரர், நாகர், சமுத்திரங்கள், பர்வதங்கள், நதிகள், மனுடர்கள், எட்சர்கள், இராட்சர்கள், பிசாசர்கள், கருடர்கள், பூதங்கள், பசுக்கள், வனஸ்பதிகள், அவுடதங்கள், நால்வகையோகிகள் என்னும் இருதிணைப் பொருள்கட்குத் தேவதர்ப்பணமும்,

சனகன், சனந்தனன், சனுதனன், கபிலன், ஆசுரி, வோடு, பஞ்சசிகன், மரீசி, அத்திரி, அங்கிரா, புலஸ்தியன், புலகன், கிருது, பிரசேதா, வசிட்டன், பிருகு, நாரதன், என்னுமிவர்கட் கிருடிதர்ப்பணமும்,

வசுக்கள், உருத்திரர்கள், ஆதித்தியர்கள், மருத்துக்கள், அசுவினிகள் என்னு மிவர்கட்குச் சாமான்னிய பிதிர்தர்ப்பணமும்,

வசுவாதி நாமங்களோடு சேர்த்தேனும், சேர்ம லேனும், இன்னகோத்திரத்தை யுடைய எனதுபிதா இன்னதாசன், திருப்தியடையக் கடவனென்று விசேட பிதிர்தர்ப்பணமுமாகிய இவைகள்.

இங்கித்திய தர்ப்பணத்தில் பிதாவையுடையவன் கவ்வியன், வடவானலன், சோமன், யமன், அர்யமன், அக்கினிச்சுவத்தா, சோமபா, பர்கிஷதன், என்னும் தேவபிதிர்கட்குத் தர்ப்பணஞ் செய்யவேண்டும்.

பிரமாமுதலியோர் தர்ப்பணத்து ஏகவசனத்தில் திருப்பியதாமென ஏகவசனமும், துவிவசனத்தில் திருப்பியேதாமெனத் துவிவசனமும், வெகுவசனத்தில் திருப்பியம்தாமென வெகுவசனமும், உச்சரிக்கவேண்டும்.

உதாரணம்.

பிரமா—திருப்பியதாம்
அசுவினிகள்—திருப்பியேதாம்
வசுக்கள்—திருப்பியம்தாம் எனவரும்.

இருடிதர்ப்பணத்தும், பிதிர்தர்ப்பணத்தும், திருப்பியது எனவும் உச்சரிக்கலாம்.

தீர்த்தத்து ஸ்நானமானவுடன் மத்தியானத்து ஓர்காலிவ்வாறு தர்ப்பித்து பின் தீர்த்தச் சிராத்தஞ் செய்யவேண்டும்.

இவர்க்கு சந்தியாவந்தனம், வைசுவதேவம், பிரமயக்ஞம், இல்லாமையால் நித்திய பிதிர்தர்ப்பணமோ

ன்றே, திலத்தோடு செய்யுமிடத்து நைமித்திகமுமாம். இது தீக்ஷையில்லாதார்க் குரித்து.

அவருள் தீக்ஷையுடையார்க்குரியவிதி.

தீர்த்தத்தில் கங்காதரிசனமும், வபனமும், சசேலஸ்நானமுஞ்செய்து அதன்பின் ஆசமனமும், பிராணயாமமும், சகளீகரணமும் செய்து சங்கற்பித்து இட்டதெய்வங்களையும், குருவையும் நமஸ்கரித்து அதன்பின் சுத்ததேசத்தில் எட்டங்குலத்தின் கீழெடுத்த மிருத்திகையைக் கரையில் மூன்றுகூறாக வைத்து அதில் இருகூறெடுத்து அஸ்திர மந்திரத்தா லபிமந்திரித்து சலக்கரையிலிருந்து சலஞ்சேர்த்து ஓர்கூற்றைப் பாதமுதல் நாபியளவும் பூசிக்கழுவி ஏனையகூற்றைச் சிரசுமுதல் அவயவங்களிற்பூசி, நாபியளவுசலத்திலிறங்கி, காலாக்கினிக்குச் சமானமான பிரகாசத்தையுடைய அஸ்திரமந்திரத்தைத் தியானித்து ஸ்நானஞ்செய்ய வேண்டும். அது காய வாக்கு மனங்களிலுள்ள மலங்களைப் போக்குதலால் மலஸ்நானமெனப்படும்.

மேல் அஸ்திரசந்தியும், விதிஸ்நானமும் முறையே செய்யவேண்டும்.

அஸ்திரசந்தியாவது:—நாபியளவு சலத்தினின்று ஆசமித்து அஸ்திரசந்தியை நினைந்து அஸ்திரமந்திரத்தால், சிரசில் முக்காற் புரோட்சித்து, முக்கால் தர்ப்பித்து, அஸ்திரகாயத்திரியால் மூன்றுதர மர்க்கியங்கொ

டுத்து, அக்காயத்திரியைப் பத்துருச்செபித்தல். இது பொதுமையில் ஸ்நானங்க தர்ப்பணமுமாம்.

விதிஸ்நானமாவது:—முன் கரையில்வைத்த மூன்றுங்கூறுகிய மிருத்திகை மிகுதியை சம்மிதையா லபிமந்திரித்து எடுத்துக்கொண்டு நாபியளவு சலத்தினின்று அம்மிருத்திகையை இடக்கையில் வைத்து கிழக்கு, தெற்கு,வடக்காக மூன்றுபங்காய்ப் பகுத்து அம்மூன்றினும் முறையே அஸ்திரம், பஞ்சப்பிரமம், மூலமந்திரம், இவைகளால் ஓர்கால் அபிமந்திரித்து அஸ்திரத்தால் செபிக்கப்பட்ட மிருத்திகையை நாராச முத்திரையால், பத்துத்திக்கினுந் தெறித்து மூலத்தால் செபிக்கப்பட்ட மிருத்திகையை இரண்டு கூறுக்கி, ஓர்பங்கைச் சலத்திற்கரைத்து, சிவதீர்த்தமாய்ப் பாவித்து, கங்காஸ்மரணஞ் செய்து மற்றோர்பங்கைச் சிவதீர்த்த சலத்தோடு, தன்னைச் சூழவளைத்து பஞ்சப்பிரமங்களால் செபிக்கப்பட்ட மிருத்திகையை, சரீரமுழுவதும்பூசி, சிவபெருமானைத் தியானித்து சண்முகமுத்திரையால் கண், காது, இவைகளை மூடிக்கொண்டு, ஸ்நானஞ்செய்து, பின் சந்திரசூரிய மண்டலத்தின் மத்தியிலிருக்கின்ற சத்தியையுஞ் சிவத்தையும் இடதுகை வலதுகைகளில் முறையே பாவித்து, கும்பமுத்திரை பிடித்து சம்மிதையால் அபிஷிஞ்சனஞ் செய்தல்.

மலஸ்நானமும், விதிஸ்நானமுமாகிய வாருணஸ்நானஞ் செய்ததன்மேல், விக்கின சாந்தியின்பொருட்டுத் திக்குகளிலும், விதிக்குகளிலும் இருகையாலும்

அத்திரமந்திரத்தால் சலத்தை யிறைத்துக், கரையி லேறி, கங்காசமாபனமும், கோதானமும் செய்து, உல ர்ந்த வஸ்திரந்தரித்துக் கைகால் சுத்திசெய்து, ஆசம னஞ்செய்து, பஸ்மஸ்நானமும், மானசஸ்நானமும், அதன்மேல் அநுட்டானமுஞ் செய்யவேண்டும்.

கங்காதரிசனம், சமாபனம், கோதானம், இவை மேல் ஸ்நானவிதியுட் கூறப்பட்டன.

பஸ்மஸ்நானத்தில் அபிமந்திரித்த பஸ்மத்தை திவ் விய முத்திரையா லெடுத்து, அஸ்திரமந்திரத்தால் சிர சுமுதல் பரிசிப்பது மலஸ்நானமாக, வாருணஸ்நான த்தை மலஸ்நானமென்ற தென்னேயெனின், வைதிக த்து மார்ச்சனம், அகமருடணம், முதலியன சந்தியா வந்தனத்திற்கும் ஸ்நானத்திற்கும் அங்கமானாற்போல, மலஸ்நானமும் பஸ்மஸ்நானத்திற்கும் வாருணஸ்நானத் திற்கும் முதலில் அங்கமாயின வென்க.

இவ்வஸ்திர சந்தியும், ஸ்நானவிதியும், நயிட்டிகன் பவுதிகனென்னும் இருவகைப் பிரமசரியர்க்கும், கிர கத்தர்க்கும் வித்வான், தபசி, விவிதிச்சு என்னும் மூவகைச் சந்நியாசியர்க்கு முரிய வென்பர்.

நிட்காமியமாய், பாபநீக்கத்தின் பொருட்டு நயி ட்டிகன் பவித்திரந் தரித்தும், சந்நியாசி பவித்திரந்தரி யாதும், சங்கற்பஞ் செய்யவேண்டும்.

காமியாதிகாரிகளான சாதகர் சித்திக்குப்பின் முத்தி விரும்பினராதலின் அவரொழிந்த சமயிக்கும் பரிபாகத்துக்கேற்ற தீட்சையுடைய விசிட்டசமயி, புத்திரன், சாதகன், ஆசிரியன், இவர்கட்கும், நித்தியம் போல நிட்காமிய சங்கற்பமே புரித்து.

இச்சைவழிச் செய்வது காமியம். விதிவழிச்செய்வது நித்தியம். வைதிகநூலாரும், தேவர்க்கும், முனிவர்க்கும், பிதிரர்க்கும், நாடோறுஞ் செய்யுங் கடன்மூன்றையும் நித்தியமென்பர்.

அனுட்டானத்தில் காயத்திரிசந்தி சங்கியாசிக்கின்று. நைட்டிகன் பௌதிகனென்னும் இருவகைப் பிரமசரியர்க்கும் கிரகத்தர்க்கும் காயத்திரிசந்தி உரித்து.

நைட்டிகனுக்குத் தேவபிதிர் தர்ப்பணமேயன்றித் தன்பிதிர் தர்ப்பணமில்லை. ஆதலின், மரித்த பிதாவினையுடைய பௌதிகரும், கிரகத்தரும் பிதிர்தர்ப்பணஞ் செய்யவேண்டும். ஈண்டு நைட்டிகனென்றது ஞானசாரம் பூண்டானை; நைட்டிக விரதமாத்திரமுடைய பிரமசரியனை யன்று: விரதமாத்திரமுடைய நைட்டிகற்கு பிதிர்தாப்பணமும் பிதாமுதல் முப்பகுப்பான பார்வணச்சிராத்தமும் நூல்களிற் கூறப்படும்.

இவர்க்கு மேற்கூறிய சந்தியா வந்தனத்திற்கு வேறாய நைமித்திக பிதிர்தர்ப்பணம், கௌரவதோடத்திற் கிடமாதலின் ஈண்டு விலக்கப்பட்டது.

. . ஈண்டு, இவர் அநுட்டானத்தில் தேவர், முனிவர், மனுடர், இவர்கட்கும், திலத்தோடு பிதிரர்க்கும், விதிப்படி தர்ப்பித்து, அநுட்டானம் முடித்து, சமஸ்கார மில்லாதவர் பொருட்டுக் கரையில் தருப்பையோடுசேர்த்து,ஓரஞ்சலிவிடுத்துச், சிவபூசையும் தலதரிசனமும், தீர்த்தச் சிராத்தமும் செய்து, சிராத்தாங்க தர்ப்பணம் செய்யவேண்டும். அநுட்டான தர்ப்பணத்தில் நாமம் குலம் இவைகளில்லை. அஞ்சலிசலதானம்.

அச்சிராத்தாங்க தர்ப்பணமாவது:—பிதிரர்களது கணகுலமும்,தீட்சாநாமமுஞ் சேர்த்துச் சங்கற்பஞ்செய்து ஈசர், சதாசிவர், சாந்தரென்னும் விசேடபிதிர்களையும், ஸ்கந்தசண்டகணுதீசர் முதலிய விசேடபிதிர்களையும், தெற்குநுனியாய் இடப்பட்ட தருப்பையில் ஆவாகனஞ்செய்து, மகேசரூபபிதா, சதாசிவரூபபிதாமகன், சாந்தரூப பிரபிதாமகன், என நிருவாணதீக்கிதரும்; கந்தரூபபிதா, சண்டரூபபிதாமகன், கணுதீசரூப பிரபிதாமகனென இருவகைச் சமயிகளும் சம்பந்தித்து, அச்சம்பந்தத்தோடு தீட்சாநாமமுச்சரித்து, கணபசுதாவென்று தனித்தனி பிதாமுதலியோர்க்கும்,மாதாமகன் முதலியோர்க்கும் கணமின்றித் தீட்சாநாமங்களோடு மாதா முதலியோர்க்கும், மாதாமகி முதலியோர்க்கும், திலத்தோடு பிதிர்தீர்த்தத்தால் தனித்தனி மூன்றஞ்சலியாவது ஓரஞ்சலியாவது தர்ப்பித்து, ஆசாரியன், ஆசாரியபத்தினி, குரு, குருபத்தினி, சகி, சகிபத்தினியாகிய இவர்கட்குத் தர்ப்பிப்பது. குரு, சகி, முதலி

யோரில் தன்சாதியர்க்கே தர்ப்பணம். தீட்சாநாமந்தெ ரியாதவர்கள் சிவீபூதர்களாய்த் தீட்சாநாமமுடைய வெனது பிதாவாகிய கணனெனச் சேர்க்கவும்.

---

## தீர்த்தச்சிராத்தவிதி.

---

சிராத்தம்:—நித்தியம், நைமித்திகம், காமியமென மூவகைப்படும். அவற்றுள் நைமித்திகம்,காலம், பாத் திரம்,தேசம், என்னும் பகுப்பால் மூவகைப்படும்.

இருவகை யயனம், தையமாவாசை, ஆடியமா வாசை, சூரியகிரகணம், சந்திரகிரகணம், குஞ்சரச்சா யைமுதலிய விதிதகாலம்பற்றிச் செய்வது, காலநிமித் தமெனவும்; சற்பாத்திரமான பிராமணன் கிடைத்த பொழுது உடனே செய்வது பாத்திர நிமித்தமென வும்; காசி, குருக்ஷேத்திரம், பிரபாசம், புட்கரம், விரசை, பிரயாகை, முதலிய புண்ணியதேசங்களிற் செய்வது தேசநிமித்தமெனவுங் கூறுவர். சிரத்தையி னுற்செய்வது சிராத்தம்.

இம்மூவகையுள் திவ்வியதேசங்களில் போகமோ க்ஷங்கட்குக் காரணமான புண்ணியதீர்த்தநிமித்தஞ் செய்யும் சிராத்தம் தீர்த்த நைமித்திகச் சிராத்தமென ப்படும்.

சிராத்தாதிகாரிகளால், பிதிர்கள் புண்ணிய உலக த்தையடையும்பொருட்டிச் சிராத்தம் செய்யப்படும்.

. புத்திரனும், புத்திரனில்லாவிடத்துப் பௌத்திரனும், அவனில்லாவிடத்து பிரபௌத்திரனும், அவனில்லாவிடத்துத் தத்தபுத்திரனும், புத்திரனில்லா விதந்துவும், என இவரதிகாரிகள்.

இத்தீர்த்தச் சிராத்தம் விதிதகாலங்களிலேயன்றி, நிடேதகாலங்களினுஞ் செய்யலாம். விதிதகால்ங்களாவன:—மேற்கூறிய அயனம், குஞ்சரச் சாயைமுதலியன. நிடேதகாலங்களாவன:—சன்மநட்சத்திரம், மலமாசம், சாயான்னம், உபாகன்மம், முதலியன.

குஞ்சரச் சாயையாவது, கன்னியிராசியில் சூரியன்வருங்கால், சந்திரன் மகநட்சத்திரத்தோடு சேர்ந்திருக்கும்பொழுது, திரயோதசிசேர்ந்தது. அதுவன்றிச் சூரியன் கன்னியிராசியில் வரும்பொழுது, அத்தநட்சத்திரமும் அமாவாசையும் சேர்ந்துவந்தாலும், கசச்சாயையெனப் போதாயனர் கூறினர்.

இச்சிராத்தம், நிடேதகாலங்களினும், சாயான்னத்தும், செய்யலாகாதெனச் சூலபாணி கூறினர். கிரகணம், சங்கிராந்தி, தீர்த்தச்சிராத்தம், இவையல்லாவிடத்துச், சாயான்னத்துச் செய்யின் இராக்கதர் கிரகிக்கின்றனரென, விட்டுணு கூறுதலின், அதை அன்னியர் அயுத்தமென்பர்.

தெரியாதுவந்த தீர்த்தத்தில், அந்நிடேதங்களும், அங்கீகரிக்கலாமென நாகேசுரர் கூறினர்.

விருத்திமுதலிய காமியச்சிராத்தங்களும், நிஷே கம் முதலிய கன்மாங்கச் சிராத்தங்களும், சங்கிராந்தி முதலிய காலவிசேடங்களில் விலக்கப்படுமென்றும்; விிதகால நிடேதகாலங்களில், வாருடிகம், மாளயம், என்னும் நித்தியச் சிராத்தங்களும், ஏகோதிட்டம், சபி ண்டீகரணம் முதலிய நைமித்திகச் சிராத்தங்களும் செய்யலாமெனக் காத்தியாயனர் கூறினர்.

இவ்வாறன்றி நாடோறுஞ்செய்யும் ஆதித்தியம் நித்தியச் சிராத்தமெனவும், வாருடிகம் நைமித்திகச் சிராத்தமெனவும் சிலமிருதிகளினும் ஸ்ரீகாமிகத்துங் கூறப்பட்டன.

வாருடிகத்தும், தீர்த்தநைமித்திகத்தும், கிரக ணம், சங்கிராந்தி முதலிய சிராத்தங்கள்வந்தால் பிர தானநியாயத்தால் அந்நைமித்திகங்கள் செய்யவேண்டு வதில்லை. அச்சிராத்தங்களே அமையும்.

தைர்த்திகத்து வாருடிகம் வந்தால், தைர்த்திகம் முன்செய்து வாருடிகம் பின்செய்யவேண்டும்: ஈண் டுத் தைர்த்திகம் பிரதானமாதலின்.

பிராமணருள் வைதிகர் வைதிகமாயும், சைவர் வைதிகதாந்திரிகமாயும், வேதானதிகாரிகள் புராணயுக் தமாயும், அவருள் தீக்ஷையுடையவர் தாந்திரிக மாத்தி ரமாயுஞ் செய்யக்கடவர்.

இராத்திரி போசனஞ்செய்யாது சம்யமமுடைய வனாய், உதயத்தில் தீர்த்தத்தில் வந்தவன் அன்னச்சி

ர்த்தமத்தினத்தும், போசனஞ்செய்தவன் அன்று சம யமஞ்செய்து, மறுநாளுதயத்து முகூர்த்தத்தின்மேல், பிரதமயோக்கிய காலத்தும் செய்யவேண்டும்.

ஆமச்சிராத்தம் ஏமச்சிராத்தமாயின் இராத்திரி போசனஞ்செய்து, வந்ததினத்து மிரவினுஞ் செய் யலாம்.

வந்ததினத்தில் மானுடாதிகளால் விக்கினம் நேரி ட்டால் மறுநாட்செய்யலாம். அதற்குப் பிராயச்சித்த மில்லை. சிராத்தஞ் செய்யாதுபோனல் சிராத்தலோப முண்டு.

தீர்த்தவாசியாகிய பிராமணனைப் பரீக்ஷைபண் ணும லங்கீகரித்து, பாதித்தியதோடமுடையவனை நீக் கிவிடவேண்டும்.

பிராமணன் வீடில்லாவிடத்தும், பரிசாரகனில் லாவிடத்தும், தீர்த்தசமீபத்தில் ஆமச்சிராத்தமும், ஏம ச்சிராத்தமும், வீடும் பரிசாரகனுமிருந்தால் அன்னச்சி ராத்தமுஞ் செய்யவேண்டும்.

இத்தீர்த்தச் சிராத்தத்திற்கு அருக்கியம், ஆவா கனம், துவிசாங்குட்டநிவேசனம், திருப்தி, விகிரம், அக்கினிகரணம், முதலிய கிரியைகளில்லை.

ஆமச்சிராத்தத்தில் திருப்தி, அங்குட்டநிவேச னம், ஆபோசனம் முதலிய கிரியைகளில்லை. ஆமத் தாற் பிண்டமுண்டு. ஆமமில்லாவிடத்து, ஏமச்சிரா

த்தஞ் செய்யவேண்டும். ஏமச்சிராத்தத்தில் பிண்டநி யமமில்லை.

திருப்தி தத்தஞ்செய்ததன்மேலன்று, போசனத்தின் பின்னென்றும்; அக்கினிகரணம், அங்குட்டநிவேசனம், விகிரம், அவசியக்கிரியைகளென்றும்; அருக்கியமாவாகன மிரண்டுமே, தீர்த்தச்சிராத்தத்தில் நீக்கப்பட்டன வென்றும்; மைதிலேய சித்தாந்திகள் கூறுவர்.

அக்கினிகரணமாவது:—தேவபாகத்தும், பிதிர் பாகத்தும், அன்னமெடுத்து லவணம் முதலியநீக்கி, அக்கினிகன் அக்கினியிலேயும், அனக்கினிகன் பிராமணனத்தத்திலேயும், அங்குட்ட நிவேசனத்தின்முன் ஓமஞ்செய்வது.

அங்குட்டநிவேசனமாவது:—தத்தஞ்செய்யுமுன் இது அன்னம் இது சலமென்று அன்னத்தையும், சலத்தையும், உபகரணங்களையும், முழந்தாளுக்குட்பட்ட கையுடையவனுய், துவிசனது அங்குட்டத்தால், தான் தீண்டிக்காட்டுதல்.

விகிரமாவது:—சிராத்தத்தில் புசிக்கும் பிராமணர்முன், அவரிடப்பக்கத்து தெற்குநுனியாயிடப்பட்ட தருப்பையிற் சமஸ்காரமில்லாமல் இறந்தவர்பொருட்டு அன்னமிடுவது. இது திருப்தியனந்தரஞ் செய்யப்படும்.

திருப்தியாவது:—போசனத்தின்பின் நன்கு புசித்தீராவென்று வினவுவது.

ஆமச்சிராத்தத்தில் சக்தன் போசனத்திற்கு நாலுபங்காவது இரண்டுபங்காவது ஆமமும், அசக்தன் போசனசமமாமமுங் கொடுப்பன்.

ஏமச்சிராத்தத்தில், சக்தன் போசனத்திற் கெட்டுப்பங்காவது நாலுபங்காவது ஏமமும், அசக்தன் போசனசமமுங் கொடுப்பன்.

சற்பாத்திரமான பிராமணனில்லாவிடத்து அன்னம், ஆமம், ஏமமிவைகளால் சடகச்சிராத்தஞ் செய்யலாம்.

சடகச்சிராத்தஞ் செய்யுங்கால் எல்லாக்கிரியைகளும் தானே மந்திரஞ்சொல்லிச் செய்து, அங்குட்டநிவேசனமும் தன்கையாற் செய்யவேண்டும்.

சடகத்தன்னத்தைப் பசுவிற்கேனும் அக்கினிசலமிவைகளிலேனு மிட்டு ஆமத்தையு மேமத்தையும், காலாந்தரத்தில் வேறிடத்திருக்கும், சற்பாத்திரமான பிராமணனிடத்திற் கொடுக்கவேண்டும்.

தீர்த்தச் சிராத்தத்தில், பிண்டத்தைச் சலத்திலன்றி வேறிடத்து விடலாகாது.

சூத்திரனெப்பொழுதும் ஆமச்சிராத்தமே செய்யவேண்டும். ஆமமில்லாவிடத்துத் தீர்த்தங்களில் ஏமச்சிராத்தமும் செய்யலாம்.

ஆமச்சிராத்தம் பிராமணர் பூர்வான்னத்தும், சூத்திரர் குதபகாலத்தும் செய்யவேண்டும்.

அநேகதீர்த்தங்களையுடைய காசியாதித் தலங்களில் வியாபகதீர்த்தத்தை யுத்தேசித்து ஒருதீர்த்தத்தில் தீர்த்தச்சிராத்தம் செய்யவேண்டும்: முக்கியமில்லாத வஸ்துக்களது சம்பந்தத்தை முக்கியவஸ்து தடுக்கின்றதென்னும் நியாயத்தால்.

சிலர் எல்லாத்தீர்த்தங்களையு முத்தேசித்து, ஒரு நிமித்தச்சிராத்தம் தந்திரமாகச் செய்கின்றேனென்று சங்கற்பித்துஞ்செய்வர்.

தீர்த்தச்சிராத்தம் செய்யச் சக்தியில்லாதவன், பிண்ணாக்கு, யவைமா, யவைநொய்ப்பாயசம் இவைகளிலொன்றால் பிண்டமும்போடலாம். அதற்குஞ் சக்தியில்லாதவன் தர்ப்பணமும் உபவாசமுஞ் செய்யவேண்டும்.

கிருதச் சிராத்தத்திற்கும் தீர்த்தச் சிராத்தத்திற்கும் பிதாமுதல் ஆறுபார்வணமாதலிற் றெய்வதங்களும் அறுவரேயாம்.

பிதாமுதல் மூவரும், மாதாமகன் முதல்மூவரும், ஆகிய அறுவரோடு, அவரவர்பத்தினிகளைச் சேர்த்து, அவர்க்குப் பார்வணமின்றிச் செய்தலால் தீர்த்தச்சிராத்தத்தில் பார்வணமாறாயின.

கயாவிற் றெய்வதங்கள் பன்னிருவர். தீர்த்தசிந்தாமணியில் பிதாமுதல் மூவரையும், அவரவர் பத்தி

னிகளையும், மாதா மகன் முதல் மூவரையும், அவரவர் பத்தினிகளையும், தனித்தனிகூறிப் பன்னிருவரெனக் காட்டப்பட் டிருக்கின்றன.

தீர்த்தச்சிராத்தம் நைமித்திகம், கயாச்சிராத்தம், நித்தியமென்பது மிருதிநூலார்மதம்.

மூன்றுவர்க்கங்களாய பிண்டபாகி லேபபாகிகள் நால்வர்க்கும் தனித்தனி பாகசம்பந்த முடையரான விசுவதேவர்கள் நால்வரோடு தெய்வதங்கள் பதினாறெ ன்பாருமுளர்.

பிதாமுதல் மூவர் பிண்டபாகிகளும், பிரபிதாமக னுடைய பிதாமுதல் மூவர் லேபபாகிகளும், மாதா மகன்முதல் மூவர்பிண்டபாகிகளும், விருத்தப்பிரமாதா மகனுடைய பிதாமுதல் மூவர் லேபபாகிகளுமாவர். அதனால் அவரவர் பாகசம் ரக்ஷகரான விசுவதேவர்க ளும் நால்வரெனப்பட்டனர். விசுவதேவர் தேவச்சாதிய ரில் ஓர்குழு.

நிகமோத்தியில் கயாச்சிராத்தத்தும் மாளயத் தும் விருத்திச்சிராத்தத்தும் அங்வட்டகையினும் தெய் வதங்கள் பன்னிரெண்டெனக் கூறப்பட்டன. அத னாற் கயாபத்ததி வியாக்கியானத்தும் பதினாறென வரை யறுக்கப்பட்டன.

அங்வட்டகையாவது:—மார்கழி, தை, மாசி, பங் குனி இந்நான்குமாசங்களில் கிருட்ணபக்ஷத்துச் சப்

தமி, அட்டமி, நவமி மூன்றினும் அடுத்தடுத்துத் தனித்தனிசெய்வது.

கயாவில் தீர்த்தநிமித்தமாகப் பல்குநதியில் ஓர் தீர்த்தச்சிராத்தஞ்செய்து, மேல் பிரேதசிலையினும் பல்குமுதலிய தீர்த்தங்களினும் பதினாறு தெய்வதங்களையுடைய கயாச்சிராத்தஞ் செய்யவேண்டும்.

தீர்த்தச்சிராத்தம் வேறுகயாச்சிராத்தம் வேறென்பது, தீர்த்தசிந்தாமணியில், கயாவையடைந்ததன் மேல் அருக்கியம் ஆவாகனமில்லாத நிமித்தச்சிராத்தஞ்செய்கவென்றும், பின் பிரேதசிலைமுதலிய விடங்களில் பார்வணமே செய்கவென்றும் முன்போல விசேடணமின்றிக் கூறப்பட்டதனால் வேறென்பதும், அருக்கியம் ஆவாகனம் முதலிய கிரியைகள் எல்லா மிதற்குண்டென்பதும் பெற்றாம்.

கயாவில் நிமித்தமாய்ச்செய்வதும், வேறிடங்களில் நிமித்தமாய்ச்செய்வதும், காலவிசேடங்களிற் செய்வதும் குருக்ஷேத்திரத்தில் சரஸ்வதிமுதலிய தீர்த்தங்கடோறுஞ் செய்வதும், தீர்த்தச்சிராத்தமேயாம்.

நைமிசத்தில் நைமிசப்பிரயாகையில் வபனமும், சக்கரதீர்த்தத்தில் ஸ்நானமும், நைமிசகயாவில் பிண்டமும், செய்யவேண்டும்.

குருக்ஷேத்திரமும், நைமிசமும், பிதிர்ச்சிராத்தத்திற்கு முக்கியமாதல் பற்றி, அங்கு யாத்திரைசெய்

வோரால் நாடோறுந் தனித்தனி சிராத்தஞ்செய்யப் படும். அதுவும் தீர்த்தச்சிராத்தமே யென்பதுதோன்ற, அவை வேறுகூறப்பட்டன.

சிராத்தத்தில், மந்திர செபக்கிரமத்தில், பாரதீய செபத்தில், குருக்ஷேத்திரப் பிராமணர்கட்குத் தோத்திரஞ் சொல்லப்பட்டது.

ஸ்ரீகாமிகத்து, பிராமணர்க்கு அக்கினிமுதலிய சாதனங்க ளில்லாவிடத்தும், கிரகணம் தீர்த்தச்சிராத்தமிவைகளிலும், ஆமச்சிராத்தஞ் செய்கவென விதிக்குமுகத்தால், தீர்த்தச்சிராத்தமும், சிராத்தபலன்கூறி, கயாவில்செய்யுஞ் சிராத்தம், அநந்தபலத்தைத் தருமென விதிக்குமுகத்தால் கயாச்சிராத்தமுமாகிய இவ்விரண்டுங் கூறப்பட்டன.

பிதாமுதலிய பிதிரரை நல்லுலகடையச் செய்யும் சிரத்தையுடைய புத்திரன், குருக்ஷேத்திரதானமும், காசிமரணமும், பிரயாகைமுண்டனமும், பிரமஞானமுமாகிய விந்நான்கும், தன் பிரயோசனங்களாதலால், பிதிரர்கள் பிரயோசனத்தின்பொருட்டு நவாரண்ணியங்களுட் சிறந்த தேநுகாரண்ணிய மென்றும், பிரமாரண்ணியமென்றும், தன்மிபிருட்ட மென்றுஞ் சொல்லப்படும் கயாவை, அடையவேண்டும்.

அப்புத்திரன் இருபத்தொரு குலத்தையும் நல்லுலகடையச் செய்கின்றான். அவன் அப்பிதிரர்க்கு உரிமையுடையனாதல்,

"தம்பொருளென்பதம்மக்களவர்பொரு
டந்தம்வினையான்வரும்."

என்னுந் திருக்குறளானும் பகீரதச்சக்கிரவர்த்தியின் சரிதத்தானு மறிக.

இத்திருக்குறளில் தம்புதல்வரைத் தம்பொருளென்றும், அவரன்னராதற்கு அப்புதல்வர்பொருள், தந்தை, தாயராகிய தம்மைநோக்கி, அவர்செய்யும் நல்வினையால் தம்பால் வருதலினென ஏதுவுங்கூறப்பட்டது. அவர்பால் வருதலாவது:—புண்ணியமிகுதியாற்றேவராயும், பாவமிகுதியால் நிரயராயும் சுவர்க்கநிரயங்களின் முறையே இன்பதுன்ப நுகருங்காலும் அவையநுபவித்துத் தொலைந்தவழி ஆண்டு உயர்வுதாழ்விற்குக் காரணமாய்ச் சேடித்த் வினைவழியாயேனும் முற்செய்த இருவினை வழியாயேனும் பூமியில் பிராமணர் முதலிய உயர்ந்த யோநிகளினும் புலையர் நாய் முதலிய விழிந்த யோநிகளினும் பிறந்திருக்குங்காலும், அப்புத்திரர் செய்யுந் தர்ப்பணம், சிராத்தம், பிண்டம் முதலியவற்றைச் சந்திரமண்டலத்தின்கண் ணுளராய தேவச்சாதியரேற்று, நிரயத்தும் அவர் பிறந்திருக்கும் யோநிகளினுங் கொடுப்பரென மிருதிபுராணங் கூறியவழி வருதலாம்.

இருபத்தொரு குலமன்றி தந்தை, தாய், மனையாள் சகோதரி, புத்திரிகணவன், பிதாவின்சகோதரி, மாதாவின்சகோதரி என்னு மெழுவர்கோத்திரங்களும்

இவ்வெழுகோத்திரங்களுள் தந்தைவழியில் இருபத்து நான்குகுலமும், தாய்வழியில் இருபஃதுகுலமும், மனையாள்வழியில் பதினாறுகுலமும், சகோதரிவழியில் பன்னிரண்டுகுலமும், புத்திரிகணவன்வழியில் பதினொருகுலமும், பிதாவின்சகோதரிவழியில் பத்துக்குலமும், மாதாவின்சகோதரிவழியில் எட்டுக்குலமும், ஆகிய நூற்றொருகுலமும் நல்லுலகடைகின்றனவென வாயுபுராணத்திற் கூறப்படும்.

மரித்த நாலாநாளினும், ஐந்தாநாளினும், ஒன்பதாநாளினும் செய்யும் நவச்சிராத்தமும், பதினொராநாளினும், நாற்பத்தைந்தாநாளினும் ஆறுமாசத்தும், வருடமுடிவினும் செய்யும் ஏகோதிட்டங்களும், மாசமுடிவிற் செய்யுமாசிகங்களும், பிரதிதினஞ்செய்யும் சுரோதகும்பங்களும், வெவ்வேறுசெய்து வருடாந்தத்திற் சபிண்டீகரணஞ் செய்பவன் அவ்வருடத்தில் தீர்த்தச்சிராத்தம், கயாச்சிராத்தம், மாளயமிவை செய்யலாகாவெனக் காருடபுராணத்தும் மிருதிகளினும் கூறுதலால் தீர்த்தச்சிராத்த கயாச்சிராத்தங்கள் செய்யலாகாது.

ஸ்ரீகாமிகத்தில், நவச்சிராத்தம், திரயோதசி, மகநக்ஷத்திரம் இவைகளிற் செய்யின் புத்திரநாசத்தைப் பண்ணுமென்றும், நந்தை, சதுர்த்தசி, சன்மத்திரயம் இவைகளில் நவச்சிராத்தம் பண்ணலாகாதென்றும் கூறப்படும்.

பன்னிரண்டாநாளில் சபிண்டீகரணஞ் செய்தவன் அம்மூன்று சிராத்தமுஞ் செய்யலாம்.

கயாச்சிராத்தம், அதிமாசம், சன்மநக்ஷத்திரம், குருசுக்கிரர்களது அத்தமனம், சிங்க இராசியில் வியாழமிருக்குங்காலம் இவைகளிற் செய்யலாகாது.

தை, மாசி, பங்குனி, புரட்டாசி, மார்கழி இம்மாசங்களிலும், சந்திரசூரிய கிரகணங்களிலும்,கயாவில் பிண்டமிடுதல் விசேடமெனப்படும்.

கயாச்சிராத்த மொருவனுக்கு, ஆயுள், சம்பத்து, புத்திரவிர்த்தி இவைகளைக் கொடுப்பதேயன்றி பிதிர்களை நிரயத்தும், பிதிர்லோகத்தும், தேவருலகத்தும், நின்று எடுத்து அவரவர்க்கருகமான மேலான உலகத்தை அடையச்செய்யும்.

மனையாளோடு யாத்திரைசெய்பவன், சிராத்த காலத்துப் பிரமசரியமுடையனு யிருத்தல்வேண்டும்: புணர்தல் அதிகதோடத்திற் கிடமாதலின். தீர்த்தச்சிராத்தத்து மவ்வாறே.

பஞ்சக்குரோச விஸ்தீரணமான பிரமாரண்ணியத்து, கயாசிரம் ஒருகுரோசம்; அதில் கயாக்ஷேத்திரம், அரைக்குரோசம்; அதில் பல்க்குநதியும் பிண்டமிடுதற்குரிய மகிமைபொருந்திய உருத்திரபதம், விட்டுணுபதம், பிரமபதம், கச்சியபபதம், பஞ்சாக்கினிபதம், இந்திரபதம், அகஸ்தியர்பதம், இரேவபதம், கார்த்திகேயபதம், கௌஞ்சபதம், மாதங்கபதம், முதலியபதங்களுமிருக்கின்றன. இவைகளி லெல்லாம் பிரேதசிலை

யில் சிராத்தஞ் செய்ததன்மேல் பிண்டமிட்டு அட்சய வடத்தும் பிண்டமிடவேண்டும்.

இவைகளுள் உருத்திரபதத்தில், ஸ்ரீராமர் தசரதரின்பொருட்டு, பிண்டமிடுங்கால் தசரதர் சுவர்க்கத்தினின்றுமிழிந்து அதைக்கைநீட்டிவாங்கி அதனால் திருப்தியடைந்து, நீபூமியிலிருந்து பிராமணர்களையும், பிரசைகளையும் பரிபாலித்து, அயோத்தியில்வசிக்கும் எல்லாப்பிராணிகளுடனும் வைகுண்டபதம் அடைகவென்று அவர்க்கு ஆசீர்வதித்து, அவர் சுவர்க்கம்விட்டு உருத்திரலோகமடைந்தனரென்று மகாபாரதவசனங்காட்டி, நாகேசுரர் உருத்திரபாதத்துப் பிண்டவிசேடங்கூறினர். அத்தலத்து ஸ்ரீபிதாமகேசுரர், ஸ்ரீபிரபிதாமகேசுரர் முதலிய இலிங்கங்களும் கயாவைப் பாதுகாக்கின்ற ஆதிகதாதரராகிய ஸ்ரீவிட்டுணுமூர்த்தமும் இருக்கின்றன; அதனால் விட்டுணுபதமும் அதிக விசேடமுடையது: அதுவன்றி ஏனையபதங்களினும் பிண்டமிடல்வேண்டும். இப்பதங்களில் சந்நியாசிகளும், தண்டத்தால்பரிசித்துப் பிதிர்களை ஸ்மரணஞ்செய்வர். விட்டுணுபாதத்தில், புத்திரரில்லாதவர்கள் தயிர் அன்னத்தாற் றிலமின்றி ஆத்மபிண்டமுமிடுவர்.

கயாச்சிராத்தம் பிரமகத்தியாதி மகாபாதகங்களைப்போக்குதலால் பதிதனுக்குச் சிராத்தமின்றாயினும், அவனுக்குரியர் பிண்டமிடலாமெனத் தீர்த்தசிந்தாமணியில் விதிக்கப்பட்டது. அப்பதிதராவார், குருபத்தி

னியைப்புணர்தல், சுராபானஞ்செய்தல் முதலிய மகா பாதகங்களால் பதிதரானவரென்று அந்நூலில் விதந் துகூறுதலா லிழிந்தமதத்திற் புக்குத்தாழ்வு அடைந் தவர்களன்றென்க.

சீவிதபிதாவை யுடையவன் கயாவில் பிதாவநும தியின்றிச் சிராத்தஞ்செய்யப் போகலாகாது; பிதா அநுமதிப்படியேனும் மார்க்கவசத்தாலேனும் போவா னுகின் எசமானுடைய பத்தினியென்று மாதாவுக்கு ஒரு ஏகோதிட்டஞ்செய்துபின் பார்வணமுஞ் செய்ய வேண்டும். அவ்விடத்து பிதிர்பத்தினியென்று செய்க என்பாருமுளர்; அன்னியர் அதை அயுக்தமென்பர்.

கயாவல்லாத தீர்த்தங்களில் மாதாவுக்கு ஒரு ஏகோதிட்ட மாத்திரமேயன்றி மாதாமுதலியோர் பார் வணநியம மின்று.

கயாவில் மாதாவின் சிராத்தத்தில் பிதாமகி சீவி தளாயின் பிரபிதாமகிமுத லிருவர்க்குப் பார்வணமும், பிதாமகி, பிரபிதாமகி இருவரும் சீவிதராயின் அவர்மே லிருவர்க்குப் பார்வணமும், பிதாபார்வணத்தில் பிதா மகன் சீவிதனுயின் அவன்பிதா, பிதாமகனிவர்கட்குப் பார்வணமும், பிதாமகன், பிரபிதாமகன் இருவரும் சீவி தராயின் பிரபிதாமகன்பிதா, பிதாமகன் இவர்கட்குப் பார்வணமும் செய்யவேண்டும். மாதாமகன் பார்வண த்தில் பிரமாதாமகன், விருத்தப்பிரமாதா மகன் இவர் முதலியோர்க்கும் அப்படியே.

.பிறன்பொருட்டுக் கூலிவாங்கிக்கொண்டு கயாவுக்குச் செல்கின்றவன் எசமானுடைய பிதிர்பார்வணங்கள் முன்செய்து, தன்பிதிர்பார்வணம் பின்செய்ய வேண்டும்.

விதவை தன்னுடைய கணவன் பார்வணமாத்திரஞ் செய்யவேண்டும்.

மாமன் சீவிதனுயின் அவனுடையபிதா, பிதாமகன் இவர்கட்குப் பார்வணமுண்டு: அவனுடைய மாதாமகன் முதலியோர்க்குப் பார்வணநியமமின்று.

பிதாமாதா இவர்கள் மரித்ததிதி ஒன்ருகின் பார்வணமுமேகம் பிண்டமுமொன்று: திதிவேருயின் வேறு செய்யவேண்டும். அநேக சாபத்தினிமாதா, பிதாவின் சகோதரர் இவர்கட்குப் பார்வணமுமேகம்; பிண்டமுமொன்று; அருக்கியம் வெவ்வேறு: சிலர் பிண்டமும் வேறென்பர்.

ஆசாரியன், குரு, சீடன், சகி, மாதுலன், ஞாதி, இவர்பத்தினி, புத்திரர், புத்திரி, சகோதரி, தன்வம்சத்திலுள்ளவர்கள் இவர்கட்கெல்லாம் கயாவில் பிண்டமுண்டு. முட்டியினளவும், குக்குடாண்டத்தினளவும், நெல்லிக்காயினளவுமெனப் பிண்டபரிமாணங் கூறப்படும்.

சைவர்கள் வைதிகதாந்திரிக வல்லவரான ஒரு சிவாசாரியரைக்கூட யாத்திரைசெய்வித்து, சிராத்தபத்ததிமுதலிய விதிப்படி, தீர்த்தச்சிராத்தம், கயாச்சிராத்

தஞ்செய்யவேண்டும். அதுவன்றி அபிடேகமுடைய ரும்,நிருவாணதீக்ஷையுடையரும்,விசிட்டசமயியும், வடமொழி உணர்ச்சி வல்லராகின் அவர் அவ்விதிகளைத் தாந்தெரிந்துகொண்டு, தீர்த்தவாசிகளாகிய பிராமணர்களை நியமித்துத் தாமேமந்திரங்கள் சொல்லிச் செய்யவேண்டும். விசேடபிதிரர்கள் தர்ப்பணத்தில் கூறப்பட்டனர்.

சமயிக்கு விசுவதேவர், நந்தி, மகாகாளர்; நிருவாணதீட்சிதர்க்கு அநந்தர், உருத்திரர்; வைதிகபிதிர்கள் கவ்வியர், வடவானலாதிகள்; வசுருத்திராதித்தர் களுமாம்.

---

## சிராத்தவிதிதநிடேதபதார்த்தங்கள்.

:o:

வாயுபுராணமுதலியவற்றில், வாழைக்காய், பாகற்காய், பூசினிக்காய், சுண்டைக்காய், முள்ளுக்கத்தரி, முன்னைக்கீரை, புரண்டை, காரை, சேப்பங்கிழங்கு, வள்ளிக்கிழங்கு, கருணைக்கிழங்கு, நெல்லிக்காய், விளங்காய், கொத்தவரைக்காய், கொத்தமல்லி, வில்வக்காய், இலந்தைக்காய், மாங்காய், தும்பைக்கீரை, வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம், மாதளம்பழம், பேரீச்சம்பழம், கொடிமுந்திரிப்பழம், நார்த்தம்பழம், சர்க்கரை, சயிந்தவலவணம், பசுவின்பால், பசுவின்தயிர், பசுவின்நெய், கடுகு, மிளகு, துவரை, உழுந்து, எள்ளு, யவை, கோதுமை, பாசுப்பயறு, பிரியங்கு,

சம்பா அரிசி இவை சிராத்தவஸ்துவென வங்கீகரிக் கப்படும்.

நீற்றுப்பூசினிக்காய், சுரைக்காய், முருங்கைக் காய், பீர்க்கங்காய், கத்தரிக்காய், முள்ளங்கிக்கிழங்கு, உருளைக்கிழங்கு, வற்றல்கள், பெருங்காயம், கடைந்த மோர், பிண்ணாக்கு, சிகப்புக்கீரைத்தண்டு, மிளகாய், உள்ளி, வெள்ளுள்ளி, புடலங்காய், மொச்சைக்காய், கொம்புப் பயற்றங்காய், எருமைப்பால், ஆட்டுப்பால், கைமலங்கறந்தபால், சிவப்பரிசி, எக்கியத்திற்கு அருக மல்லாத வரகுமுதலிய கிருட்டிணதானியங்கள், சோளம் இவை சிராத்த வஸ்துவல்லவென விலக்கப்படும். பெருங்காயம், புடலங்காய் சிலர் நிடேதமன்றென்பர்.

பிதிர்பூசைக்கு வில்வபத்திரம், எருக்கம்பூ, மந்தாரைப்பூ, அகருதூமம் இவை ஆகாவெனவும்; துளசி, தாமரைப்பூ, கையாந்தகரை, மருக்கொழுந்து, மல்லிகைப்பூ, எட்பூ, சண்பகப்பூ, பச்சைக்கற்பூரங் கஸ்தூரி சேர்த்தரைத்த வெளுத்தசந்தனம், அகருமுதலிய சேர்ந்த தூமம், இவை ஆமென்றுங்கூறுவர்.

---

## நிடேததேசம்.

—:*:—

மலநாற்றம், புழு முதலிய இல்லாத சுத்ததேசங்களில் சிராத்தஞ் செய்யவேண்டும். அவற்றினும் காகம், பன்றி, நாய், பூனை, கோழி, பூப்புடையவள்,

அலிமகனிருக்குமிடம், அன்னியன்வீடு இவைகள் சிரா த்தஞ்செய்தற்குரிய விடமல்ல.

பன்றி அன்னவாசனையைக் கிரகிக்கிறதினாலும், நாய், பூனை, பூப்புடையவள் பரிசமாகாமையினாலும், கோழி இறகு உதிர்த்தலினாலும், அலிமகன்சாயை படு தலினாலும், அன்னியன்வீடு அப்பூமிக்குரிய பிதிரர்க ளால் சிராத்தம் கிருகிக்கப்படுதலினாலும், ஆகாவென சிராத்த சந்திரிகையில் கூறப்பட்டன.

அன்னியன்வீட்டில் சிராத்தஞ்செய்யின் அதற் குப் பரிகாரமாக, பிதிர்பாத்திரத்தில் சிறிதன்னமெடு த்து,அப்பிதிரர்பொருட்டுத் தத்தஞ்செய்யுமுன் பூமியி லிடவேண்டும்: அல்லது அதற்குரியார்க்கு மூலியங் கொடுத்தல்வேண்டுமென்று பிரமபுராணத்துக் கூற ப்படும்.

கயாவில் கயாப்பிராமணர்கள் அப்பூமிக்குரியரா தலில், அவர்க்கு ஆதித்தியஞ்செய்து, தட்சணைகொடு க்கவேண்டும்.

---

## தானம்.

சிராத்தானந்தரம் பிண்டமிட்டு அன்னதானம், சுவர்ன்னதானம்,கோதானம், பூதானம்முதலிய தானங் கள் சக்தியளவு செய்யவேண்டும். கங்கை, யமுனை, நருமதை, கிருட்டிணை, துங்கபத்திரை, சரஸ்வதி, கோதாவரி, சந்திரபாகை முதலிய திவ்வியநதிகளினும்,

திரிவேணி, கிருட்டிணாசங்கமம் முதலிய நதிசங்கமங்களினும், புட்கரம், சக்கரதீர்த்தம், திரிசந்தி முதலிய தடாகதீர்த்தங்களினும், சேதுமுதலிய சமுத்திரதீர்த்தங்களிலும், சப்தகோதாவரி,கங்காசாகரம், முதலிய சமுத்திரசங்கமங்களினும் இவ்விதி செய்யவேண்டும்.

திரும்ப வீடுபுகுங்கால் வபனம், கிருதச்சிராத்தம் இவை சமீபமான வேறிடத்திருந்துசெய்து, அங்குப் பிராமணபோசனஞ் செய்வித்து, நல்லதினத்திற் புகவேண்டும்.

---

## கயாவரலாறு.

கயாவில் எல்லாத்தீர்த்தங்களும், எல்லாமூர்த்திகளது பதங்களும், அப்பதங்களில் பரிசித்தல் பிண்டமிடுதல் இவைகளால் பாவநீக்கமும், பிதிரர்க்கு நல்லுலகும், வருதற்குக்காரணம், சுவேதவராககற்பத்தில் பிரமனவர் தாவரசங்கமங்களைச் சிருட்டிக்குங்கால் அசுரர்சிருட்டியில், கயாசுரனையும் சிருட்டித்தனர். அவன் நெடுங்காலம் கோலாகலகிரியில்,உசுவாச நிசுவாசமின்றி வாயுவைவென்று தபசுசெய்தான். அவனுக்கு திரிமூர்த்திகளும், தேவர்களும் பிரசன்னராய் எல்லாத் தருமங்களினும்,யக்ஞாதிகளினும்,தீர்த்தங்களினும், பருவதங்களினும் நானதிகபரிசுத்தனாகுகவென, அவன்கேட்டவரத்தைக்கொடுத்தனர். அதனால் அவனைப்பார்த்த யாவரும், அதிகபுண்ணியராய்ச் சுவர்க்கமடைந்தனர். அக்காலத்து,பிரமா ஓர்யாகஞ்செய்யப் பரிசுத்தமான

தேசத்தைவிசாரித்து, அவன் அதிகபரிசுத்த வஸ்துவா யிருத்தலின், அவனையடைந்து, உன்னுடைய சரீரத்தில் நான் யாகசாலைசெய்து யக்ஞஞ்செய்கின்றேன், நீ அதனைக் கொடுவென்றுகேட்க, அவனதற்குடன்பட்டுக் கோலாகலகிரியில் நிருதிதிக்கில் சிரசைவைத்துத்தென்றிக்கிற் காலைநீட்டிப் பூமியிற்படுத்தான். அப்பொழுது பிரமா யாகவஸ்துக்களையும், ஓதா, அத்துவரி இருத்துவிக்குகளாக, காசிபாதிமுனிவர்களையும் சிருட்டித்து, அவன் சிரத்திற்செய்யும் யாகசாலையில் யக்ஞஞ்செய்வித்தனர். அவனுடையசிரசு அப்பொழுது அசைந்தது; அதைக்கண்ட பிரமன் தன்மவிருடியின் புத்திரியாயும் மரீசியின்பத்தினியாயும் இருந்த அதிகதபசையுடைய பதிவிரதையான தன்மி, தன்கணவன் சிலையாகுகவென இட்டசாபம் அதிககாலம் தவஞ்செய்தும் அது நிவர்த்திக்கப்படாமையால், அச்சாபவழி பரிசுத்தமான தீர்த்தங்களும் தேவர்களும் இருக்கும்படியான சிலையாய் இருக்கவரம்பெற்று அவ்வாறான சிலையாயினள்; அத்தன்மிசிலையை அவன்சிரசு சலியாதிருக்க வைக்கும்படி எமதன்மனுக்கு ஆக்ஞாபித்தனர். சத்தியலோகத்திருந்த அச்சிலையை அவர் அநுமதிப்படி எமதன்மராசன் கொண்டுவந்து சிரசுசலியாதிருக்கும்படி வைத்தனன். அச்சிலையில் பிரமாமுதலிய தேவர்களும், ஸ்ரீவிட்டுணு, பிரபிதாமகர், பிதாமகர், பல்க்கீசர், கேதாரேசர், கனகேசுரர், கசரூபவிநாயகர், சுப்பிரமண்ணியரிவர்களும், காயத்திரி, சாவித்திரி, சரஸ்வதி யிவர்

களும், அகத்தியர் முதலியோரும், பாதம்வைத்தனர். அப்பொழுது கயாசுரன் யான்கேட்கும் வரங்கொடுத்தால் சலியாதிருக்கின்றேனெனக் கூறினன். அதற்கவருடன்பட்டு அப்பொழுது நட்சத்திரமும் பூமியுமிருக்குமளவும், பிரமா, விட்டுணு, மகேசுரர்களும், தேவர்களும், சருவதீர்த்தங்களு மிச்சிலையிலிருக்கவேண்டுமென்றும், இதைப் பரிசித்தவரது பாவம் போகவேண்டுமென்றும், பிண்டமிட்டவரது பிதிர்கள் நல்லுலகடையவேண்டுமென்றும், வரங்கேட்டனன். அவ்வாறு அவர்கள் அவன் கேட்டவரத்தைக் கொடுத்தனர். அதனுல் அக்கயாவில் எல்லாமூர்த்திகளது பாதங்களும் எல்லாத்தீர்த்தங்களு மிருக்கின்றனவென்று வாயுபுராணத்துக் கூறப்படும்.

ஒருவன் செய்யும் புண்ணியகன்மம் உற்சறகவிதியினுல் தன்னேயே யடையவேணடும். அங்ஙனமாகாமல் அன்னியரான பிதிர்களே எவ்வாறடையுமெனின், நன்குசொன்னுய்; அவ்வதிருட்டம் அபவாதவிதியால், உத்தேசித்துச் செய்யுஞ் சம்பந்தத்தால் அப்பிதிரரை யடையுமென்க. அதிருட்டம் அவரை யடையுங்கால் அவர்க்கு நல்லுலகேயன்றிச் செய்வோனுக்குப் புத்திரவிருத்தி முதலியன கயாச்சிராத்தத்தாலாதலெவ்வாறெனின், அவர் திருப்தியடைந்தவழி வருகின்றனவாதலின் ஆசங்கையின்று: இஃதீண்டுவிரிப்பிற் பெருகும்.

தலயாத்திரைப்பொதுவிதி

முற்றிற்று.

# ஸ்ரீ காசிமான்மியம்.

## சூக்குமரூபம்.

உலகின்கண்வாழு மனவுணர்வுடைய, மக்களு ட்சிறந்தார்க்கு, கன்மநாசம்பிறந்து, வீடடைதற்கு முக்கியசாதனமெனச் சுருதியானும், அதன்வழித்தாய மிருதிபுராணங்களானும், வகுக்கப்படும் தபம், செபம், சற்பாத்திரதானம், யாகம், தீர்த்தயாத்திரை என்ப வைகளோடு ஒன்றாய், ஏனையதீர்த்தங்களிற் செய்யும் பாவங்கட்குப் பரிகாரமாயும், அரிதிற்சாதிக்குஞ்சாத னங்கள்போலாகாது, புண்ணியக்குறைவான இக்கலியு கத்தும், நியமவானுக்கு சுலபசாத்தியமாக வீடடையச் செய்யும், ஸ்ரீகாசிச்சொரூபம், சூக்குமரூபமென்றுந் தூலரூபமென்று மிருவகைப்படும். சூக்குமரூபம், ஆதிதெய்விகமென்றும், தூலரூபம், ஆதிபௌதிகமெ ன்றும், விராட்புருடனுக்குப் புருவமத்தியமென்றும் பெயர்பெறும்.

அவற்றுள்:—சூக்குமரூபம், அப்பிராகிருதமாயும், பிரமாவினுற் சிருட்டிக்கப்படாததாயும், சிவபிரானுல் ஆதிசிருட்டியிற் சிருட்டிக்கப்பட்டதாயும், விராட்டுரு பங்களைத் தரிப்பதாயும், பரமசிவனது ஆக்ஞையினுல்,

பிரளயத்தில் அழிவில்லாததாயு மிருக்கின்ற, கிரியாச த்திரூபமென்று சொல்லப்படும். அந்தக்கிரியாசத்தி பீடத்தில் சூக்குமசோதி லிங்கமாகச் சிவபிரான் நீங்கா திருப்பர்.

காசிகாண்டத்தில், காசியானது திரிசூலத்தின் முனையிலிருககின்றது, அழிவில்லாதது, நின்மலமான தென்பதனுல் சூக்குமரூப முண்டென்பதும்; அதறக ழியாமை முதலிய குணங்களும்; இக்காசி ஈசுரனது சக்தி என்பதனுல் சக்திரூபமாதலும்; அது விராட்டுரூ பத்தையும் தரிக்குங் கிரியாசத்தி என்பது ஆயிரமுக ங்களையுடையதாயும், ஆயிரங்கண்களையுடையதாயும், விராட்டுரூபத்தைத் தரிப்பதாயுமிருக்கின்ற, திவ்விய ரூபமான காசியைத் தியானிக்கவென, குண கற்பன ரூபவடிவங்கூறும் சிவரகசியவசனத்தானும் பெறப் பட்டன.

இனிப்பிரமாவின் ஆயிரம் சதுர்யுகஞ்சேர்ந்த, பக ல்நீங்கிய இரவில், எல்லாப்பூமியும், புவலோகமும், சுவலோகமும், கற்பாந்தவெள்ளத்தால், மூடப்பட்டு முழுகியிருக்குங் காலத்துச் சிவபெருமான் தனது சம வேதசத்தியோடு, சகளத்திருமேனி தாங்கி, விமானத் தில் தேவியாரோடு சரிக்கும்போது, எல்லாவஸ்துக்க ளுஞ் சலத்தில் முழுகியிருப்பதையும், இக்காசி முழு காது சக்கிராகாரமாய்ச் சோதிரூபமாய்ப் பிரகாசித்து க்கொண்டிருப்பதையும், உமாதேவியாருக்குக் காட்டி, இந்தச்சோதி உன்னுடையசொரூபம்,அதிற்சூக்குமரூப

மாய் விளங்குகின்ற லிங்கமூர்த்தி யென்னுடைய் சொ ரூபம் இதனைப் பாரென்றுகூறும் காசிகாண்டவசனத் தானும்; பிரமவைவர்த்தத்தில்,எல்லாப்பூமியுஞ் சலத்தி லழுந்த, சக்கிராகாரமாயிருக்கிற தேசசு ஒன்று சலத் திலழுந்தாது ஆகாசத்திற் காணப்படுகிறது; அதன் மேல் மேலான விலிங்கரூபமானசோதி காணப்படுகி றது; இது யாதென்று இருடிகள் வினவ, அது சதாசி வரானவரெங்களை யிரட்சிக்கும்பொருட்டுப்,பாதாளமு தல் வைகுண்டத்தின்மேலும் வியாபித்து லிங்கமூர்த் தியாயிருக்கின்றார். இந்தப்பூமி சடமாதலினல் சலத்தி லமிழ்ந்துவிட்டதென்று அவர்களுக்குத்தரமாக விட்டு ணுகூறும் வசனத்தாலும்;பதுமபுராணத்து, பரத்துவா சமுனிவர்,காசியில்நின்றும் சத்துருக்களால் பீடிக்கப் பட்டுத் தன்னையடைந்த திவோதாதனுக்கு நீ சிவகண நாதனுக்கு அபராதஞ்செய்தமையால், காசிராச்சிய த்தை யிழந்துவிட்டாய்; காசியில் சிவகணங்களையே சேவிக்கவேண்டுமென்று, காசிச்சொரூபம் நிர்க்குண மாயும், நிர்விகாரமாயும், இடையீடன்றியு மிருக்கின்ற பரப்பிரமமே இந்தக்ஷேத்திரரூபமாக விருக்கின்றதெ னக்கூறும் வசனத்தானும், அச்சூக்குமரூப மழியாத ஞானமயமான லிங்கமுங் கிரியாமயமான பீடமுமு டைய சோதிலிங்கமென்பது பெறப்பட்ட துணர்க.

சூக்குமரூபமாயுந் தூலரூபமாயு மோர்காலத் திர ண்டுரூபமாதல், சிவபிரானுக் கெவ்வாறுமெனில், அவ ர்வாக்குமனங்களைக் கடந்த நிரவதிகமகிமையுடையரா

தலால், அநுக்கிரகத்தின்பொருட் டோர்காலத்திரண்டுருபமா யிருத்தலிற் குறைபாடிலராதலின் ஆசங்கையின்று: இதனாலவர்க்குச் சகளத்திருமேனியாகிய தூலரூபமுஞ் சகளநிட்களத் திருமேனியாகிய சூக்குமரூபமும், இவையிற்றிற் கதிட்டானமான பரரூபமுமுண்டென்பது பெற்றாம். இது சைவபுராண வாயவ்வியசம்மிதையினுங் கூறப்படும்.

## தூலரூபம்.

தூலரூபம், மத்திமேசுரமுதல் தேகளிவிநாயகபரியந்தம், நாலுதிக்கிலுஞ் சக்கிராகிருதியாய்ச் சூத்திரம்பிடித்தா லதிலுண்டாகிய இரேகையி னடுவிடமாம்: இது நாலுதிக்கினும் இரண்டரை யிரண்டரைக் குரோசமாய், பஞ்சக்குரோச பரிமாணமுடைத்து. ஓரிடத்து மத்திமேசுரம்முதல், நாலுதிக்கினும் ஐந்தைந்து குரோசமெனக் கூறப்பட்டதேயெனின், அது * ஆயிரந்தநுக்கொண்ட குரோசமாதலின் முற்கூறியதனோடு மாறுபடுதலின்று.

கிரேதயுகமுதல் நாலுயுகத்தும் முறையே சக்கரம், தேர்த்தட்டு, சங்கம், தநுசு இவைகள்போல ஆகிருதியுடைய தூலரூபத்தைச் சூக்குமரூபம் அதிட்டித்து அபேதமாயிருக்குமாதலின் இக்காசி யெல்லாத்

* ௧000 - தநு ௧௨ - மயில். ஒருகுரோசம் உ000 - தநு. உ௨ - மயில் ஒரு குரோசம் என்று வழங்குவர்.

தேவதைகளுக்கும், எல்லாக்கணங்களுக்கும், வாசமாய்த் தன்னுள் மரிக்கின்றமனுடர், மிருகம், பசு, பட்சி, தாவரம் முதலிய எல்லாப்பிராணிகட்கும் முத்தித்தானமெனப்படும்.

இதற்குள் தேவர்கள், இருடிகள், கணங்கள், மனுடர்கள், சித்தர்களாகிய இவர்களாற் பூசிக்கப்பட்ட எண்ணிறந்த இலிங்கங்களும், ஸ்ரீவீராகமத்தும், காசிகாண்டத்தில் க்ஷேத்திரவளனுரைத்த அத்தியாயத்தும், சேவியற்றிறமுரைத்த அத்தியாயத்துங் கூறப்படுங் கேதாரம், மல்லிகார்ச்சுனம், கோகர்ணமுதலிய ஸ்தலங்களிலுள்ள சுவாயம்புவலிங்கங்களும், ஆதிலிங்கமாகிய விசுவேசுரரைச் சூழ்ந்திவ் வெல்லைக்கு ளிருக்கின்றன.

கேதாரமுதலிய ஸ்தலங்களிலுள்ள சுவாயம்புவலிங்கங்கள், ஒவ்வொருகாரணத்தா லித்தலத்தில், வந்திருக்கின்றன வென்பது மேற்கூறிய அத்தியாயங்களிலொருவாறு விளங்கும்.

இன்னும் இதனுட்பகுப்பாய், வாராணசியென்றும், அவிமுக்தமென்றும், அந்தர்க்கிரகமென்றும் தூலபரிமாணவெல்லைகள் மூன்றுள.

அவற்றுள் வாராணசி, கிழக்கு மேற்கில் இரண்டேமுக்கால் குரோசமும், தெற்கு வடக்கில் ஒன்றரைக் குரோசமும், கிழக்கில் கங்கையும், மேற்கில் பாசபாணிவிநாயகரும், தெற்கில் அசியும், வடக்கில் வருணையும் ஆகிய நான்கெல்லையையுடைய தென்றும்;

. அவிமுக்தம், கிழக்கில் அட்டகாசமும், தெற்கில் பூததாத்திரீசமும், மேற்கில் கோகர்ணேசமும், வடக்கில் கண்டகர்ணேசுரமும் ஆகிய நான்கெல்லையுடைத்தாய், விசுவேசுரருக்கு நாலுதிக்கினும்,இருநூறு தநுக்கொண்ட தென்றும்;

அந்தர்க்கிரகம், கிழக்கில் மணிகர்ணேசமும், தெற்கில் பிரமேசமும், மேற்கில் கோகர்ணேசமும், வடக்கில் பாரபூதேசமும், ஆகிய நான்கெல்லையையுடையதென்றும் கூறப்படும்.

இன்னுஞ் சிலவிகற்பமாக ஸ்ரீகாசிக்ஷேத்திரத்தின் கீழ்பாகத்திற் கங்கை உத்தரவாகினியாய், க்ஷேத்திரமத்தியத்தில் வருதலால், அவிமுக்தம் அந்தர்க்கிரகமென்னு மிரண்டற்குங் கங்காமத்தியமளவு மெல்லைகளுண்டென்றும்; அவிமுக்தத்திற்கு மத்திமேசுரமுதல் நாலுதிக்கிலும் நான்குகுரோசமாய்ச் சதுரத்தில் ஒருகுரோசவெல்லை யுண்டென்றும்; காசிக்குள் வாராணசியும், அதற்குள் அவிமுக்தமு மிருத்தலால் மணிகர்ணிகாவிசிட்ட கங்கையினுடைய கிழக்கு மத்தியப்பிரதேசத்தில் அவிமுக்தஸ்தானத்தில் அந்தர்க்கிரகவெல்லை யிருக்கின்றனவென்றும் அங்கு க்ஷேத்திரசதுட்டய மாரணப்பிரயோசன முண்டென்றுங் கூறுவாருமுளர்.

இவ்வெல்லைகள் காலவேறுபாட்டாற் சில பிறழ்ந்திருக்கலாம்.

---

## காசிமுதலியபெயருமதன்காரணமும்.

காசியென்றும், வாராணசியென்றும், அவிமுக்தமென்றும், ஆநந்தவனமென்றும், உருத்திரவாசமென்றும், மாமசானமென்றும், கௌரிமுகமென்றும் இத்தலத்திற்கு ஏழுபெயர்கள் உள்ளன.

அவற்றின்காரணம்:—எதனிடத்துப் பரமாத்மரூபமாகிய தேசசு பிரகாசித்துக்கொண்டிருக்கிறதோ அது காசியென்றும்; வருணை, அசியென்னு மிரண்டுநதிக்கிடையி லிருத்தலால், வாராணசியென்றும்; சிவபிரானரிந்த க்ஷேத்திரத்தைநீங்க யிஷ்டமில்லாமல் நீங்கியும், நீங்காமலொரு லிங்கரூபத்தில் மறைந்திருத்தலான் அவிமுக்தமென்றும்; சிவபிரானுக்கு ஆநந்தத்தைக் கொடுக்கின்ற சத்திரூபமாதலினாலும், வருடகாலத் தங்குரம்போல், ஆநந்தத்தாலனேக லிங்கங்களுதித்திருத்தலினானும் ஆனந்தவனமென்றும்; கிழக்குமுதலிய நாலுதிக்குகளிலனேக உருத்திரர்கள் வசித்திருத்தலினானும், காசியிலிருக்கின்ற பிராணிகள் உருத்திரரூபமாயிருத்தலினானும், உருத்திரவாசமென்றும்; பிரமாண்டமுதலிய காரியப்பிரபஞ்சங்க ளொடுங்குமிடமாதலில், மாமசானமென்றும்; காஞ்சிமுதலிய சக்திபீடங்களுள் காசி முகபீடமாதலால் கௌரிமுகமென்றும் கூறப்படும்.

சக்திபீடங்களின்காரணம்:—சிவாபராதஞ் செய்த தக்கன்புத்திரியாயிருத்தல் கூடாதென்று, மந்திரகலா

ம்யமான திருமேனியைநீக்கி, உமாதேவியார் அத்திரு மேனியின் முகம்முதலிய அங்கங்களைக் காசி, சுவாலா முகி, ஏமகூடம், காஞ்சிமுதலிய தேசங்களி லிடும்ப டியாக ஆக்ஞாபித்ததனால், அவ்வங்கங்கள் சேர்ந்தஸ் தலங்கள் சிவசக்திக்குப் பீடங்களாயினவென்று தேவி பாகவதத்திற் கூறப்பட்டது.

காசியைச் சிவபிரான்நீங்கியும்,நீங்காமலிருந்தமை; திவோதாதனுக்குக் காசியைவிட்டுநீங்கி யிருக்கிறதாக வரங்கொடுத்து, மந்தரமலையை அடைந்தகாலத்துக் காசிக்ஷேத்திரம் நெடுங்காலம் நீக்கப்பட்டதாயிருந் தும், அத்தலத்திலொரு லிங்கரூபமாய் மறைந்திருந்தா ரென்பது காசிகாண்டத்திற் கூறப்படும். பிரபஞ்ச மொடுங்குமிடமாகிய மாமசானத்து முதற்கடவுளா கிய சிவபெருமான் ஒருவரேயழிவின்றி நிலைபெற்று வசிப்பர். அதனாலவர்க்குச் சுடலையாடியென்று பெயர்.

## காசிநாமோச்சாரணபலன்.

பரமேசுவரனுடைய நாமங்களை யுச்சரித்தால் அது பாவங்களைப்போக்கி, முத்தியின்பத்தைக் கொடு ப்பதுபோலக், காசிக்ஷேத்திரத்தினுடைய நாமங்களை உச்சரித்தலும் யமவாதனையைநீக்கிச் சற்கதிக்கேதுவா கின்றது.

காசியென்கின்ற இரண்டக்ஷரங்களை ஸ்மரிக்கின்ற வன் சிவலோகத்தை யடைகிறானென்று, பதுமபுரா

ணத்தும், எவனொருவன் காசி காசி யென்று இரண்டு தரமாவது மூன்றுதரமாவது செபிக்கின்றானோ, அவன் மிகுந்த பரிசுத்தனாகிறானென்றும், காசி, வாரணசி, உருத்திரவாசமென்னும் நாமங்கள் எவன்முகத்தினின் றும் வெளிப்படுகின்றனவோ, அவனை யமனடைய்மா ட்டானென்றும் காந்தத்துங் கூறப்பட்டன.

இன்னும் பரமசிவ பரியாயதுல்லியமாகிய காசி யென்னு மிரண்டக்ஷரத்தை, நரகமடைந்தானொருவன் உச்சரித்துத் தானனுபவிக்கும் நிரையத்துன்பத்தினின் றும்,நீங்கினானென்றோரிதிகாசம் காசிரகசியத்தும்;மது ராநகரத்திருந்த மாலுகியென்னும் பிராமணனது புத் திரன் கிரிசனென்பவன், தன்மனென்னும்பிராமணனி டத்தில், சாங்கத்தோடு வேதாத்தியயனஞ் செய்தவனா யும், புராணவிதிகாசங்களைக் கேட்டுத்தெரிந்துகொண் டவனாயு மிருந்துந் தன்மமார்க்கத்தில் பிரவிர்த்தியி ன்றி, துட்டமான பாவங்களைச் செய்துகொண்டிருந் தான். அவன் தன்தேசத்தைவிட்டுக் கலிங்கதேசத்தை யடைந்து கொடிய சுரநோயால் வாதிக்கப்பட்டான். அப்பொழுது அவன் நான்யாதொரு சுகிர்தமுஞ் செய் யாதவனா யிருத்தலால், பரலோகத்திற் சுகங்கிடை க்க மாட்டாதென்று மனதிலாலோசித்துத் தான் முன்கேட்ட காசிமான்மியத்தை ஸ்மரித்துக் காசி யென்னு மிரண்டக்ஷரங்களை யுச்சரித்து இறந்தான். அவன் யமயாதனையினின்றும் நீங்கிக் கைலாசத்தைய டைந்து ஒரு தேவயுகமிருந்து காசியையடைந்து, முத்

திசேர்ந்தா னென்றோரிதிகாசம் பதுமபுராணத்தும் கூறப்பட்டன.

இந்தக் காசிமுதலிய நாமங்கள் பத்தியோடெடுத்துச் சொல்பவர் நாவுக்குரசத்தைத் தருவனவாயும், கேட்பவர்செவிக்கு ஆநந்தத்தைக் கொடுப்பனவாயுமிருப்பனவேயன்றி, இக்காசிமான்மியமும் பரிசுத்தமாயிருந்து ஓதுகின்றவருக்கும், கேட்கின்றவருக்கும்,எல்லாக்ஷேத்திர மான்மியங்களையுமோதிக் கேட்டபயன்களைக் கொடுக்குமென்பது,

"காசியைக் குறித்துச் செல்லுங் கால்களே கால்களாகுங், காசியை வழுத்து நாவே நாவெனக் கழறலாமால், காசியின் கதைகள் கேட்குஞ் செவிகளே செவிக ளாகுங்; காசியை யினிது காணுங் கண்களே கண்களாமால்." என்னுங் காசிகாண்டச் செய்யுளானுமுணர்க.

---

## ஸ்ரீகாசிதரிசனபலன்.

:o:

ஸ்ரீகாசி, தூரத்தில் தரிசித்தவனுக்கு, அக்கணத்திலனேக தானபலனைக் கொடுப்பதாயும், அவனுடைய பாவத்துக்குப் பகையாயுமிருக்கும். இதனைத் தரிசித்தல், சன்மாந்திர சுகிர்தமின்றிக் கூடாவாம். இக்காசி, தூரத்திலிருந்து நினைக்கின்றவனுக்கும், பாவக்ஷயத்தைப் பண்ணுமெனில், சமீபத்திலடைந்து, தரிசித்தவனுக்குப் புண்ணியத்தைக் கொடுக்கு மென்பதற்கு

ஐயமின்று. இதனுல் பிரமபுராணத்து, ஒருயோசனை தூரத்திலிருந்து காசியைத் தரிசித்தவர்கள் பாவநீக்கம் பிறந்து, பரிசுத்தராவாரென்றும், பிரமவைவர்த்தத்தில் புண்ணியவான்களால் தரிசிக்கப்படுவதும் பாவநீக்கத்தைச் செய்வதுமாகிய காசியைத் தரிசியென்றுங் கூறப்பட்டது.

---

## காசியையடைந்தோர்பலன்.

:o:

போககாமனுக்குப் போகத்தைக் கொடுத்தலால் காசியை யடைவதே போகமும், முத்திகாமனுக்குச் சாங்கிய பாதஞ்சலமுதலிய யோகாநுட்டானத்தாலடைதற்கரிய முத்தியைக் கொடுத்தலால், காசியையடைவதே யோகமும், விரதாநுட்டானிக்கு, விரதாநுட்டானத்தாலாகிய, பாபக்ஷயத்தைப் பண்ணுதலால், காசியை யடையுமதுவே தவமும், சற்பாத்திரதானஞ் செய்பவனுக்குக் குருக்ஷேத்திரமுதலிய புண்ணியதேசங்களில், காலவிசேடம்பற்றிச் செய்கின்ற தானபலத்துக் கதிகமான பலனைக்கொடுத்தலால், காசியையடைவதே தானமும், அதில் மரித்தவருக்குச் சாயுச்சியத்தைக் கொடுத்தலால், காசியையடைவதே சாயுச்சியமு மெனப்படும்.

அநேக சன்மங்களிற் செய்தபுண்ணியங் காரணமாயடையத்தக்க இக்காசி, மார்க்கவசத்தாலடைந்த பாவிக்கும், பிரமக்கொலைமுதலிய பாவங்களை நீக்கு

மேனில், சன்மார்க்கனு யடைகின்றவனுக்குப் புண்ணிய மதிகமாமென்பதும், பாவம் நீங்குமென்பதும் கைமுதிக நியாயத்தாற் சித்திக்கப்படும்.

இன்னும், காசியையடைந்தவன், அடைந்த கணத்திற்குப் பூர்வக்கணமுதல், அநேகசன்மங்களிற் செய்த பாவங்களினின்றும் நீங்குகிறானென்று, சிவபுராணத்தும், காசியை யடைந்தமாத்திரத்தில் முன்செய்த பாவங்களெல்லாம் நசிக்கப்படுகின்றன, புண்ணியங்களதிகரிக்கின்றனவென்று பதுமபுராணத்தும், வாரணசியென்று மூவுலகத்திற்குஞ் சாரமாயிருக்கின்ற நம்முடைய தலத்தை யடைந்தவன் அநேகவிதங்களான பாவங்களைச் செய்தவனு யிருந்தாலும், பாவமில்லாதவனு யிருக்கின்றானென்று மற்சபுராணத்துச் சிவவசனமுங் கூறப்படுதலின், அடைந்தார் அக்கணம் பூர்வபாவத்தில் நீங்குவரென்பது, தெளிவாய் நிச்சயிக்கப்பட்டது.

இதற்கோரிதிகாசம். பிரமக்கொலை முதலியன செய்து விந்தியபர்வதத்திற் சஞ்சரித்திருந்த, பூரித்துய்மனென்னு மரசன் தான்செய்த பாவங்களைச் சாலங்காயனரென்னு மிருடியினிடத்தி லெடுத்துச் சொல்லிப் பரிகாரங்கேட்க அவரதற் குடன்படாது மறுத்தனர். மேலு மவ்வரசன் தான்செய்த பாவங்களைப் பலகாலெடுத்துச்சொல்லி நிவர்த்தியைவினவ, அவர் கிருபைகூர்ந்து, நீ காசியை யடைந்தாலந்தப் பாவங்கள் நசித்துவிடும், அது நசித்தற் கடையாளம் ஐந்து கரிய கஞ்

சுகங்களைத் தரித்துக்கொண்டு, நீ காசியெல்லையை யடைந்து தரிசித்தமாத்திரத்து, அந்தக் கஞ்சுகங்கள் வெளுப்பாகும், அப்பொழுது அப்பாவங்கள் நீங்கின வென்று தெரிந்துகொள்ளென்றார். அதைக்கேட்ட பூரித்துய்மன் அவரை நமஸ்கரித்து, விடைபெற்றுச் சென்று, காசி யெல்லையிலிருந்து, ஏழுநாள் அதனைத் தரிசித்து, அவை வெளுப்படைந்தமை கண்டு, மகிழ்ந்து காசியையடைந்து முத்தியடைந்தானென்று, பதுமபுராணத்திற் கூறப்படும்.

இதனாற் காசியை நினைத்தலும், தரிசித்தலும், புண்ணியத்திற் கேதுவாதலே யன்றி, யிதனையடைந்து, வசித்தலும், உத்தமோத்தம புண்ணியமேயாமென்பது நிச்சயிக்கப்படும்.

---

## தீர்த்தவிசேடம்.

—:*:—

காசியையடைதற் கெல்லாக்காலமுஞ் சுபகாலமாதலால், சுபலக்கினம், அசுபலக்கினமென்பது பாராமல் சென்று திருவெல்லையிற் பிரவேசித்த மாத்திரத்தில், நமஸ்கரித்து மேற்குத்திக்கி லிருக்கின்ற தேகழி விநாயகருக்குக் குங்குமக்குழம்பு முதலியவற்றா லபிடேகஞ் செய்து, பூசித்து மேல் மணிகர்ணிகா தீரத்தை யடைந்து, சசேலஸ்நானம், விதிபூர்வக முண்டனம், இவைகள் செய்து, விதிப்படி ஸ்நானம், தர்ப்பணம், சாமான்ய நித்தியயாத்திரை, சிராத்தம், உபவா

சம்,. இவை செய்தவர், நாடோறும் ஸ்நானஞ்செய்தற் குரிய தீர்த்தங்க ளனேக முளவாயினு மவைகளுட் சில விசேடதீர்த்தங்களின் மான்மியமும், கங்காமான்மிய மும்,ஈண்டுக் கூறப்படுகின்றன.

பிரமனாற் சிருட்டிக்கப்பட்ட தீர்த்தங்க ளெல் லாவற்றினுஞ், சவிதுக்ஷேத்திரமாகிய பிரயாகைதீர்த் தம் விசேடமுடையது. அப்பிரயாகையினுங் காசியி லிருக்கின்ற தீர்த்தங்கள் விசேடமுடையன. அவற் றுள் பஞ்சநதியும், மணிகர்ணிகையும், தசாசுவமேதத் திலிருக்கின்ற காசிப்பிரயாகையும், ஆகிய இம்மூன்று தீர்த்தங்களும் விசேடமெனப்படும்.

என்னை: மாசிமாதத்தில் சவிதுக்ஷேத்திரமாகிய பிரயாகையி லெல்லாத்தீர்த்தங்களும், உதயகாலத்து வருகின்றன. அந்தப் பிரயாகைமுதலிய தீர்த்தங்கள் மத்தியானத்தில் தினந்தோறும், மணிகர்ணிகையினுங், கார்த்திகை மாதத்திற் பஞ்சநதத்தினும், மாசிமாதத் தில் தசாசுவமேதத்திற் சூலடங்கேச சமீபத்திலிருக்கி ன்ற காசிப் பிரயாகையினும் உதயகாலத்து வருகின் றன. அதுபோலக் காசியிலிருக்கின்ற விம் மணிகர் ணிகை முதலிய தீர்த்தங்க ளோரிடத்தும் போவனவ ல்ல. ஆதலின் எந்தத்தீர்த்தங்க ளெவ்விடத்துத் தங் குறை நிரப்பப் புகுகின்றனவோ, அந்தத் தீர்த்தங்கட் கக்குறையை நீக்குந்தகுதி உடைமைபற்றி விசேடமு டைமை போந்ததென்க.

# பஞ்சநதிமான்மியம்.

:o:

அவற்றுள்: பஞ்சநதிதீர்த்தம் பஞ்சப்பிரமமென்று பெயருடையது. ஆதியில் தன்மநதியுந், தூதபாவையுஞ் சேர்ந்து, ஓர்நதியாய்ப் பின்பு அதனோடு கிரணையுங், கங்கை, யமுனை, சரஸ்வதி யென்னும் மூன்றுஞ் சேர்ந்து, பஞ்சநதியாயிற்று. இது மூவுலகுக்கும், பிரசித்த மானதாயும், ஸ்நானஞ் செய்கின்றவர்களுக்குப் பாஞ்சபவுதிகமான சரீரத்தை நீக்கி, திவ்விய மான சரீரத்தைக் கொடுக்கின்றதாயு மிருக்கின்றது.

இதன்வரலாறு: வேதசிர னென்கின்ற இருடிக்கு ஒரு கன்னிகை யிருந்தாள். அவள் தன் பிதாவினுத்தரவின்படி தனக்கொரு நாயகனைவிரும்பித் தபசுசெய்தனள். நெடுங்காலந் தபசுசெய்தலால் எல்லாத்தீர்த்தங்களினுடைய பாவத்தையும் போக்கத்தக்க தூதபாவை யென்னும் பெயரைப் பெற்றனள். அவளை யமதருமராசன் காந்தருவமாய் விவாகஞ் செய்யும்பொருட்டுப், பிரார்த்தித்தான். அதற்கவள் பிதா அநுமதியின்றி, உன்னோடு சம்பந்திக்க மாட்டேனென்று மறுத்தனள். நீ கடினமனசுடையை யாதலாற் சிலையாகுகவென்று சபித்தான். அவளுந் தருமனை சலரூபமாவையெனச் சபித்தனள். பின்பு அக்கன்னிகை பிதாவினிடத்திற் போய் விருத்தாந்தத்தைச் சொல்ல, அவர் ஞானதிருட்டியினாற் பார்த்து, உனக்கு வரயோக்கியனாயிருக்கின்றவனை நதியாகச் சபித்ததனால், நீயுஞ் சந்திரகாந்தச்

சிலைரூபத்தை யடைந்து, அந்தநதியோடு பிரவாகித்துச்சேரென்று ஆக்ஞாபித்தார். அவளு மவரநுமதிப்படி சந்திரகாந்தச் சிலையாய்த் திரவித்து, தன்மாநதியோடு சேர்ந்து, ஒன்றாயிருந்தனள். அதனோடு சூரியனுடைய தபசினாலவனது வேர்வையில் நின்றுண்டாகிய கிரணையென்னும் நதியும், தூதபாவையோடு பின் சேர்ந்தது. அவ்விடத்தில் கங்கை, யமுனை, சரஸ்வதி மூன்றுங்கூட,அதனோடு பஞ்சநதியாயிற்றென்று காசிகாண்டத்துக் கூறப்படும். இது ஆதியுகத்தில் தன்மநதியென்றும், இரண்டாம் யுகத்தில் தூதபாவையென்றும், மூன்றாம் யுகத்தில் விந்துதீர்த்த மென்றும், இக்கலியுகத்திற் பஞ்சநதமென்றும் பெயர்பெறும்.

---

## மணிகர்ணிகாமான்மியம்.

மணிகர்ணிகா தீர்த்தம் ஸ்நானஞ்செய்கின்றவனுடைய, மகாபாவங்களைப் போக்குவதாயுங் காசியிலிருக்கின்ற எல்லாத் தீர்த்தங்களுந் தன்னிடத்தில் ஸ்நானஞ்செய்து, பாவத்தைப் போக்கும்படியாயும் மான்மியமுடையது:

இதில் தேவர்கள், இருடிகள் மத்தியானத்தில் நித்தியகன்மங்கள் செய்து ஸ்நானஞ்செய்ய வருகிறார்கள்.

இதன்வரலாறு: முற்காலத்து ஸ்ரீவிட்ணுவானவர் சக்கரத்தா லொருவாவியுண்டாக்கி அதில்தன், வெயர்வைச்சலமாகப் பூரித்து, அந்த வாவிக்கரையிலி

ருந்து தவஞ்செய்ய, அவர்க்குப் பிரசன்னரான விசுவே சுரர் அவர் தவத்துக்குச் சந்தோஷமடைந்து, சிரக்கம் பஞ் செய்யுங்கால், குண்டலத்தினின்று நழுவிய நாகர த்தினம் விழுதலால் மணிகர்ணிகை யென்றுஞ், சக்கர த்தாலகழ்ந்தமையால் சக்கரதீர்த்தமென்றுந் திருமேனி வெயர்வினின்றும் உண்டானதினல் பிரமத்திரவமென் றும், பெயராயினவென்று காசிகாண்டத்திற் கூறப் படும். இது சாம்பூநத நிறமுடையது.

எப்பொழுது கங்கை வந்துசேர்ந்ததோ அதுமு தல் இது அதிவிசேட முடையதாயிற்று. இதற்குக் கிழக்கே கங்கையினுடைய நடுவுந், தெற்கே கங்கேசுர மும், மேற்கே சுவர்க்கத் துவாரேசுரமும், வடக்கே அரிச்சந்திரேசமுமாகிய நான்கெல்லை யுள்ளன.

---

## காசிப்பிரயாகைமான்மியம்.

:*:

தசாசுவமேதத்தில் சூலடங்கேசர் சமீபத்தில், கங்கை, யமுனை, சரஸ்வதி, யென்னு மிம்மூன்றில், கங்கை உத்தரவாகினியாயும், யமுனை பூர்வவாகினியா யும், சரஸ்வதி அந்தர்வாகினியாயும், வருதலால் காசிப் பிரயாகையுஞ் சர்வகாமியங்களையுங் கொடுக்கும் பிர யாகையினும், மிக்க காமியதீர்த்தமென்று சொல்லப் படும். இதில் வபனம், சிராத்தம், தர்ப்பணம், தானம் இவைகளைச் செய்தல் விசேட பலன்களைக் கொடுக் கும். இந்த மூன்றினுங் காலையில் பஞ்சநதத்திலும்,

த்சாசுவமேதத்திலும், மத்தியானத்தில் மணிகர்ணிகையிலும், ஸ்நானஞ்செய்தல் வேண்டும். இம்மூன்றிலும் ஸ்நானஞ்செய்தவர்கள் எல்லாத் தீர்த்தங்களிலும், ஸ்நானஞ்செய்த பலனை யடைவர்களென்று காந்தம், காசிகாண்டம், பிரமவைவர்த்தம், இவைகளிற் கூறப்பட்டன. கார்த்திகைமாதம் பஞ்சநதிக்கும், மாசிமாதம் காசிப்பிரயாகைக்கும் விசேடம்.

## ஞானவாவிமான்மியம்.

இன்னும் விசுவேசுரர் ஆலயசமீபத்திலிருக்கின்ற ஞானவாவியென்னுந் தீர்த்தம், ஸ்நானஞ்செய்கின்றவர்களுக்கு ஞானத்தைக் கொடுப்பதாய் மிக மகிமையுடைத்தா யிருக்கின்றது. இதைப்பு ரோட்சித்துக் கொண்டவர்கள் ஞானசம்பத்தை யடைவர்கள்.

இதன்வரலாறு: ஈசான உருத்திரர், அங்குத் தவஞ்செய்யுங்கால், சூலத்தா லொருவாவி யுண்டாக்கி, அவ்வாவியில் தீர்த்தமெடுத்து விசுவேசுரருக்காட்டி, அவ்வாவிக்கரையிலிருந்து தவஞ்செய்தார். அவர் தவத்திற்குப் பிரசன்னராய்ச் சந்தோடமடைந்த விசுவேசரிடத்தில், இவ்வாவியில் ஸ்நானஞ்செய்கின்றவர்களுக்கு, ஞானத்தைக் கொடுக்கும்படி பிரார்த்தித்துக் கொண்டார். அதற் கவ்வாறு விசுவேசர் வரங்கொடுத்தனர்; அதனல் ஞானவாவியென்று பெயராயிற்றெனக் காசிகாண்டத்திற் கூறப்படும்.

இவையன்றி இன்னும், திரிவிட்டபேசுர சமீபத்தில், விரசாதீர்த்தமும், மகாலிங்கசமீபத்தில், மகாகூபமும், கிருத்திவாசத்தில், கிருத்திவாசத் தீர்த்தமும் ஆகிய இவைகள் விசேடமெனப்படும்.

---

## கங்காமான்மியம்.

—:*:—

கங்கை சத்தியலோகத்தில் நின்றுந் திலீபபுத்திரனாகிய பகீரதன்பொருட்டு பூமியிலவதரித்து, சிவபெருமானால் சிரசால் வகிக்கப்பட்டு, எல்லாநதிகளுக்குஞ் சிரேட்டமாய் எல்லாப்பாவங்களையும் போக்குவதாயிருக்கின்றதென்பது, புராண இதிகாசங்களிற் புலப்படக் காணலாம். இக்கங்கையின் நாமங்களைத் தூரதேசத்தி லிருந்து உச்சரித்தாலும், மூன்று சன்மங்களிற் செய்த பாவங்கள் நீங்கும். ஈது எல்லாநதிகட்கும் வியாபகமான தீர்த்தமென்பது. கங்கையின்மிக்க நதியும், மகாதேவரின்மிக்க தெய்வமு மின்றென்று கூறப்படுதலானும், நருமதை முதலிய நதிகளிற் கங்கை ஸ்மரிக்கப்படுதலானும், அந்நதிகள் கங்கையில் ஸ்மரிக்கப்பட்டால், பாவங்கூறுதலானும் பெறப்படும்.

கங்கையில் வேறுதீர்த்தங்களை ஸ்மரித்தாற் குற்றமாதல், கங்கையினின்று மன்னிய தீர்த்தங்களை யெடுத்துச் சொல்லும் மூடன் நிரையத்தையடைகிறானென்றும், அதி லன்னியதீர்த்தங்களை ஸ்மரிக்கின்றவன் பாவி

யாகிருனென்றும், பவுடியம், காந்தம் முதலிய புராணங்களிற் கூறப்படும்.

கங்கை சர்வபாவங்களைப் போக்குமென்பது புராணங்கட்கே யன்றி மிருதி நூலார்க்குஞ் சம்மதம். இதிற் புண்ணியதேச மல்லாத தேசத்தி லிறந்துபோனவனுடைய சரீரத்தெலும்பு விழுமேல், அவன் சுவர்க்கத்தை யடைவானெனிற் பிராணனோடு ஸ்நானஞ்செய்தவன் பாவநீக்கமுற்றுப் புண்ணியனுவனென்பதற் கையமின்று. சகரருடைய சாம்பலில், இக்கங்கை பரிசித்தமாத்திரத்து அவர்கள் சுவர்க்கமடைந்தாரென்னு மிதிகாசமிராமாயணத்திற் பிரசித்தம். இன்னுமனேக இதிகாசங்க ளிதற்குண்டு.

இக்கங்கையில் மூன்றுலோகத்தி லிருக்கின்ற தீர்த்தங்களும், வேதங்களும், அதில் விதிக்கப்பட்ட தன்மங்களும், யாகங்களும், தேவர்களும், சூக்குமரூபமாய் வசித்திருக்கின்றார்கள். இதிற் பூசித்தவர்கள் எல்லாத்தேவர்களையும் பூசித்தபலனை யடைவர்கள்.

கங்கோற்பத்திமுதற் கங்காசாகர பரியந்த மிருக்கின்ற கங்கை, கௌரவரும், பாண்டவரும் யுத்தஞ் செய்த குருக்ஷேத்திரத்தோ டொப்பெனப்படும். அதிலும் விந்தியத்தைச் சார்ந்துவருகின்ற கங்கை, நூறுபங்கு விசேடமுடையது. அதிலும், பச்சிமவாகினியாய் வருகின்ற கங்கை, நூறுபங்கு விசேடமுடையது. அதி

லும், காசியில் உத்தரவாகினியாய் வருகின்ற கங்கை, ஆயிரம்பங்கு விசேடமுள்ளது.

குருக்ஷேத்திரத்தில் சரஸ்வதிநதி யிருத்தலின் அதனேடு கங்கை ஒப்பெனப்பட்டது. வடமேற்கில் நின்று கிழக்குமுகமாய் வருகின்ற கங்கை, நேர்மேற்கில் நின்று கிழக்குமுகமாய் வருகின்ற யமுனையோடு சேருங்கால், தென்மேற்காய்த் திரும்பிச் சங்கமமாதலின் திருவேணி பச்சிமவாகினியென்று பெயர்பெறும். அதவ்வாறுதல் மாகமான்மியத்தும் பிரயாகை மான்மியத்துங் காண்க.

இனிக்கங்கை காசியில் உத்தரவாகினியாதற்குக் காரணம்: இமாசலத்தில் பகீரதன் கங்கையைப் பூமியில் பிரவர்த்திக்கும்படி கேட்க, அப்பொழுது கங்கை உன்னுடையகாரிய மெவ்விடத்திருக்கின்றது, சிவராசதானியாகிய காசி யெவ்விடத்திருக்கின்றது, அக்காசிக்குப்போய் விசுவேசர் கிருபையைப்பெற்றுப் பின் உன்காரியத்தை முடிக்கிறேனென்று சொல்ல, பகீரதன் சிவ ராசதானியாகிய காசி அக்கினிதிக்கி லிருக்கின்றது, என்காரிய மதற்குக் கிழக்கேயிருக்கின்றதென்று சொன்னுன். அப்பொழுது அதைக்கேட்டகங்கை கிழக்குமுகமாய் வந்து, காசியின் கீழ்பாகத்தில் உத்தரவாகினியாய்த் திரும்பி, விசுவேசரநுக்கிரகம்பெற்று, அதிபரிசுத்ததையாய், பின் பூர்வவாகினியாய்ச் சென்றதென்று, சனற்குமார சம்மிதையிற் கூறப்பட்டதுண

ர்க. இக்கங்கையில் வஸ்திரந்தோய்த்தல், அழுக்குத் தேய்த்தல், எண்ணெய்தேய்த்துக் குளித்தல், நின்மாலியங்களைப் போடுதல் குற்றம்.

இக்கங்கை கலியுகத்தும், விசேடமுடைய தென்பது; கிருதயுகத்தி லெல்லாத்தீர்த்தமும் பரிசுத்தமுள்ளன; திரேதாயுகத்தில் புட்கரம் விசேடமுள்ளது; துவாபரயுகத்தில் குருக்ஷேத்திரம் விசேடம்; கலியுகத்தில் கங்கை விசேடமென்றும் பவுடிகபுராணத்தாற் காண்க.

இக்கங்கையில், அசிவருண சங்கமத்தில், ஸ்நானம்பண்ணினல் பாவங்கள் போகும். அசிவருணைகளென்னு மிவ்விரண்டுநதிகளும், விட்டுணு பாதாங்குட்டங்களினின்று முண்டாயின.

அநேகசன்மத்திற் செய்த புண்ணியத்தால்,கிடைத்தற்குரிய இக்கங்கையில் ஸ்நானஞ்செய்தலே யன்றி ஒருலேசத்தைப் பத்தியோடு பிராசனஞ் செய்தலும், புரோட்சித்தலும் விசேடமாம்.

இரண்டுபட்சத்து அட்டமி, சதுர்த்தசிகளினும், சூரியசந்திர கிரகணங்களினும்,கார்த்திகைமாதத்தினும், அமாவாசை பூரணைகளினும், விஷுபுண்ணிய காலங்களினும், அயனங்களினும், குருக்ஷேத்திரத்தி லிருக்கின்ற சரஸ்வதியும், அங்கு பரசுராமரால் செய்யப்பட்ட அஞ்சு குண்டமும், நைமிசாரணியத்தி லிருக்கின்ற சக்ரதீர்த்த முதலியனவும், பிரயாகைத் திருவேணிதீர்

தமும், சமுத்திரதீர்த்தங்களும், புட்கரம், பிரபாசம், விரசை, முதலிய தீர்த்தங்களும், மேருமந்தரங்களிலிருக்கின்ற தீர்த்தங்களுமாகிய இவை காசியிற் கங்கையையடைகின்றன. ஆதலின், இவ்விசேட சாலங்களிலிதில் ஸ்நானஞ்செய்ய வேண்டும். இக்காலங்களில் ஸ்நானஞ்செய்கின்ற புண்ணியவான் அனேக யாகபலனையடைகின்றான். அவனுக்கு நாள்தோறும் வளர்பிறைபோலப் புண்ணியவிருத்தியுந், தேய்பிறைபோல பாபக்ஷயமு மாகின்றன.

---

## கங்காதாரணம்.

ஸைமநாக புத்திரியான மேனைக்குப் பதியாகிய இமவான்செய்த தவத்தால் சிவபிரானைத் தமக்குவாருகப் பெறத்தக்க இரண்டு கன்னிகைகள் அவதரித்தனர். அக்கன்னிகைகளுள் மூத்தபுத்திரிக்குக் குடிலாசத்தியென்றும் இளையபுத்திரிக்கு உமாசத்தியென்றும் பெயர். அவருள் இளையபுத்திரியாகிய உமை தவஞ்செய்து சிவபிரானை விவாகஞ் செய்துகொள்ளுமுன் தாரகன் முதலிய அசுரரால் பிடிக்கப்பட்ட இந்திரன்முதலிய தேவர்கள் குமாரசுவாமியை உற்பவிப்பித்து அவ்வசுரரைக் கடியுநிமித்தம் சிவவீரியத்தைத் தரித்தற்கு யோக்கியதை யுடையளான குடிலாசத்தியை அவள் தந்தையான இமவான் சிவபிரானை வரனுக உத்தேசித்து வாக்குத்தத்தம் செய்து கொடுக்க அவளைப் பூமியினின்றும் பிரமனிருக்கும் சத்தியவுலகத்தில் கொண்

டுபோய் பிரமனைநோக்கி இக்கன்னிகை சிவவீரியத்தைத் தரிக்கும் யோக்கியதையுடையளாக ஆசீர்வதிக்க வேண்டுமென்று கேட்டனர். வருங்காலமுணர்ந்த பிரமன் இவள் சிவவீரியத்தை நிசரூபமாயும் சலரூபமாயும் தரிக்கவேண்டியவளாக இருக்கின்றாள் என்பதை அறிந்து இவள் உக்கிரமான அச் சிவவீரியத்தைத் தரித்தற்கு அருகமுடையளல்ல வென்றனர். அதைக்கேட்ட குடிலை கோபத்தோடு நான் அதை விஷ்ணு ஆசீர்வாதம்பெற்றுத் தரிக்கின்றேன் என்றனள். பிரமன் அச் சொல்லை வியாசமாய்வைத்து என்சொல்லை நீ மறுத்து முனிந்தமையால் சலரூபமாவையெனச் சபித்தனர்.

அப்பொழுது அக்குடிலை சத்தியவுலகமுழுதும் வியாபித்து சலரூபமாய்ப் பிரவாகித்தனள். அதைக்கண்டு பிரமன் நாலுவேதங்களினுள்ள வாக்குமயமான மந்திரங்களால் அந்தக்கங்கையைப் பந்தித்தனன். அதனால் அது அடங்கிச். சத்தியவுலகத்தும் பிரமன்சடையினும் பிரவாகித்து நின்றது. பின் சிவபிரான் உமையைத் திருக்கல்யாணஞ் செய்தனர். அதன்மேல் அவர் சந்நிதியையடைந்த பிரமாதி தேவர்கள் புத்திரோற்பத்தியைவிரும்பிச் சிவபிரானைப் பிரார்த்தித்தனர். அப்பொழுது அவர் தமது நெற்றிக்கண்ணினின்றும் தேசோமயமான வீரியப்பிழம்பை உற்பவிப்பித்தனர். அது யாவராலும் தரித்தற்கரிய உக்கிரமான தேஜசு உடைத்தாயிருந்தது. அதைத்தாங்கிக் கங்கையில் விடும்படி தேவர்கள் அக்கினிதேவனுக்கு அநுமதிகொடுத்தனர்.

அவன் அதைத் தாங்கலாற்ருது தன்னெளியிழந்து வரு
த்தமுற்று சத்தியவுலகிற் புகுந்து அக்குடிலைகங்கையி
லிட்டு இது பரமேசுரனுடைய உக்கிரமான வீரியம்
இதை நீ தரித்தால் உதிக்கின்றபுத்திரன் உன் புத்திர
ஞவானென்றனன். அக்கங்கை அதை அப்பொழுது
மனமகிழ்ந்து தரித்துக் கருப்பவதியாய் ஐயாயிரம் வரு
டம் சென்றதின்மேல் பிரமனிடத்திற் சென்றது.
அதைப் பிரமன்பார்த்து எவ்வாறு கருப்பவதியாயினை
யென்று வினவினர். அக்கினியினுலிடப்பட்ட சிவவீரி
யத்தைத் தரித்துக் கருப்பவதியானேன் என்ன, அது
கேட்ட பிரமன் ஆலோசித்து உதயாசலத்தில் சிவசம்
பந்தமாய் நூறுயோசனை பரிமாணமுள்ள சரவணவாவி
யில் இக்கருப்பத்தை வை அது அங்குப் பதினுயிரம்
வருடம் சென்று புத்திரனுகுமென்றனன். அவர் அநு
மதிகொண்டு அவ்வாறு குமாரசுவாமியை சரவணவாவி
யிலுதிப்பித்து மீண்டும் தானிருந்த சத்தியவுலகத்தை
அடைந்து முன்போலிருந்தது. குமாரசுவாமி உதித்து
தாரகாதி அசுரரைவென்று தேவர்சிறைமீட்டுத் தேவர்
சேனுபதியெனப் பெயர்பெற்று விளங்கினர். மேல் திரி
விக்கிரம அவதாரமாயிற்று. அவ்வவதாரத்தின்பின்
நிகழாநின்ற இச்சுவேதவராககற்பத்தில் கபிலர் சாபத்
தால் சாம்பரான தன் பிதாமகர்களான சகரர்கள் சத்
தியவுலகத்தில் இருக்கும் ஐமவதியாகிய இக்கங்கை
பரிசித்தாலன்றி சுவர்க்கம் புகாரென்று துணிந்து திலீ
பபுத்திரனுன பகீரதன் இக்கங்கையைப் பூமியிற்கொண்

டுவரும்படி பிரமனைநோக்கித் தவஞ்செய்தான். பிரமன் பிரசன்னனாய் நீ கேட்கும் ஐமவதியாகிய கங்கை சத்தியவுலகத்திலிருக்கின்றது. அதை நீ பூமிவழியாய்ப் பாதலத்திற் கொண்டுபோக வரம் கொடுத்தேனென்றார். மேல் அவன் கங்கையைநோக்கித் தவஞ்செய்ய கங்கை பிரமன் வரத்தின்படி சத்தியலோகம் விட்டு பூமியிற் புகுந்து பாதலம்போய், உன்பிதாமகர்களை சுவர்க்கம் புகுவிக்கின்றேன், பூமியில் பிரவாகிக்குங்கால் என்வேகத்தை மகேசுரனாலன்றித் தரித்தல்கூடாது. தரியாவழி பூமியைப்பேதித்து பாதலத்தை அடைவேனென்றது: மேல் அவன் பிரமனைநோக்கித் தவஞ்செய்ய பிரமன் பிரசன்னனாய் கங்காதாரணம் ஈசுரனாலன்றி அன்னியர்க்கு சாத்தியமன்றென்று கங்கை கூறியபடியே கூறினன். அதைக்கேட்ட பகீரதன் இது அனன்னிய சாத்தியமென்பதை நன்குணர்ந்து கோகர்ணத்தை அடைந்து சிவபெருமானைநோக்கித் தவஞ்செய்தான். சிவபெருமான் பிரசன்னராய் கங்காதாரணஞ் செய்யவேண்டுமென அவன்கேட்ட வரத்தைக் கொடுத்தனர். யாவராலும் தரித்தற்கரிய மகா சுவாலையோடு கூடிய ஆலாகலத்தை பிரமாதிதேவர்கள் சரணாகதியாய் அடையுங்கால் அவர்களையும் உலகத்தையும் இரட்சிக்குநிமித்தம் முன் பானம்பண்ணினதுபோல் அனன்னியசாத்தியமான இந்த ஐமவதிகங்கையையும் உலக சம்ரட்சணையின்பொருட்டும் அகத்தியனால் பானம்பண்ணப்பட்ட சமுத்திரம் பரிசுத்தமாதற்பொருட்டுமே

அந்தப் பகீரதன் வேண்டத் தரித்தருளினர். இக்கங்கை சத்தியவுலகத்தில் பிரமசாபத்தால் நதிரூபமடைந்த இமவானது புத்திரியாதலால் ஐமவதியென்றும் பகீரதன்பொருட்டு வந்ததனல் பாகீரதியென்றும் சத்தியலோகத்தினின்றும் சிவசிரசிற் சேர்ந்து அதிபரிசுத்தையாய் பின் சிவசிரசில்நின்று பகீரதன்பின் பூமியிற்சென்று ஏகதேசத்தால் பாதலம்புகுதலால் திரிபதகையென்றும் நாமங்களை அடைந்தது.

சிலபுராணங்களில் பிரமகமண்டலத்தில் உதித்ததென்றும் விஷ்ணு பாதாங்குட்டத்தில் உதித்ததென்றும் கூறியதென்னை? அது திரிவிக்ரம அவதாரகாலத்தில் பிரமாண்டகடாகம் பேதிக்கும்படி மேலெடுத்த இடதுபாதப் பெருவிரலில் பிரமன் அப்பாதபூசை செய்யுநிமித்தம் தனது கமண்டலத்தில் வியாப்தமாயிருந்த குடிலைகங்கையை அபிஷேகம்செய்ய அது அம்மூர்த்தியின் அங்குட்ட நுனிவழி ஓடிப்பெருகி ஏகதேசமான வோரம்சத்தால் தேவர்களிருக்கும் சுவர்க்கத்தில் அவர் ஸ்நானஞ்செய்தற்கு உபயோகமாய்த் தங்கி மேல் வேருரம்சத்தால் மேருசிகரத்தின்கணுள்ள பிரமபுரியில் விழுந்து கிழக்குமுதலியநாலுதிக்கினும் முறையே சீதை, அலகநந்தை, சக்ஷு, பத்திரையென்னும் பெயர்களோடு சென்று சமுத்திரகாமியாயிற்று. மேல் அது பாதலத்தில் புகுந்து பகீரதபிதிர்களை சுவர்க்கம் புகுவிக்கவில்லை.

இதுவும் குடிலையே ஓர்சிறு அம்சத்தால் பிரமக மண்டலத்தினின்று விடப்பட்டு திரிவிக்கிரம சரணும் புச அங்குட்டவழியே வந்து மேருவில் விழுந்ததென் பது வாமனபுராண வசனத்தாலும் கேதாரகண்ட வச னத்தாலும் நிச்சயிக்கப்படும். அதனால் அக்காலத்து ஏகதேசமான ஓரம்சத்தால் அக்கங்கை பிரமகமண்ட லத்தினின்றும் விடப்பட்டமையால் பிரமகமண்ட லோற்பன்னையென்றும், விஷ்ணுபாதத்தில் நின்றும் பிரவாகித்தமையால் விஷ்ணுபதியென்றும் அவசரநா மங்களை அடைந்தது. அவ்வாறு பகீரதனுக்குமுன் பிரமாத்திரியில் திரியம்பகேஸ்வர சமீபத்தில் கௌத மமுனிவரால் பிரார்த்திக்கப்பட்டு கௌதமியென் றும் விருத்தகங்கையென்றும் பெயர்பெற்றிருந்தது. இவை அவாந்தரநாமங்கள். இன்னும் புட்கரத்தில் கோரூபந்தரித்து பூமியில்விழுந்து பாதலம்போய் பிரம விஷ்ணு உருத்திரர் என்னும் மும்மூர்த்திகளின் பெய ரால் மூன்று தீர்த்தங்களாயினவென்று புட்கரமான்மி யத்துங் கூறப்பட்டது. இவ்வாறே விஷ்ணுபதியென் னும் நாமமும் அக்காலத் தடைந்ததேயன்றி மற்றோர் காரணத்தாலன்று.

இவ்விஷ்ணுபதியைச் சிவபிரான் தரிக்கவில்லை. பின் பகீரதன்பொருட்டு சத்தியவுலகத்தினின்றும் வந்த பாகீரதியே தரித்தனர். இது பகீரதன்பொருட்டு, பூமி யில் வருங்கால் பிரவாகரூபமான ஓரம்சம் சத்தியவுல கத்துவைத்து பூர்ண அம்சத்தோடு வந்ததென்பது

அதினுடைய உக்கிரமான வேகத்தாலும் சிவபிரானையன்றி அன்னியர் தரித்தற்கு அருகரல்லாமையானும், சத்திய உலகின்கணின்று சிவசிரசில் விழுந்தமையானுமறிக.

சைவபுராணமாகிய கேதாரகண்டத்து விஷ்ணுபதி மேருவில் விழுந்ததென்பதுபோல விஷ்ணுபுராணத்தும் அவ்வாறு கூறுதலின் விஷ்ணுபாதகங்கையை ஈசுரன் தரிக்கவில்லையென்பதே நிச்சயம். திரிவிக்ரம அலதாரகாலத்து மேருசிகரத்தில் விழுந்து விஷ்ணுபக்தனுன துருவனுல் வகிக்கப்பட்டு நாலுதிக்கினும் சமுத்திர காமியாய்ச்சென்ற விஷ்ணுபாதகங்கையைச் சிவபிரான் தரித்தாரென்பது காலத்தானும் இடத்தானும் மாறுபடுதலின்.

அக்காலத்து மேருவில்விழுந்து நாலுதிக்கினும் சென்ற அம்சமன்று; சத்தியவுலகத்துக் குடிலைகங்கை பரிசுத்தமாகும்படி விஷ்ணுபதி ஓரம்சத்தால் அதனோடு சேர்ந்திருந்தது. அதனையே தரித்தாரெனின் நன்கு சொன்னுய். சர்வதேவ பூச்சியரான சிவபிரானது சிரசில் விழுந்த கங்கை பவித்திரங்கட்கெல்லாம் பவித்திரம் மங்களங்கட்கெல்லாம் மங்களம் ஆயிற்றென்று கூர்மபுராணத்தும், சிவசிரசில் விழுந்தகங்கை அதிபவித்திரமெனத் தேவர் கொண்டனரென்று இராமாயணத்தும், கூறுதலின் முன்விழுந்த விஷ்ணுபாத கங்கையினும் சிவசிரசில்விழுந்த இப்பாகீரதிகங்கை அதி பரிசுத்த முடையதென்பதும்,

இராமாயணத்தில் சத்திய உலகின்கண்ணிருந்து பகீரதன்பொருட்டு வந்த ஐமவதிகங்கை சிவசிரசில்வி ழுந்து வேகமடங்கி வெளிப்படச் சக்தியின்றி யிருக் குங்கால் பகீரதன் பிரார்த்தனையின் பொருட்டு சடை யிலடங்கி நின்றவாறுசிற்க சிறிதம்சம் விந்துசரசில் விட அது பகீரதன்பின் பூமியிற்சென்று பாதலம் புகு ந்து பகீரதபிதிரர்களை சுவர்க்கம் புகுவித்தது என்றதே யன்றி சத்தியவுலகத்து விஷ்ணுபதி தங்கியிருந்து வந்த தென்றதற்கு எவ்வளவும் இயைபின்றென்பதும் உற்று நோக்கி இதுவும் பொருந்தாமை தெற்றென வுணர்க. இன்னும் அதுவே அங்கிருந்து பகீரதன்வேண்ட வந்த தாயின் முன் மேருவில் விழுங்கால் துருவன் தரித்தி ருக்கவும் பகீர்தன் வேண்டுங்கால் என்னை மகேசுரன ன்றி அன்னியர் தரிக்கமாட்டார்ரெனப் பகீரதன்பொரு ட்டுக் கங்கை கூறியதும் அவ்வாறு பிரமன் கூறிய தும் பயன்படாதொழியும். பகீரதனும் பரமேசனைநோ க்கித் தவஞ்செய்ய வேண்டுவது மின்றுமென்க.

இவ்வாறிது சிறுவரும் எளிதில் உணரக்கிடத்த லின் பாகவத முதலியவற்றிற் திரிவிக்கிரமசரணம்பு யத்தினின்றும் விழுந்த விஷ்ணுகங்கையைச் சிவன்தரி த்து மங்களமுடையரானர் என்றற் றொடக்கத்தன, மேல்வருங்காலத்து சிவபிரான் தரிக்கும் ஐமவதியின் அம்சமே விஷ்ணுபாத கங்கையென்னும் கருத்தால் துதிபரமாய்க் கூறியதென்பது அறியாது கிணற்றுத் தவளை நாட்டுவளப்ப மறியாததுபோல் வெகுவசன

விரோதம் கூறினரென ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதரும் பரி யாசஞ்செய்தமை பிர்மதர்க்கஸ்த்தவ வியாக்கியானத் திற் காண்க. அசிவனுகில் சிவனுதல்வேண்டும் சிவன் சிவனுனென்றதனுல் அக்கருத்தேயாம்.

---

## அபூர்வநிரூபணம்.

—:*:—

அதிக பரிசுத்தமான இச்சிவகங்கையில் ஸ்நா னஞ்செய்தால் சுவர்க்காதி புண்ணிய உலகமடைதற்கு ஏதுவான தன்மமும் நரகமடைதற்கு ஏதுவான அதன் மத்தின் நீக்கமும் ஆகிய இவ்விரண்டும் உண்டாகின் றன. தன்மம் அதன்மம் இவ்விரண்டிற்கும் அபூர்வம் அதிர்ஷ்டம் சூட்சமகன்மம் என்பன பரியாயங்கள் இது எத்தாற் பெறப்படுமெனில்.

அபூர்வம் உள்ளவழி சுவர்க்கநிரயங்களின் உண் மையும் அஃதில்வழி அவற்றின் இன்மையும் ஆம் என் னும் நியமத்தாலென்க. இவ்வாறு காரணகாரிய நிய மம் உண்மையின் நையாயிகநூலாரும், சாங்கியநூலா ரும் முறையே பலபரியந்தநில்லாது கேடடைந்து நாட்பட்டுநின்ற கங்காஸ்நானம் கொலைமுதலிய புண் ணியபாப கன்மங்கள் பலத்தை உதிப்பித்தற்கு அபூர் வமின்றி சாமார்த்திய முடையன வல்லவென்றும் தன் மத்தால் சுவர்க்கம்வரும் அதன்மத்தால் நிரையம் வரு மெனவுங் கூறினர்.

அது எவ்வாறெனில் பிரத்தியக்ஷாதி அநுபவம் நட்டமாயவழி பாவனையென்னும் சமஸ்காரம் ஸ்மிருதியை உதிப்பிக்கும் வாறுபோலென்க.

அதிர்ஷ்டம் காரணமன்று. அழிவுபாட்டபாவமென்னும் தொம்ஸம் புண்ணியபாவரூபகன்ம நட்டமாயவழிதானழிவின்றி நிற்றலின் சுவர்க்கநிரயங்களை உண்டாக்குதற்கு அது காரணமாமெனின்,

தொம்ஸம் அபாவபதார்த்தமாதலினால் பாவபதார்த்தத்தைக்குறித்துக் காரணங்கூறல் உடன்பாடன்மையினாலும், தொம்ஸம் அழிவின்றிநிற்றலில் சுவர்க்கநிரயங்கள் அநுபவமுடிவினும் மேன்மேல் விளைக்கவேண்டுதலினாலும்,

தன்மம் சண்டாளநீரில் தோய்தலினாலும், நீரையடித்தலினாலும், கண்டகிநதியில் நீந்துதலினாலும், தான் செய்த புண்ணியத்தை இது செய்தேனென விதந்து கூறுதலினாலும், புண்ணியம் நசிக்கும் என்றலும், கங்காஸ்நானமுதலிய பிராயச்சித்தத்தால் பாவம் நசிக்குமென்றலும், எல்லாநூலார்க்கும் உடன்பாடாதலினாலும், தொம்சத்திற்குத் தொம்சமின்மை பெறப்படுதலினாலும், அத்தொம்சம் காரணமாதல் யாண்டையதென மறுக்க.

இதனால் புண்ணியமென்றும் பாவமென்றும் இருவகை யதிர்ஷ்டம் அங்கீகரிக்கப்படும். இவ்வதிர்ஷ்டத்தை ஆத்மகுணமென்பர் நையாயிகர். மீமாம்சைநூ

லாரும், வேதாந்திகளும் அந்தக்கரண தன்ம மென்பர்; சைவசித்தாந்திகள் சூக்குமகன்மமெனக்கூறி புத்திகுணமென்பர். இவைகளின் பேதம் ஈண்டுவிரிப்பிற் பெருகும்.

---

## ஸ்ரீகாசியிற்செய்யும்யாத்திரை நிர்ணயம்.

---:*:---

மணிகர்ணிகை முதலிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்பவர்கள் செய்யும் யாத்திரை நித்தியயாத்திரையென்றும், நைமித்திக யாத்திரையென்று மிருவகைப் படும். அவற்றுள், நித்தியயாத்திரை முதலிற்செய்கின்ற பிரதமயாத்திரை யென்றும், மூன்றுபத்தி நான்காகிய நாற்பத்திரண்டிலிங்கயாத்திரையென்றும், அந்தர்க்கிரகயாத்திரையென்றும், மூவகைப்படும்.

முதலிற் செய்கின்ற பிரதமயாத்திரையும், நாற்பத்திரண்டிலிங்கயாத்திரையும், சாமானிய யாத்திரையென்றும், அந்தர்க்கிரக யாத்திரை விசேஷயாத்திரையென்றும் பெயர்பெறும்.

நைமித்திகயாத்திரை திதியாத்திரையென்றும், வாரயாத்திரையென்றும், நக்ஷத்திரயாத்திரையென்றும், பக்ஷயாத்திரையென்றும், மாசயாத்திரையென்றும், இருதுயாத்திரையென்றும், பஞ்சக்குரோசயாத்திரை யென்றும் எழுவகைப்படும்.

---

## பிரதமயாத்திரை.

——:*:——

இவற்றுள் முதலிற்செய்கின்ற பிரதமயாத்திரை, மணிகர்ணிகாஸ்நானஞ்செய்த பின்பு, ஞானவாவியில், ஸ்நானஞ்செய்து, துண்டிவிநாயகரையும், தண்டபாணியையும், விசுவேசரையும் தரிசித்து, கணகாலம் முத்திமண்டபத்திலிருந்து,பின்பு அன்னபூரணியையும், காலவயிரவரையும், விந்துமாதவரையும் தரிசித்து அன்று பிரவேசதினத்தில் மாத்திரம் தீர்த்தச்சிரார்த்தஞ் செய்வது. இந்தயாத்திரை பிரதிதினமுஞ்செய்யலாம்.

---

## ஸ்ரீதுண்டிவிநாயகர்மகிமை.

——:*:——

துண்டிவிநாயகர் காசியில் எல்லாப்பாவங்களையும், எல்லாவிக்கினங்களையும் போக்குகின்றவர். எல்லாப்போகங்களையுங் கொடுக்கின்றவர். இவர் விசுவேசருக்கு மிகுந்த பிரியமுள்ள புத்திரர். இவருக்கு மதுரமான மோதகம் முதலியவற்றை நிவேதித்துத் தோத்திரஞ்செய்து எவர்கள் வழிபாடு செய்கின்றார்களோ அவர்கள் புத்திரருக்குச்செய்யும் உவகை தந்தைதாயர்களுக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுக்குமாதலால் துண்டிவிநாயகரது கிருபையோடு, அன்னபூரணி விசுவேசர் கிருபையுமாக மூன்று பிரயோசனத்திற் கருகராகின்றார்கள்.

---

## ஸ்ரீதண்டபாணிமகிமை.

தண்டபாணி கணங்களுள்ளும், தேவருள்ளும், மனுடர்களுள்ளும்,முதன்மையுள்ளவர்; இவர் காசியில் மரிக்கின்றவர்களுக்கு யமவாதனைவராமல், காக்கும்படியான தண்டத்தைத் தரித்திருக்கின்றவர்; காசிவாசிகளை இரட்சிக்கின்றவர்; தன்மாத்துமாக்களுக்கு விசுவேசர் பிரமோபதேசம்பண்ண இவர் திவ்வியசரீரங் கொடுப்பர். இவரிடத்தில் பத்தியில்லாதவர்க்குக் காசிவாசங் கூடாது; இவரைப் பூசித்துத் தோத்திரஞ்செய்தல் காசிவாசத்து விக்கினங்களைப் போக்கும்.

---

## ஸ்ரீவிசுவேசுவரர்மகிமை.

விசுவேசலிங்கம் சோதிலிங்கங்களுக்கெல்லாம் மேலான இலிங்கம், இவ்விலிங்கம் பிரமவிட்டுணுவாதி தேவதைகளை இரட்சிக்குநிமித்தம், தானே தோன்றி, மோக்ஷலக்ஷ்மிக்கு வாசஸ்தானமாகிய திவ்வியவிமானத்திருக்கின்றது; ஆதலால், இந்தக்காசி மூன்றுலோகத்துக்கும் விசேடமான சிவராசதானியென்றும்,பெயரையுடையது. இதில் தேவாதி தேவராகிய ஸ்ரீவிசுவேசரைப்பூசித்தலிற் பரிசதோடமில்லை. பூசிக்கின்றவர்களெல்லாப்பாவங்களில் நின்றும் நீங்கி யெல்லாப்புண்ணியங்களையுமுடையராய் துக்கரூபமாகிய சமுத்திரத்திலழுந்தியிருத்தலை நீங்கிச் சுகரூபமாய் நிரதிசய இன்பமுடைத்தாயிருக்கின்ற வீடடைதற் குரியராகின்றூர்

கள். இந்த விசுவேசரைத் தரிசித்து அன்னியதேசத்தையடைந்தவன் சன்மார்க்கத்தில் மோக்ஷமடைதற்குச் சந்தேகமில்லை. இந்த விசுவேசருடைய மோக்ஷலக்ஷ்மிக்கு வாசஸ்தானமான விமானத்தையுங் கலசத்தையுந் தரிசித்தவனைவிட்டு மகாபாவங்கள் நீங்கிப் போகின்றன. விமானத்திலிருக்கின்ற விடபக்கொடியைத் தரிசித்தவன் விசுவேசர் பிரசாதத்துக்கு அதிதியாகின்றான். இந்தவிமானத்தைப் பக்ஷிகள் பிரதக்ஷிணஞ் செய்தாலும் அவை முத்தான்மாக்களாகின்றன. மூன்றுதரமாவது ஐந்துதரமாவது பிரதக்ஷிணஞ்செய்து நமஸ்கரித்துத் தன்னையடைந்தவர்களுக்கு யெல்லாப்பிரயோசனத்தைக் கொடுப்பவராயும் பக்தசனப்பிரியராயும் தேவாதிபராயும் காசிப்பிரியராயு மிருக்கின்ற விசுவேசரைத் தோத்திரஞ்செய்து முத்திமண்டபத்தில் கணகாலம் வசித்தவர்கள் முத்தியின்பத்துக்கருகராகிறார்கள்.

காசிகாண்டத்தில் இருக்கின்றனவாகக் கூறப்பட்ட முத்திமண்டபம், சிங்காரமண்டபம், ஐஸ்வரியமண்டபம், ஞானமண்டபம் இவைகளுள் இக்காலத்து முத்திமண்டபமாத்திரம் வழங்குகின்றது.

---

## ஸ்ரீ அன்னபூரணிமகிமை.

—:*:—

மோக்ஷத்தை விரும்பினர்க்கு மோக்ஷத்தையுந் தருமத்தை விரும்பினர்க்குத் தருமத்தையும் அருத்த

த்தைவிரும்பினர்க்கு அருத்தத்தையுங் கொடுக்கும் பாதபத்மத்தை யுடைத்தான அன்னபூரணிதேவிகாசியில் வசிக்கின்றவர்கள் பெற்றபொருளைப் பரிபாலனஞ்செய்தலும், பெறுதபொருளை யடையச்செய்தலுமாகிய யோகக்ஷேமங்களைச்செய்து விசுவேசர் கருத்தின்படி மோக்ஷசம்பத்தைப் பிக்ஷையாகக் கொடுக்கின்றவள். இந்த அன்னபூரணியைப் பூசித்து எட்டுத்தரம் பிரதக்ஷிணஞ்செய்து உன்னடியர் பாததூளியாயிருக்கின்ற யென்னை இரக்ஷியென்று நமஸ்கரித்துத் தோத்திரஞ்செய்கின்றவர்கள் புருடார்த்தங்களை யடைவர்கள்.

---

## ஸ்ரீகாலவயிரவர்மகிமை.

—:*:—

காலவயிரவர் காசியில் வசிக்கின்றவர்களுடைய விக்கினங்களையும் பாவங்களையும் போக்குகின்றவர். இவரைக் காசியில் வழிபடல் மோக்ஷத்திற்குக் காரணம்; அதனுல் எல்லாப்பாவங்களும் நசிக்கும். விசுவேசரிடத்திற் பத்தியுடையவர்களும் இவரிடத்திற் பத்தியுடையராதல் வேண்டும். பத்திபண்ணுதவர்களுக்கு மேன்மேலும் விக்கினங்களைக் கொடுப்பர். யாதொன்றை விரும்புகின்றுர்களோ அவர்இவரைச்சேவித்தால் அப்பலனையடைவர். காலோதகதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து தருப்பணஞ்செய்தவர்களுடைய பிதிர்கள் நிரயத்தினின்றும் நீங்குவர்.

ஆமர்த்தகேசரைத் தரிசித்தவர்கள் ஒருபக்ஷஞ் செய்த பாவங்களில் நின்றும் நீங்குவர். ஆமர்த்தகபீட சமீபத்திலிருந்து செபஞ்செய்தவர்கள் வேண்டிய எல்லாசித்திகளையுமடைவர்.

---

## ஸ்ரீபிந்துமாதவர்மகிமை.

---

பிந்துமாதவர் காசிவாசிகளைப் பரிபாலனஞ் செய்கின்றவர். காசியிற் பிரியமுள்ளவர். இவரைத் தரிசித்தாற் காசிவாசத்திற் கேதுவும் மோக்ஷசாதகமு முண்டாகின்றன.

காசிகாண்டத்தில் முதலில் முத்திமண்டபத்தில் கணம் வசித்து, ஆதித்தன், துரௌபதி, விட்டுணு, தண்டபாணி, மயேஸ்வரன், துண்டிராசன் இவர்களைத் தரிசித்துப் பின்பு ஞானவாவியில் ஸ்நானஞ்செய்து, நந்தி கேசுவரர், தாரகேசுவரர், மகாகாளேசுவரரென்னும் இவர்களைப் பூசித்துத் திரும்பத் தண்டபாணி, விசுவேசர், அன்னபூரணி, காலவயிரவர் இவர்களைப் பூசித்து தரிசிப்பதென்று ஓர்பிரகாரமாக இருபகுப்பாய்க் கூறப்பட்டன. துரௌபதி அக்ஷயபாத்திரம் பெறும் பொருட்டு உபாசித்தலால், இவ்வாதித்தனுக்கு துரௌபாதித்தனென்று பெயர். அதனுல் அவ்வாதித்தசமீபத்தில் துரௌபதியையும் தரிசிக்கவேண்டுமென்று கூறப்பட்டது.

இது செய்யக்கூடாதவர்கள் மணிகர்ணிகாஸ்நானம், ஞானவாவிப்புரோக்ஷணம், விசுவேசர், அன்னபூரணி, துண்டிராசர் தரிசனம் அவசியம் பிரதிதினமும் பண்ணவேண்டும்.

---

## நாற்பத்திரண்டுலிங்கயாத்திரை.

---

காசியிலிருக்கின்ற எண்ணிறந்த சிவலிங்கங்களில் மூன்றுபதிநான்காய்க் கூறப்படும் விசேட லிங்கங்களாவன:—

ஓங்காரேசர், திரிலோசனர், மகாதேவர், கிருத்திவாசர், இரத்திநேசர், சந்திரேசர், கேதாரேசர், தன்மேசர், காமேசர், விசுவகர்மேசர், மணிகர்ணேசர், அவிமுக்தேசர், ஸ்ரீவிசுவேசர், என்றும் முதற் பதினான்கும், அமிருதேசர், தாரகேசர், ஞானேசர், கருணேசர், மோக்ஷத்துவாரேசர், சொர்க்கத்துவாரேசர், பிரமேசர், இலாங்கலேசர், விருத்தகாளேசர், இடபத்துவசேசர், சண்டீசர், நந்திகேசர், மகேசர், சோதிரூபேசர், என்றும் இரண்டாவது பதினான்கும், சயிலேசர், சங்கமேசர், சுரலிநேசர், மத்திமேசர், இரணியகற்பேசர், ஈசானேசர், கோப்பிரேக்ஷேசர், விடபத்துவசேசர், உபசாந்தேசர், சேட்டேசர், நீவாகேசர், சுக்கிரேசர், வியாக்கிரேசர், சம்புகேசர் என்றும், மூன்றாவது பதினான்குமாகிய நாற்பத்திரண்டுமாம். இந்நாற்பத்திரண்டையும் பூசித்துத் தரிசிப்பது நாற்பத்திரண்டு லிங்கயாத்திரை.

இந்த நாற்பத்திரண்டு லிங்கங்களையும் கிருஷ்ணபக்ஷப் பிரதமைமுதல் சதுர்த்தசி பரியந்தம் பிரதிதினமும் யாத்திரை செய்யவேண்டும். அதுவன்றி, ஓங்காராதிபதி ஞானுலிங்கங்களுக்கும், பிரதமைமுதல் சதுர்த்தசிபரியந்தம் யாத்திரை செய்யலாம், அதுவன்றி நாற்பத்திரண்டையும் சதுர்த்தசியில் தவறுமல் யாத்திரை செய்ய வேண்டும் இக்காலத்து இந்தயாத்திரை ஒருங்கு ஒருநாளிற்செய்தலருமை.

---

## அந்தர்க்கிரகயாத்திரை.

:*:

முதலில் மணிகர்ணிகையில் ஸ்நானஞ்செய்து முத்திமண்டபத்திலிருந்து மோதன், பிரமோதன், சுமுகன், துன்முகன், கணநாயகன் என்னும் பஞ்சவிநாயகரை நமஸ்கரித்து, விசுவேசரைப் பூசித்துப் பின்பு சங்கற்பஞ்செய்து, மவுனத்தோடு மணிகர்ணிகையில் ஸ்நானஞ்செய்து, மணிகர்ணிகேசர், கம்பளாசுவதரேசர், வாசுகீசர், பருவதேசர், கங்காகேசவர், இலளிதாதேவி, சராசந்தேசர், சோமநாதர், வராகேசர், பிரமேசர், அகத்தீசர், கச்சியபேசர், அரிகேசவர், வயித்தியநாதர், துருவேசர், கோகர்ணேசர், ஆடகேசர், கீகசேசர், [illegible]பூதேசர், சித்திரகுப்தேசர், சித்திரகண்டாதேவி, பசுபதீசர், பிதாமகேசர், கலசேசர், சந்திரேசர், வீரேசர், விங்தேசர், அக்கினேசர், நாகேசர்' அரிச்சந்திரேசர், சிந்தாமணிவிநாயகர், சேனுவிநாயகர், வசிட்டவாமதேவர், திரிசந்தீசர், விசாலாக்ஷிதேவி, தருமேசர், விசு

வவாகுகாதேவி, ஆசாவிநாயகர், விருத்தாதித்தன், சதுர்வத்திரேசர், பிராமீசர், மனப்பிரகாமேசர், ஈசானேசர், சண்டிசண்டேசர், பவானிசங்கரர், துண்டிராசர், இராசராசேசர், இலாங்கலீசர், நகுலேசர், பரான்னேசர், பாத்திரவியேசர், பிரதிக்கிரகேசர், நிஷ்களேசர், மார்க்கண்டேசர், அஸ்மரேசர், கங்கேசர் இவர்களைப் பூசித்து ஞானவாவியிலே ஸ்நானஞ்செய்து, பின்பு நந்திகேசர், தாரகேசர், மாகாகாளேசர், தண்டபாணி, மகேசர், மோக்ஷேசர், வீரபத்திரேசர், அவிமுத்தேசர் இவர்களைப் பூசித்துப் பின்பு மோதாதி பஞ்சவிநாயகரையும், விசுவேசரையும் அன்னபூரணியையும் பூசித்து மவுனம் விடுத்து விதிப்படி அந்தர்க்கிரகயாத்திரை யென்னாலே செய்யப்பட்டது இதிலிருக்கின்ற குறைவை கிருபையினாலே பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று விசுவேசரைப் பிரார்த்தித்து முத்திமண்டபத்திலிருந்து தாமிருக்குமிடம்போய் இயன்றளவு அன்னதானஞ்செய்தல் அந்தர்க்கிரகயாத்திரை எனப்படும்.

இந்த யாத்திரை பிரதிதினஞ்செய்யச் சக்தியில்லாதவர்கள் சதுர்த்தசிகளில் அவசியஞ் செய்யவேண்டும்.

---

## நைமித்திகயாத்திரை.

### திதியாத்திரை.

சுக்கிலபக்ஷத் திரிதிகையில் நவகவுரிகட்குஞ் சதுர்த்தசியில் ஐம்பத்தாறு விநாயகருக்கும் பஞ்சமி

யில் .சப்தரிஷிகட்கும்,இருவகை அஷ்டமியில் எட்டுவ யிரவருக்கும் அஷ்டமி சதுர்த்தசி இரண்டில் நவதுர் க்கைக்கும் நவமி, சண்டிகைக்கும் ஏகாதசி, துவாதசி, விஷ்ணுமூர்த்திகளுக்கும், பர்வம், சந்திரபுட்கரணியில், சந்திரேசருக்கும், அமாவாசை,கபிலதாரையில்,இடபத் துவசேசருக்கும் செய்யும் யாத்திரை திதியாத்தி ரையாம்.

வாரயாத்திரை.

ஆதித்தவாரத்தில் பன்னிரண்டு சூரியர்களையும் சோமவாரத்தில் ஞானவாவியில் ஸ்நானஞ்செய்து விசு வேசரையும், ஆவணிமாதம் சோமவாரம், கேதாரேச ரையும், மங்களவாரம் காமாக்ஷிதேவியையும், வயிரவ ரையும், சுக்கிரவாரம் சுக்கிரேசரையும், சனிவாரம் சனீ ஸ்வரலிங்கத்தையும் தரிசித்துச்செய்யும் யாத்திரை வார யாத்திரை யெனப்படும்.

நக்ஷத்திரயாத்திரை.

புதவாரம் சதுர்த்தசி பரணிநக்ஷத்திரம் இயமதீர் த்தஸ்நானமும் இயமலிங்கதரிசனமும், புதவாரம் துவா தசி சிரவணநக்ஷத்திரம் சங்கமதீர்த்தஸ்நானமும் சங்க மேஸ்வர தரிசனமுஞ் செய்தல். இது நக்ஷத்திரயாத்தி ரையாம்.

மாசயாத்திரை.

சித்திரைமாசம் பிரதிதினம் காமகுண்டஸ்நானம், காமேசர் தரிசனமும், வைகாசிமாசம் விமலதீர்த்தஸ்நா னம் விமலேசர் தரிசனமும், ஆனிமாசம் உருத்திரவாச

தீர்த்தஸ்நானம், உருத்திரவாசேசர் தரிசனமும், ஆடிமாசம் இலக்ஷுமிதீர்த்தஸ்நானம் இலக்ஷுமிதரிசனமும், ஆவணிமாசம் காமாக்ஷிதீர்த்தஸ்நானம் காமாக்ஷிதரிசனமும், புரட்டாசிமாசம் கபாலமோசனதீர்த்தஸ்நானம் குலத்தம்ப தரிசனமும், ஐப்பசிமாசம் மார்க்கண்டதீர்த்தஸ்நானம் மார்க்கண்டேசர் தரிசனமும், கார்த்திகைமாசம் பஞ்சகங்காஸ்நானம் விந்துமாதவர்தரிசனமும், மார்கழிமாசம் பிசாசமோசனதீர்த்தஸ்நானம் கபர்த்தேசர்தரிசனமும், தைமாசம் தனதீர்த்தஸ்நானம் தனதேசர் தரிசனமும், மாசிமாசம் பிரயாகைதீர்த்தஸ்நானம் பிரயாகேசர் தரிசனமும், இன்னும் கோடிதீர்த்தஸ்நானம்கோடிலிங்கதரிசனமும், பங்குனிமாசம் கோகர்ணதீர்த்தஸ்நானம் கோகர்ணேசர் தரிசனமுமாக ஒவ்வொன்றிலும் ஓர்மாசம் பிரதிதினமும் ஸ்நானந் தரிசனஞ்செய்தல் மாசயாத்திரையாம்.

## இருதுயாத்திரை.

சங்கத்துவார சமீபத்தில் துவாரகாபுரியும் பிந்துமாதவர் சமீபத்தில் காஞ்சிபுரியும், வருணை சமீபத்தில் மதுராபுரியும், இராமேஸ்வரசமீபத்தில் அயோத்தியாபுரியும், கிர்த்திவாசேச சமீபத்தில் அவந்திகாபுரியும், அசிசங்கமேஸ்வர சமீபத்தில், மாயாபுரியுமாகிய இவைகள் காசியிற் பிரகாசித்திருக்கின்றன.

இவைகளில் வருடரிதுவில் துவாரகையும், சரரிதுவில் அயோத்தியும், ஏமந்தரிதுவில் அவந்தியும், சிசிர

ரிதுவில் மாயாபுரியுமாகச் செய்யும் யாத்திரை இருது யாத்திரையாம்.

## பஞ்சக்குரோசயாத்திரை.

கங்காஸ்நானமும் நித்தியயாத்திரையுஞ்செய்து காசிவாசஞ் செய்கின்றவர்கள் சோதிலிங்கமயமாய்ப் பஞ்சக்குரோச பரிமாணமுள்ள காசியை தக்ஷிணாய ணம் உத்தராயணம் என்னும் அயனங்களினிறுதியி லாவது வருடாந்தத்திலாவது சோதிலிங்கமயமாய்ப் பஞ்சக்குரோச பரிமாணமுள்ள காசியைப் பிரதக்ஷி ணஞ்செய்வது பஞ்சக்குரோச யாத்திரையாம்.

இக்காசியைப் பிரதக்ஷிணஞ்செய்தல் மூன்றுலோ கத்தையும் பிரதக்ஷிணம்பண்ணின பலனைக்கொடுக் கும் காசியிற்செய்த பாவங்களுக்குப் பரிகாரமுமாம்.

ஒருவன் அன்னியதேசத்திலும் புண்ணியதேசங் களிலுஞ் செய்தபாவங் காசியல்லாத கங்காதீரத் தில் நீங்கும் அக்கங்காதீர்த்தத்திற் செய்தபாவம் காசி யையடைய நீங்கும் காசியிற்செய்தபாவம் வாராணசி யாத்திரையில் நீங்கும், வாராணசியிற் செய்தபாவம் அவிமுக்தயாத்திரையில் நீங்கும், அவிமுக்தத்திற் செய் தபாவம் அந்தர்க்கிரகயாத்திரையில் நீங்கும், அந்தர்க்கி ரகத்திற்செய்தபாவம் பஞ்சக்குரோச யாத்திரையால ன்றி நீங்காவாம் அதனல் பஞ்சக்குரோச யாத்திரை அவசியஞ் செய்யவேண்டும்.

இதனால் காசியில் காயத்தாலும் வாக்கினாலும் மன சினாலுந் தெரிந்துந் தெரியாமலுஞ் செய்த அற்பபாவ ங்களும் மலம் மூத்திரம் இவைமுதலிய விடுத்தபாவங் களும் நீங்கும். அந்தர்க்கிரகயாத்திரை முதலியன செய் யாமையால் நீங்காத சொற்பபாவங்களும் காசியிற்செ ய்த அதிகமகாபாதகங்களும் வயிரவயாதனையாலன்றி நீங்குவனவல்ல. அதிகபாவங்கள் யாதனையால் நீங்குமெ ன்பது மேல் மோக்ஷப்பிரகரணத்தாற் பெறப்படும்.

---

## பஞ்சக்குரோசயாத்திரை நியமம்.

அன்னிய ஸ்ரீகளை மனத்தால் நினையாமையும், மனையாளோடு புணராமையும், பரத்திரவிய அபகாரஞ் செய்யாமையும், துர்ச்சனரோடு கூடாமையும், பஞ்சக் குரோச வெல்லையில் மலமூத்திரம் விடாமையும், அப் பியங்கநஞ் செருப்புக்குடை யின்மையும், மவுனமாய்ச் செல்லுதலும், அவிசு புசித்தலுமாகிய இவை இதற் குரிய நியமங்களாம்.

பஞ்சக்குரோசயாத்திரை பிரதமதினத்தில் உதய த்தில் கெங்காஸ்நானஞ்செய்து விசுவேசரைத் தரிசி த்து பின்பு அந்தர்க்கிரகயாத்திரையும், ஏகவாரபோ ணமுஞ்செய்து, மறுநாள் உதயத்தில் கங்காஸ்நான ஞ்செய்து விசுவேசரையும், அன்னபூரணியையும் பூசி த்துத், தரிசித்து முத்திமண்டபத்திலிருந்து மனம் வாக்குக்காயங்களால் தெரிந்தும் தெரியாமலும் செய்

தபாவங்கள் போம்படி பஞ்சக்குரோசாத்மகமான சோதிலிங்கத்தைப் பிரதக்ஷிணஞ் செய்கின்றேனென்று சங்கற்பித்து விசுவேசர், அன்னபூரணி, துண்டிராசன், பஞ்சவிநாயகர், தண்டபாணி, காலவயிரவர் இவர்களைப் பூசித்துப் பிரார்த்தித்து மணிகர்ணிகையில் ஸ்நாஞ்செய்து மணிகர்ணிகேசரையுஞ் சித்திவிநாயகரையும் பூசித்துப் பின் பிரதக்ஷிணமாய்க் கங்காகேசவரையும் இலளிதாதேவியையுஞ், சராசந்தேசரையுஞ், சோமநாதரையுந், தாலப்பியேசரையுஞ், சூலடங்கேசரையும், வராகேசரையும், தசாஸ்வமேதேசரையும் வந்திதேவியையுந் தரிசித்து அதில்நின்று சர்வேசரையுங், கேதாரேசரையும் பூசித்துத் திரும்ப அநுமதேசரையும் அசிசங்கமத்திற் சங்கமேசரையும்,லோலார்க்கனையும் பூசித்துப்பின்பு அர்க்கவிநாயகரை அடைந்து அசிதீரத்திலிருந்து எள்ளளவு மெல்லைபிசகாமற் சென்று பின்பு துர்க்காகுண்டத்தில் ஸ்நானஞ்செய்து துர்க்காதேவியையுந் துர்க்காவிநாயகரையும் பூசித்து, அங்குவசித்துப் பிராமணபோசனஞ்செய்து அன்றிராத்திரி புராணச்சிரவணங்கேட்டு விழித்துக் காலையில் துர்க்காகுண்டத்தில்ஸ் நானஞ்செய்து நித்தியகன்மங்கள் முடித்துத் துர்க்காதேவியைப்பூசித்துப் பிரார்த்தித்து விட்சுவச்சேனேச்சரத்துக்குப்போய் அதின்நின்று கர்த்தமேச்சரத்தை அடைந்து கர்த்தமதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து கர்த்தமேசரைப்பூசித்து கர்த்தமகூபத்தில் முகத்தைப் பார்த்துக்கொண்டு அங்கிருக்கின்ற சோம

நாதர் விரூபாக்ஷர் நீலகண்டர் என்னும் மூன்றுலிங்க ங்களையும் பூசித்து, அங்கு சிராத்தாதிகள் செய்து பிராமணபோசனஞ்செய்து அன்று பாதிராத்திரியள வும் விழித்துத் திரும்பக் காலையில் கர்த்தமதீர்த்தஸ் நானஞ்செய்து கர்த்தமேசரைப் பூசித்துப் பிரார்த்தி த்து அங்கிருந்து புறப்பட்டு நாகநாதரையும் அதற்கு மேற் சாமுண்டியையும் பின்பு மோக்ஷேசர், கருணே சர், வீரபத்திரகணர், விகடதுர்க்கை இவர்களையும் பூசி த்து அதில்நின்று உன்மத்த வயிரவரையும், நீலனே யும் பின்பு காளகூடகணனையும், விமலதுர்க்கையை யும் பின்பு மகாதேவரையும் பூசித்து அதில்நின்று நந்தி கேசர், பிரிங்கிரிடிகணர், கணப்பிரியர் இவர்களைப் பூசி த்துப் பின்பு விரூபாக்ஷர் பின்பு அங்கு யக்ஷேசர் விமலேசரையும் அதில்நின்று மோக்ஷேசர், ஞானேசர், பிரிங்கீசர் இவர்களையும் பூசித்துப் பின்பு வீமசண்டி யையடைந்து கந்தர்வசாகரத்தில் ஸ்நானஞ்செய்து பீமசண்டிதேவிக்குப் பாயசம் நிவேதித்துப் பூசித்து அங்கு பீமசண்டிவிநாயகரையும் ரவிரக்த்தாக்ஷ கந் தர்வரையும் நரகார்ணவதாரீசரையுந் தரிசித்துப் பூசி த்து, அன்றங்கிருந்து சிராத்தம் பிராமணபோசனஞ் செய்து பாதிராத்திரியளவும் விழித்திருந்து மறுநாள் கந்தர்வசாகரதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பீமசண்டி க்குப் பூசைசெய்து பிரார்த்தித்து அதில்நின்று ஏகபா தகணரையடைந்து அங்கே எள்ளு அரிசி இவைகளால் பூசித்து அதில் நின்றும் வயிரவர் வயிரவி இருவரையும்

பூசித்து அதில்நின்று பூதநாதரைப்பூசித்து அதில்நின்றுசிந்துதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து சோமநாயகரைப் பூசித்து அதில்நின்று காமநாதரையும் அதில்நின்று கபர்த்தீசரையும் அதில்நின்று காமேசரையும் அதில்நின்று கணேசரையும் அதில்நின்று வீரபத்திரேசரையும் அங்கு நாலுமுககணநாதரையும் பூசித்துப் பின்பு தேகளிவிநாயகரையடைந்து பூசித்து மோதகம் நிவேதித்து அவர் சமீபத்திலிருக்கின்ற பதிநாலுவிநாயகரையும் பூசித்துத் தரிசித்து அதில்நின்று புறப்பட்டு உத்தண்டகணபதியையும் அதில்நின்று உற்கலேசர் உருத்திராணி இவர்களையும் பூசித்துப் பின்பு தபோபூமியையடைந்து அதிலிருந்து இராமேச்சரத்துக்குப்போய் வருணாநதியில் ஸ்நானந் தர்ப்பணஞ்செய்து ராமேசரைப் பூசித்து அதற்குக் கிழக்கே சோமநாதரையும் பரதேசரையும் லக்ஷுமணேசரையுஞ் சுக்கிரேசரையும் தியாவாப்பிருதிவீசரையும் நகுலேசரையும் பூசித்து சிராத்தம் செய்து அங்கு அன்றிராத்திரிவசித்து இரவில் விழித்திருந்து காலையில் வருணைஸ்நானஞ்செய்து இராமேசரைப் பூசித்துப் பிரார்த்தித்து வருணையின் கரையில் அசங்கியாதலிங்கத்துக்குப் பூசித்து அதில்நின்று தேவசந்தேசத்தையடைந்து அங்கு ஸ்நானஞ்செய்து அதில் நின்று பாசபாணிவிநாயகரைப் பூசித்துப் பின்பு பிருதிவீசரைப் பூசித்து அங்கிருந்து யூபசரோவதத்தில் ஸ்நானந்தர்ப்பணஞ் சிராத்தஞ்செய்து இடபத்துவசேசரைப்பூசித்து கபிலதாரையில் ஸ்நானந் தர்ப்பணம் சிராத்த

ஞ்செய்து இராத்திரி அங்குவிழித்து வாசஞ்செய்து காலையில் கபிலதாரையில் ஸ்நானஞ்செய்து விடபத்து வசேசரைப் பூசித்துப் பிரார்த்தித்து சுவாலாநரசிம்ம த்தை யடைந்து பூசித்து அதில் நின்று வருணைசங்கம த்தில் ஸ்நானஞ்செய்து கர்வவிநாயகரையும் ஆதிகேச வரையுஞ் சங்கமேசரையும் பூசித்து அங்கிருந்து விட் டுணுநாமமுச்சரித்து யவையைக் கொஞ்சமெடுத்து இறைத்துக்கொண்டு வந்து பிரகலாதேசரையும் திரி லோசனேசரையும் பூசித்து அதில்நின்றும் பஞ்சகங் கையில் ஸ்நானஞ்செய்து விந்துமாதவர் கபர்த்தீசர் மங்களாகவுரி இவர்களைப் பூசித்து மணிகர்ணிகை தீர த்தையடைந்து வசிட்டவாமதேவர், பர்வதேசர், மகே சர், சித்திவிநாயகர் இவர்களைப் பூசித்து மணிகர்ணி கையில் ஸ்நானஞ்செய்து விசுவேச்சரத்தை யடைந்து பஞ்சவிநாயகரைப் பூசித்துப் பின்பு விசுவேசர், அன்ன பூரணி இவர்களைப் பூசித்து நமஸ்கரித்து முத்திமண்ட பத்திலிருந்து விட்டுணு, தண்டபாணி, துண்டிராசன், வயிரவர், ஆதித்தியர், பஞ்சவிநாயகர் இவர்களைப் பூசி த்துப் பின்பு சோதிலிங்கப் பிரதக்ஷிணஞ்செய்தேன் காசியிற் செய்தபாவங்களைப் போக்கவேண்டும் மேல் தன்மத்திற்புத்தி பிரவிர்த்திப்பிக்க வேண்டுமென்றும் யாத்திரையிலிருக்கின்ற குறைவுநிறைவைப் பூரணம் பண்ணவேண்டுமென்றும் பிரார்த்தித்துச் சற்பாத்திர த்திலே அன்னதானஞ்செய்து அஞ்சலியஸ்தனுய்த்

தானிருக்குமிடத்தை அடைதல். அது பஞ்சக்குரோச யாத்திரைக்குரிய விதியாம்.

---

## வசிக்குமிடம்.

—:*:—

பிரதக்ஷிணஞ் செய்புங்கால் ஒருராத்திரிவாசஞ்செய்வோன் இராமேசுரத்தும் இரண்டுராத்திரி வாசஞ்செய்வோன் பீமசண்டியிலும் இராமேச்சரத்தும், மூன்று இராத்திரி வாசஞ்செய்வோன் துர்காகுண்டம், பீமசண்டி,இராமேச்சரத்தும்,நாலுராத்திரி வாசஞ்செய்வோன் கர்த்தமேச்சரம், பீமசண்டி, இராமேச்சரம் கபிலதாரை இவைகளிலும் ஏழுராத்திரி வாசஞ்செய்வோன் துர்காகுண்டம், க்ர்த்தமேச்சரம், பீமசண்டி, தேகளிவிநாயகர்,இராமேச்சரம்,பாசபாணிவிநாயகர்,கபிலதாரை, இவ்விடங்களிலும் வாசஞ்செய்ய வேண்டும். பாலர், விருத்தர், அரசர், வியாதியுடையார் இவர்க்கு நாள்நியமமின்று.

---

## க்ஷேத்திரசன்னியாசிக்குரியவிதி.

—:*:—

க்ஷேத்திர சன்னியாசஞ் செய்தவன் மேற்கூறிய பிரகாரம் மணிகர்ணிகை ஸ்நானஞ்செய்து விசுவேசர், அன்னபூரணி, பஞ்சவிநாயகர், துண்டிராசன், தண்டபாணி, காலவயிரவர் இவர்களைப் பூசித்து கங்கைக் கரையில் நின்று முன்போல பிரதக்ஷிணமாக அங்கிரு

க்கின்ற மூர்த்திகளைப் பூசித்து துர்காகுண்டத்தில் ஸ்நானஞ்செய்து துர்காபூசைசெய்து அவனுக்கு பஞ்சக்குரோசத்தின் புறம்பே பிரதக்ஷிணஞ்செய்தல் கூடாமையால் ஐம்பத்தாறு விநாயகரிருக்கின்ற ஏழாவரணங்களுக்குள் புறம்பே ஏழாவதான ஆவரண்மொழிந்து ஆறுவதாவரணத்தி னின்று அசிவருணைக்குள் பிரதக்ஷிணஞ் செய்யுங்கால் தனக்கு இடப்பக்கத்தி லிருக்கின்ற தேவதைகளை அபிமுகமாகத் தரிசித்து ஒருராத்திரி, இரண்டுராத்திரி, மூன்றுராத்திரி வசித்து தண்டபாணியைப் பிரார்த்தித்துக்கொண்டு முன்போல விசுவேசரைத் தரிசித்தல்வேண்டும்.

---

## காசிவாசநிர்ணயம்.

---:*:---

### சீவனம்.

வருணாச்சிரமவழி வழுவாது பொறை அறிவு அடக்கம் முதலிய குணங்களோடு காசிவாசஞ் செய்கின்றவருள் கிரகத்தனாகிய பிராமணன் வெளியில் சன்மார்க்கத்தால் சம்பாதித்துவந்த பொருளால் சீவிப்பதேயன்றி தானம்வாங்குதல் குற்றமாம். காசியில் பிரதிக்கிரகஞ்செய்யாது வேறு தனக்குரிய அறநெறியால் வருவாயுளதேல் அவன் அதனாற் சீவிக்கலாம். பிராமணரல்லாத கிரகஸ்தர்கள் தன்மவழியால் சம்பாதித்து வசிக்கலாம். சம்பாதித்த பொருளில் நாலிலொருபங்கு குடும்ப சம்ரக்ஷணைக்கு வைத்துக்கொண்டு எஞ்சிய மூன்றுபங்கு சற்பாத்திரங்களில் உபயோகிக்கவேண்

டும். பெரிய குடும்பியாயிருந்தால் நாலுக்கு இரண்டு பங்கு உபயோகம் பண்ணிக்கொள்ளலாம்.

காசியிற் சம்பாதித்தபொருள் சிவத்திரவியமாதலால் அதனை வெளியிலிருக்கிற பந்துக்களுக்கு உபயோகப்படுத்தக் கூடாது. அப்படி உபயோகப்படுத்தினால் அந்தக் குடும்பத்தார்கள் சிவத்திரவிய அபகாரிகளாவர்கள். காசியிலிருந்து மிருத்திகையும் வெளியிற் கொண்டுபோகக் கூடாதெனில் காசியில் சம்பாதித்த பொருள் சிவார்ப்பணஞ் செய்வதேயன்றி வேறு வுபயோகித்தற் கெவ்வாறும்!

கங்காஸ்நானம் நித்தியகன்மம் விசுவேசர் தரிசனம் செய்தன்றி தினந்தோறும் லௌகிகத்திற் பிரவேசித்தல் கூடாது.

காசியில் வசிக்கின்றவன் கட்ன்வாங்குதலும் பரான்னபோசனஞ் செய்தலுங் குற்றமாம்.

விரத்தர் ஓடும் பொன்னுஞ் சமமாகப் பார்த்து நிராசையோடு சிதேந்திரியர்களாக வசிக்கவேண்டும்.

சிலகாலவாசம்.

காசியிற் பாபமபண்ணி யிறந்தால் ஓர்பாபத்துக்கு முப்பதினாயிரம் வருஷம் வயிரவயாதனை வருமாதலாற் கால எண்ணிக்கையோடு வசிக்குமவர்களுள் சக்தன் நியதமான ஏகாகார முடையனும் அசக்தன் நியதாகாரமாத்திர முடையனும் தான் வசிக்குமளவும் நியமத்தோடிருந்து வசித்துப் போதல்வேண்டும்.

காசியிற் பாவஞ்செய்து வேறிடம்போய் இறந்தால் பாவபரிகார மில்லை நரகயாதனைவரும்.

---

## க்ஷேத்திரசன்னியாசவிதி.

:*:

காசியிலிருந்து க்ஷேத்திர சன்னியாசஞ் செய்துகொள்பவன் மாசிமாதத்துச் சுக்கிலபக்ஷ சதுர்த்தசியில் மணிகர்ணிகை ஞானவாவி இவைகளில் ஸ்நானஞ் செய்து வெள்ளை வஸ்திரந்தரித்து அன்று பிராமண போசனமும் வுபவாசமுஞ் செய்து துண்டிவிநாயகர், தண்டபாணி, விசுவேசர், அன்னபூரணி இவர்களைப் பூசித்து முத்திமண்டபத்தி லிருந்து பஞ்சக்குரோசத்துக்கு வெளியேபோகாமல் க்ஷேத்திரஙியாசஞ் செய்கிறேன் நீங்கள் இதற்குச் சாக்ஷியாயிருங்களென்று பிரார்த்தித்துச் க்ஷேத்திரஙியாசஞ் செய்தேனென்று எடுத்து ஏழுதரம் உச்சரித்துச் க்ஷேத்திரஙியாசஞ் செய்யக்கடவன்.

இவ்வாறு க்ஷேத்திரஙியாசஞ் செய்தவன் எல்லாத்தீர்த்தங்களும் எல்லாமூர்த்திகளும் காசியிலிருத்தலால் வேறு தீர்த்தங்களையாவது மூர்த்திகளையாவது விரும்பி வேறிடத்திற் செல்லாமல் எல்லாத்தீர்த்தங்கட்கும் எல்லாமூர்த்திகட்குமிடம் காசியேயென்னும் நிச்சயத்தோடு அன்னியயாத்திரையில் பரியாலோசனையின்றி நயிட்டிகவிரத முடையவனுய் பதிவிரதையான

வள் தனது நாயகனேயன்றி பிறிதோர் பொருளேயும் மிதியாமைபோல மதித்து வசிக்கக்கடவன்.

அவன் காசியைவிட்டுப் போனல் நல்லவர்கள் அவனோடு பிரியவார்த்தை சொல்லாமலும் அவன் அன்னத்தைப் புசியாமலும் பதிதபாவனே பண்ணி அவனுக்கு ஒருதவியுஞ் செய்யார்கள். இவன் க்ஷேத்திரஙியாசஞ் செய்தும் முத்திக்கருகனுகாமல் இன்னம் மாதாவினுடைய கருப்பாசயத்தில் மலமூத்திரங்களில் வசித்தற்குரியனுன பெரும்பேதமை யுடையானிவனென்று அவனே அசேதனங்களாகிய பஞ்சமகாபூதங்களும் பரியாசஞ்செய்யும்.

வியாதி முதிர்ச்சியுடையவனும் வயோவிருத்தனுங் காசியையடைந்தால் க்ஷேத்திரசன்னியாசி போல நீங்காதிருக்கக்கடவர்.

---

## காசிவாசிகட்குரிய சரியையும் அதன்பயனும்.

—:*:—

காசியில் தவஞ்செய்தாலும் செபஞ்செய்தாலும் தானஞ்செய்தாலும் ஓமஞ்செய்தாலும் வேறிடத்திலிருந்து செய்கின்றபலன் ஒன்றுக்கு நூறுயிரம்பங்கு அதிகபலனே யடைவர்கள்.

காயத்திரி லக்ஷஞ்செபித்தபிராமணர்கள் நான்குவேதத்தையும் அத்தியயனஞ்செய்த பலனே யடைவர்கள்

திரு உருத்திரஞ்செபித்த வேதபாரகர்சள் அனேகப லனை யடைவர்கள். சிவபத்தர்களாயினோர் ஸ்ரீபஞ்சா க்ஷர செபபரராயும் பத்திரபுஷ்பங்களால் அர்ச்சிப்பவ ராயுஞ் சுகந்தமான தூபதீபங்களைக் கொடுப்பவராயும் ஆலயசம்மார்ச்சனஞ் செய்பவராயுந் திருமாலைகளாலல லங்கரிப்பவராயு மிருக்கக்கடவர். அவ்வாறிருப்பின் அவர்சள் பத்திரபுஷ்பத்திற்குச் சொர்னதானபலனுந் தூபத்திற்கு அக்கினிகோத்திரஞ் செய்தபலனுந் தீபத் திற்குச் சிவஞானமுஞ் சம்மாற்சன முதலியவற்றி ற்கு அனேகதானஞ் செய்தபலனும் அடைவர்கள். இவை பிரமபுராணம் மற்சியபுராணம் இவைகளிற் கூற ப்பட்டன.

அதிகதனமுடையராய்க் காசிவாசஞ் செய்பவர்கள் சீரணமான சிவாலயம் சீரணமான செலாசயம் சீர ணமான மடாலயம் இவைகளை உத்தாரணஞ்செய்து காசியில் வாசஞ்செய்தாற் காசியிற் செய்தபாவங்கள் நீங்கித் தன்மாத்மாவாவர்.

அஷ்டமி சதுர்த்தசி இவைகளில் உபவாசஞ்செ ய்து பிராமணபோசனஞ் செய்தவன் சவுத்திராமணி எக்கியம் பண்ணினபலனை அடைவன். ஒருநாள் நியம த்தோடிருந்தால் அவன் அன்னியதீர்த்தங்களில் கோடி பசுவை விதிப்படி நல்ல பிராமணனிடத்தில் தானம்ப ண்ணினவனுக்குச் சிரேஷ்டனுயும் இராப்பகலிருந்தால் புண்ணியனுயும் மூன்றுராத்திரி யிருந்தால் மோக்ஷசம் பத்துக் கருகனுயும் இப்படி பிரதிதினமும் நியமத்

த்தோடு வசிக்கின்ற புண்ணிய ஆன்மா தினந்தோறும் அசுவமேதம் இராசசூயம் மகத்தான பாசுபதவிரதம் இவைகளாலாயபலனை அடைதலால் கன்மசாமியம்பி றந்து மோக்ஷசம்பத்துக் கருகனாகின்றான்.

ஏழையாய்க் காசிவாசஞ் செய்கிறவனுக்குஞ் க்ஷேத்திரநியாசஞ் செய்தவனுக்கும் அன்னங்கொடுத் தால் அதிகபலனை அடைவர்கள்.

தீர்த்தஸ்நானந் தலவாசம் இவ்விரண்டுஞ் சித்தசு த்திக்கிக் காரணமாயினுங் காசிவாசத்தில் கரதலாமல கம்போல முத்திப்பயன் சித்தித்தலால் விசேடபலனு ண்டென்பது யூகிக்கத்தக்கதா யிருக்கிறது.

காசிவாசிகள் நிட்காமியஞ் செய்யவேண்டுமென் பது காசியிற்செய்கின்ற புண்ணியங்கள் சிவாற்பணஞ் செய்தலேயன்றிப் பலோத்தேசியமாகச் செய்தல் காசிவாசிகட்குப் பயன் இன்று.

காமியமாகச் செய்யின் புண்ணியசரீரமெடுத் தநு பவிக்கப்படுமென்பது மேற்பிரகரணத்தாற் பெறப் படும்.

நிட்காமியமாய்ச் செய்யவேண்டுமென்றற் கிதிகா சம் சுவதனனென்கின்ற அரசன் காசியிலிருந்து விசுவ சித்தென்கின்ற யாகத்தைச் செய்புங்கால் அதைப் பார் க்குநிமித்தம் சனற்குமாரமுனிவர் சீடர்களோடுவந்து அரசனே யென்ன பிரயோசனத்தின்பொருட்டு சுவர் க்கபலனைக்கொடுக்கின்ற இந்த யாகத்தைச் செய்கின்

ருய் இது உனக்குப் பிரயோசனத்தைக் கொடுக்கமா ட்டாது உன்னுடைய சாதிதன்மத்துக்கேற்கச் செய் தாலும் நிட்காமியமாக ஈஸ்வரார்ப்பணஞ் செய்துவி டென்று ஆக்ஞாபிக்க அவன் அவ்வாறு செய்தானெ ன்று பதுமபுராணத் திருக்கின்றது.

நெடுங்கால வாசிகட்கு மீதொக்கும். புண்ணிய தேசமல்லாத கீகடதேசத்திற் பாவஞ்செய்தாற் பாவம் விருத்தியாகிறதில்லை.

உத்தமோத்தம புண்ணியதேசமாகிய இக்காசியிற் பாவஞ்செய்தால் நாள்தோறும் விருத்தியாகின்றது. அதனாற் பாவஞ்செய்வோர்க்கு இதிற் கீகடதேசத்தி னும் பாவமதிகமாகின்றது.

அதனாற் புண்ணியதேசத்தைப் பாவதேசத்தினு மிழிந்ததாக காசிவாசிகள் செய்யாதிருத்தல் வேண்டும்.

---

## ஸ்ரீகாசிமிருதிமோக்கநிர்ணயம்.

### மோக்ஷசாதனமிரண்டென்றல்.

புருடார்த்தங்களுள் முக்கிய புருடார்த்தமாகிய வீடடைய விரும்பினோர்க்கு அவ்வீடடைதற்குரிய சா தன மிரண்டேயன்றி வேறில்லை. அவ்விரண்டாவன அநுபவாசிரியனை யடைந்து வேதாந்தவிசாரஞ்செய்து தத்துவநிலையிற் றலைப்படலும் காசியையடைந்து தன் மான்மாவாய் வசித்து மரித்தலுமென இவை.

மேற்கூறிய தத்துவநிலையிற் றலைப்படுவோர் புருவமத்தியமாகிய ஆத்தியான்மிக காசியிற் பாவங்களையும் இந்திரிய வியாபாரங்களையும் முறையே நீக்குமிடமுங் கெடுக்குமிடமுமாகிய வாராணசியிற் சந்ததம் அநுசந்தானஞ்செய்து சித்த நிரோதத்தாற் பரமான்மாவை யடைந்து அவ்வுணர்ச்சி காரணமாக ஆதிபௌதிககாசியில் மரிக்கின்றவர்களைப்போலச் சாயுச்சியத்தை யடைவர்கள் இச்சிவயோகிகள் வசிக்குமிடமுங் காசி துல்லியமென்று சொல்லப்படும். அது சிவயோகியிருப்பிடமப்பூமி காசியென்னுந் திருமந்திரமாலையானுமுணர்க.

புருவமத்தியத்தைக் காசியென்றல் உபசாரம். உபதேசத்தாலடையத்தக்க இவ்வித பரமான்ம சாக்ஷாத்காரநிலை ஆத்தியான்மிககாசியில் உபாசிக்கும் மிகுந்த பக்குவர்க்கு உரியது. இவ்வாதிபௌதிக காசி அவ்வாறு மிகுந்த பக்குவரல்லாதாரும் பூருவ புண்ணிய வசத்தால் சிவசாயுச்சிய மடைதற்கு ஏதுவாயிருத்தலின் அதனினு முக்கியமாகின்றது ஆதலால் வேதாந்தச் சிரவணஞ்செய்து அநுபவநிலை கூடாதோரும் முத்தி விருப்பால் சரியைமுதலிய வறநெறியில் நிற்போரும் காசிமரணத்தில் விருப்புடையராய் அதனை நீங்காதிருத்தல் வேண்டும்.

இக்காசியில் மரிக்கின்றவர்கட்கு சிவபெருமான் தன்னோடொடுதற்குரிய ஐக்கியத்தை யுணர்த்துந் தாரகோபதேசத்தைப் பிராமணர்முதலிய வருணாச்சிரம நியமமின்றி மநுடருக்குந் தாவரசங்கமங்கட்கும் ம்ரா,

ணந்தத்தில் திவ்வியசரீரங்கொடுத்து உபதேசிக்கின்ற னர். அதுசுருதிக்கும் மிருதிபுராணங்கட்குஞ் சம்மதம்.

---

## சுருதிப்பிரமாணம்.

——:*:——

எசுர்வேதசாபால உபநிடதத்தில் அத்திரிமுனி வர்யாக்கியவல்க்கிய முனிவரை மோக்ஷசாதனம் யாதெ ன்றுவினவ அவர் அவிமுத்தத்தையே சேவைசெய் அதிற் சிவபரமான்மா நீங்காதிருக்கின்றார். அது அசிவ ருண மத்தியிலிருக்கின்றது. அது தேவர்களுக்கு அதி தேவராகிய மகேசுரனைத் தேவர்கள் பூசித்தற்குரியவி டம் எல்லாப்பிராணிகளும் பிரமப்பொருளை யடையுமி டம் அதில் உருத்திரர் சீவர்கட்குப் பிராணனீங்குகி ன்றகாலத்து முத்தராம்படி தாரகோபதேசஞ் செய் கின்றார். அதனால் குருக்ஷேத்திரமென்னும் பெயரையு டையவதனை நீங்காதிருவென்று அவர்க்குச் சிநேகத் தோடு உத்தரஞ்சொன்னார் என்றது வாக்கியம்.

உத்தரப் பிரத்தியுத்தரங்களாய் சாகாங்கைக்ஷசகித மான இந்த உபநிடதவாக்கியத்தில் இகலோகபரலோக மத்தியமென்று யோகிகள்கூறும் புருவமத்திய ஆத்தி யான்மிக காசியைப்போல ஆதிபௌதிககாசியும் முத் திக்கு முக்கியகாரணமென்றும் அதில் நீயும் நீங்காதிரு ந்தால் பரமான்மாவை யடைவையென்றும் உத்தரங் கூறினாராயிற்று.

இதில் அவிமுத்தத்தையே சேவைசெய் யாதுகருதியெனில் அதில் பரமான்மா நீங்காதிருக்கின்றூர். அது யாண்டிருக்கின்றது அசிவருணை மத்தியிலிருக்கின்றது அது எவ்வாறுனது தேவர்கள் மகேசுரனை உபாசித்தற்கிடமானது அது யாதுவிசேடம்பற்றி உபாசிக்கப்பட்டது எல்லாப் பிராணிகட்கும் மோக்ஷஸ்தானமாதல் பற்றி உபாசிக்கப்பட்டது. பிராணிகள் எதனுல் முத்தராகின்றூர்கள் உருத்திரர் தன்னுேடுடனுகும் ஐக்கியத்தை யுணர்த்தும் தாரகத்தை யுபதேசிக்கின்றூர். அதனுல் அவர்கள் முத்தராகின்றூர் அது கருதி தேவர்கள் பூசித்தற் கிடமாதலும் பிரமப்பொருளையடையுமிடம் ஆதலுமாகிய குணங்களோடுகூடிய குருக்ஷேத்திரமென்னும் பெயரையுடைய அவிமுத்தமென உத்தரப் பிரத்தியுத்தரங்களோடு சாகாங்கைக்ஷ போந்தவாறுகாண்க.

பிராணிகளென்றது நால்வகை யோனிகளிலுதித்த சீவர்களை காசி பாவத்தைப் போக்குதலாற் குருக்ஷேத்திரமென்னுங் காரணப்பெயருடைத்து நாற்பத்தெட்டுகுரோசம் விஸ்தீரணமுடையதாய் சமசதுரம் எட்டுக்குரோசம் பாண்டவர்கள் யுத்தபூமியையுடைத்தாய் சரஸ்வதிநதி தீரத்திலிருக்கின்ற தாணுதீர்த்தமுதலிய தீர்த்தவிசேடங்களோடு கூடிய குருக்ஷேத்திரபாமன்று அவிமுத்தமென் றெடுத்துக்காட்டி பிரமோபதேசஞ்செய்கின்றூரெனக் கூறுதலின் அதற்கு குரு

க்ஷேத்திரமென்றது குருவென்னு மரசனை யுடைய தென்றுபொருள்.

தேவர்கள் மகேசுரனை யுபாசித்தற்கிடமென்பது புராண இதிகாசங்களாலன்றி வானிடத்தவரும் மண் மேல்வந்து அரன்றனை யர்ச்சிப்பர். ஊனெடுத்துழலு மூமரொன்றையு முணராரந்தோ வென்னுஞ் சிவஞான சித்தித் திருவிருத்தத்தானும் பெறப்பட்டதுணர்க. அவிமுத்தத்தையே யென்னும் ஏகாரம் இதரவியவச் சேதார்த்த முடைத்து.

---

## ஸ்மிருதி.

—:*:—

சர்வாந்தரியாமியா யிருதயத்திருக்கின்ற சிவபரமான்மாவை யார் சம்சயமின்றி யடைகின்றார்களோ அவர்கள் முத்தியின்பொருட்டு குருக்ஷேத்திரமாகிய காசிக்குப் போகவேண்டுவதில்லை யென்னும் மநுவசனத்திற்கும் ஆத்தியான்மிககாசியில் தியானிக்கின்றவர்கள் நீக்கப்பட்ட மலகளங்கமுடையராய்த் தன்னநுபவசித்தமாய் முத்தியின்பமுடையராயு மிருத்தலி னவர்கள் காசியையடைய வேண்டுவதில்லையென்றும் அங்ஙிலை கூடாதோர் முத்தியின்பொருட்டுக் காசியை யடைய வேண்டு மென்றும்; அக்கருத்தானே காசிமரணமும் ஈஸ்வர திடபத்தியுமாகிய இவ்விரண்டுமென்றி தவத்துக்குப் பயன்வேறில்லையென்று கூறிய வேதவியாசர் வசனத்துக்கும் திடபத்தியென்றதனுல் திடபத்தியுடை

யார் எச்சிவாலயசமீபத்தி லிறந்தாராயினும் அறுபத்துமூவர்போலத் திரும்பப்பிறவாத முத்தியை யடைவரென்பதும் அன்னரல்லாதார் காசி மரணத்தாலன்றி அவ்வித முத்தியடையாரென்பதும் கருத்தாதல் உய்த்துணர்ந்து கொள்ளக்கிடந்தமை காண்க.

---

## புராணம்.

---

யோகிகள் ஆத்தியான்மிக காசியிலுபாசிக்கின்றார்கள். நானுபாசிக்கும்படியான சாதனம் யாதென்று அத்திரிமுனிவர் யாக்கிய வற்கிய முனிவரை வினவ அவர் அவர்க்கு வித்துவான்கள் அசிவருணை மத்தியத்தில் உபாசிக்கின்றார்களென்று பராசரோபபுராணத்துங் கூறப்படும் இவை அநுவாதகங்கள்.

மேல் இதில் மரிக்கின்ற பிராணிகள் பிரமோபதேசத்தால் மோக்ஷமடைகின்றா ரென்பது மேற்கூறிய உபநிஷத்தானும் பராசரோப புராணத்தானுங் கூறப்படுதலேயன்றி பதுமபுராணத்து பரிசுத்தமான இந்த க்ஷேத்திரத்தி லிறக்கின்ற பிரமாமுதல் கீடபரியந்தமான பிராணிகளுக்கெல்லாம் காதில் பிரணவத்தை உபதேசிக்கின்றார் அதனால் பிறவித்துன்பத்தினின்று நீங்குகின்றார்களென்றும்.

காசிகாண்டத்தில் "இத்தலை யெய்தி யிறக்குனர் யாரு மிளைப்பாற, உத்தரி யங்கொடு மாதுமை வீசிட உமையோர்பால், வைத்த பரம்பொருள் தாரக மாகிய

மறையோதி,முத்தி யளித்திடி னிப்பதி யார்விட முயல் வாரே.'' என்றுங்கூறிய துணர்க.

---

## சாலோகாதி.

—:*:—

நால்வகைக்ஷேத்திரங்களுள் காசியில் மரிக்கி ன்றவர்கள் சாலோகத்தையும் வாராணசியில் மரிக்கின் றவர்கள் சாமீபத்தையும் அவிமுத்தத்தில் மரிக்கின்றவ ர்கள் சாரூபத்தையும் அந்தர்க்கிரகத்தில் மரிக்கின்றவர் ர்கள் சாயுச்சியத்தையும் உபதேசானந்தரமடைவர்கள் உபதேசத்தின் பின்பு சாயுச்சியமல்லாத மூன்றுபத த்தை யடைந்தவர்களும் அஞ்ஞானரகிதராய் அப்போ கங்களநுபவித்து அப்போகத்தி லுபேக்ஷை பிறந்தமா த்திரத்தாவது, கற்பாந்தத்தாவது, அந்தக்கிரகத்தில் மரித்தவர்களைப்போல சித்வதுல்லிய சாயுச்சியத்தை யடைவர்கள். பூமியிற்பிறவார்.

---

## இம்முத்திஞானத்தாலென்றல்.

—:*:—

ஞானத்தால் முத்தியென்று சுருதிகூற காசி மரணகன்மத்தால் முத்தி யெவ்வாறுமெனில் பிர மோபதேச ஞானம் காசிமரணத்திருத்தலால் அத னுலுண்டாய ஞானத்தாலன்றிக் கன்மத்தால் மோக்ஷ மின்றென்க. உபதேசத்தாலுதிக்குந் தத்துவஞானம் முத்திக்குக் காரணமாயின் காசிமரணம் அன்னியதா சித்தமெனின் காசிமரணம் உபதேசத்தின்வழியால்

முத்திக்குக் காரணமாதலால் யாண்டுக் காசிமரணம் ஆண்டு உபதேசமென்னுங் காரணகாரியஞ் சித்திக்கப்படுதலின் அன்னியதாசித்தமாதல் யாண்டையதென மறுக்க. உபதேசம் பிராணனீங்குழியாயின் உபதேசவியாபாரத்தின்வழி முத்தி சித்தித்தலில் காரணமாதல் அமையும். விளம்ப முத்திக்கண் மரணம் நிகழ்வுழி உபதேசமின்மையின் ஓரிடத் திருத்தலென்னும் நியமமின்றெனின் பிரதிபந்தத்தின் இன்மையுங் காரணமாதலின் பிரதிபந்த முள்வழி அதனீக்கத்து அது காரணமானது பெறப்படுதலின் ஆண்டுநியமம் வேண்டுவதின்றென்க.

## ஏனையசாதனங்கள் காசிமரணம்போல் முத்திக்குக்காரணமின்றென்றல்.

யோகமும் யோகாங்களூந் தவங்களூங் காசிமரணம்போலச் சாக்ஷான்முத்தி சித்தியைக் கொடுக்காவாம். நைமிஷம், புஷ்கரம், கங்காத்துவாரம் முதலிய தீர்த்தஸ்நானங்களு மப்படியே. நினைத்தாலு மநேகபுண்ணியத்தைக் கொடுக்குமென்றுகூறுந் தன்மக்ஷேத்திரமாகிய குருக்ஷேத்திர மரணமும் பிரமக்ஞான துல்லிய கயாச்சிராத்தமும் விரும்பியவற்றைக் கொடுத்தலால், காமதீர்த்தமென்னும் பிரயாகைமரணமும் சாக்ஷான் மோக்ஷசாதன மாகாவோவெனின் குருக்ஷேத்திரமரணம் சுவர்க்கசாதனமாதல் பாண்டவர்களூங் கௌரவர்களூம் செய்த யுத்தத்தில் இறந்தவர்களெல்லாருஞ் சத்

தியலோகத்தின் பகுப்பான சுவர்க்கத்தில் அவரவர்க்க ருகமான பதங்களை யடைந்தார்களென்று மகாபாரதத் திற் கூறப்படுதலானும் பிதாமுதலியோரைக் குறித் துச் செய்யுங் கயாச்சிராத்தம் அவர்கட்குப் பிரேத த்துவ நிவர்த்தியைச்செய்து புண்ணியலோகத்தை யடைவித்தலானும் பிரயாகைமரணமும் சுவர்க்ககாமிக் குடனே சுவர்க்கமடையக் காரணமாதலானும் புண்ணி யலோகப் பிராப்தியனந்தரம் சன்மாந்தரத்தில் ஞான த்துக்குக் காரண மாதலேயன்றி சாக்ஷாத்காரண மாகா தென்க.

பிரமக்ஞானத்தாலும் பிரயாகை மரணத்தாலும் மோக்ஷமடைகின்று ரென்னும் வசனத்தில் பிரயாகை மரணம் பிரமக்ஞான சாதகபரமாதல்போல கயாச்சி ராத்தமும் பிரமக்ஞானசமம் என்புழியும் பிரமக்ஞான சாதன பரமென்றறிக. பிரமக்ஞான சாதனம் சமதமா திகள் அவ்வாறே ஸ்ரீசயில இமாலய பதனுதிகளுங் கொள்க.

---

## திரும்பச்ஜனிக்காமை.

:*:

விசுவேசரைப் பூசித்து அவரநுக்கிரகத்தால் பூச்சியராய் மரித்து முத்தரானவர்களது மிருதசரீர மும் சிவப்பிரதிமைக் கொப்பாமென்பதும் அவர்கள் திரும்பப் பிறவாரென்பதும் பாரதம் மருதசம்வர்த்த உபாக்கியானத்து மருதராசன் பிரகஸ்பதி யாகஞ்செ

ய்ய மறுத்ததனுல் அவரால் நீக்கப்பட்டவனுய் சிந்தாகுலமடைந்திருக்குங்கால் நாரதரால் காசியில் பயித்தியகாரன்போலச் சரித்துக்கொண்டு பிரகஸ்பதியின் சகோதரனுகிய சம்வர்த்தனிருக்கின்ருன் அவன் உன்னையாகஞ் செய்யச்செய்வான் அவனை யடையென்றிவ்வாறு போதிக்கக் கேட்டான் கேட்ட அவ்வரசன் அவர் என்னுலறிந்து பழக்கஞ்செய்தற் கெவ்வா றுரியராவரென்று வினுவுங்கால் விசுவேசரைப் பூசித்துத் தரிசித்துவரும் மார்க்கத்தில் சவத்தைப்பார்த்துப் பூசித்து நமஸ்கரித்துத் தன்னுச்சிரமத்துச்குச் செல்வர் அவரைச் சம்வர்த்தனென்று தெரிந்து கொள்ளென்ருரென்றுகூறு மிதிகாசத்தாலும் பதுமபுராணத்தில் காசியி லரசனுயிருந்த குண்டதரனேடு சொரூபனென்னுமரசன் செய்தயுத்தத்தில் இறந்த வீரர்களுக்குத் தேவஸ்திரீகள் வீரசுவர்க்கத்தின்பொருட்டு விமானங்கொண்டுவர யுத்தம்பார்க்கவந்த இந்திரன்பொருட்டு பிரகஸ்பதி யிந்த விமானங்களை யபேக்ஷித்து வீரசுவர்க்கத்திலிறந்த இந்தவீரர்கள் போகாரென்றுந் தத்துவாநுபவ சாக்ஷாத்காரத்துக்கு உரியரென்றுங்கூறிய இதிகாசத்தாலும் பெறப்பட்ட துணர்க.

---

## முத்திக்கிரமம்.

—:*:—

**நா**ல்வகை க்ஷேத்திரத்தில் மரிக்கின்ற அண்டசம், சுவேதசம், உற்பீசம், சராயுசம் என்னும் நால்வ

சையோனிகளடையுமுத்தி சத்தியோமுத்தி யென்றும் போகாந்த முத்தியென்றும் யாதனந்த முத்தியென்றும் மூவகைப்படும். இதற்குரிய அதிகாரிகளும் முறையே உத்தமர், மத்திமர், அதமர் என மூவகைப்படுவர். போகாந்தமுத்தியும் யாதனந்த முத்தியும் விளம்பமுத்தியெனப்படும்.

---

## சத்தியோமுத்தி.

சிவபக்தி விசிட்டராய்ப் பஞ்சாக்கராதி ஜபபராய் ஈஸ்வரார்ப்பணஞ் செய்யுங் கிரியையுடையவராய் முமூக்ஷுக்களாய விரத்தர்களும் கிரகஸ்தருள் மோக்ஷ விருப்பால் நிரபேக்ஷமாய் சுருதிஸ்மிருதிகளில் கூறும் வருணச்சிரமத்துக்கு உசிதமான கன்மாநுட்டானத்துக் குரியராய் யாகாதிகள் செய்யுஞ் சிரவுதிகளும் அவருள் விதிவத்தாய் யாகாக்கினிப் பிரவேசஞ் செய்பவருமாகிய உத்தமர் தத்துவக்ஞானம் விளம்பமின்றி உபதேசிக்கப்பட்டு சத்தியோமுத்தியடைவர்.

---

## போகாந்தமுத்தி.

வேதாதிகாரிகளுள் வருணச்சிரம உசிதமான கன்மாநுட்டானத்துக் குரியராய் நல்லொழுக்கத்தோடுகூடியவரும் வேதாநதிகாரிகளில் மகாபாதகங்களில் நிவர்த்தராய் கங்காஸ்நானம் விசுவேசர்தரிசனம் ஜபம் தானமுதலியவற்றால் நிவர்த்திக்கும் அற்பபாவத்தை

புடையராய் சம்பாதிக்கப்பட்ட புண்ணியகன்மமுடை யவரும் கிஞ்சித அவசிஷ்டகாமியகன்ம முடையவ ருமாகிய மத்திமர் விசுவேசர் ஆஞ்ஞையால் மாயாசம் பந்தமான போகமும் அதற்கேற்ற சொற்பனதேக ம்போலும் போகாநுபவத்திற்குரிய அயோனிச தேக மும் கொடுக்கப்பெற்று அப்போகாந்தத்து முத்திய டைவர்.

---

## யாதனாந்தமுத்தி.

—:*:—

சன்மார்க்கத்தினின்றும் வழுவி,மகாபாதகஞ்செ ய்பவரும் கங்காஸ்நானம் தேவதரிசன மிவைகளில் சிர த்தையில்லாமல் விசுவசிப்பார்போல் நடிப்பவருமா கிய அதன்மரென்னும் பாவிகள் பிராணனீங்கியதன் மேல் அயோநிசமாய்ப் பாவத்துக்கேற்ற யாதனாசரீரம் ஸ்ரீகாலவயிரவராஞ்ஞையால் வயிரவ கணங்களால் கொடுக்கப்பட்டு அச்சரீரங்களி லோரோர்பாவத்துக்கு முப்பதினாயிரவருடம் தண்டிக்கப்பட்டு உருத்திர பசா சத்துவ மடைந்து பின்பு அந்தச் சரீரநீக்கத்தில்வரும் பண்டயசரீரப் பிராணனீங்குங்கால் திவ்வியசரீரம்பெ ற்று உபதேசானந்தரம்முத்தியடைவர். இவர்க்கு யாத னாநந்தரமேயன்றி முத்திசித்திக்காவாம்.

ஆதலால் பிராணனீங்குகின்றகாலத்தெனை வர்த்த மான காலத்தை யுணர்த்தும் சுருதிக்கு மேற்கூறிய மும்முக்ஷுக்களாகிய தன்மான்மாபரம் தாற்பரியம் மத் திமரும் அதன்மரும் விளம்பத்தி லடைபவராதலால்

போகாந்த சீரத்தும் யாதனுந்த சீரத்தும் பிராணனீ ங்குங்கால் அடைவரென்பது ஊகிக்கப்படும் நாகேசுர ரும் அவ்வாறே கூறினர்.

மனிதரொழிந்த தாவரசங்கமங்கள் ஆகாமிய புண் ணியபாவ மில்லாமையாலும் பிராரத்தகன்மம் போக த்தால் நசித்தலினுனும் காசியில் சனித்தமாத்திரத்தில் பூர்வசஞ்சிதபாவங்கள் போதலினுலும் சேடித்த புண் ணியத்திற்கேற்ப மத்திமர்போல் போகாந்தத்தில் முத் தியடையும். ஆகாமிய முன்டென்பார் மதத்தில் வசி க்கும் புண்ணியத்தால் பாவநீங்க சேடித்தபுண்ணியம் முன்போல அநுபவித்தடையு மென்றலுமொன்று.

அன்னியதேசத்தில் மகாபாதகஞ் செய்தவரும் காசியையடைந்த மாத்திரத்தில் மரிப்பரேல் பூர்வபாவ ங்கள் நசிக்கப்படுதலினுலும் காசியில் பாவஞ்செய்யா மையாலும் தேகாந்தத்தாவது போகாந்தத்தாவது முத் தியடைவர். காசியை யடைந்தார்க்குப் பாவம் நீங்கு மென்பது காசியை யடைந்தோர்பலன் முற்கூறியவத னுனுங் காண்க.

இவர்கட்கெல்லா மலபரிபாகம் சத்தினிபாத மெவ் வாறுகின்றன வெனில் உபதேசகாலத்து பரமகுருவா கிய சிவபெருமானது வீக்ஷணத்துக்கு அருகராம்பொ ழுது கன்மசாமியத்தோடு உண்டாகின்றனவென்க.

முக்கியமான காமியகன்மமுடையவர் சுவர்க்கா திபுண்ணியலோகப் பிராப்தி அனந்தரங் காசியில் சனி த்து முத்தியடைவர்.

அநேக ஜன்மத்துக்குக் காரணமான கன்மத்தாலெடுக்கப்பட்ட தேகமுள்ளபாவிகள் காசியில்மரித்தால் அங்குத் திரும்பத்திரும்பச் சன்மமெடுத்து அச்சன்மங்களின் முடிவில் முத்தியடைவர். ஸ்ரீகாசியில் ஓங்காரேசர் சந்நிதியில் மரித்த ஒருவேடன் திரும்பத்திரும்பச் சன்மமெடுத்து முத்தியடைந்தானென்று சிவபுராணத்தும் காசியில்மரித்த வேறொருவன் அங்குமரித்ததினால் யமயாதனையின்றியும் அனேகசன்மத்துக்குக் காரணமான பாவகன்மத்தால் முத்திக் கருகனாகாமையால் வயிரவயாதனை யின்றியும் கிருமிமுதலாகப் பத்துயோனியில் சனித்து அதன்மேல் பைசாசயோனியெடுத்து வருத்தமுற்று இமாலயத்தி லிருக்குங்கால் அவனுக்கிரங்கிக் காஞ்சனமாலையென்னும் தேவஸ்திரீ கொடுத்த பிரயாகை மாகஸ்நானமான்மியத்தால் தேவசரீர மடைந்தானென்று மாகமான்மியத்துங் கூறப்படுதலின்.

---

## பக்ஷாந்தர நிரசனம்.

—:*:—

சுருதியில் பிராணனீங்குகின்ற காலத்தென சானசு பிரத்தியயம் வர்த்தமானத்தை யுணர்த்தலினாலும் யாதனாந்தர முத்தியென்று புராணவசனங்க ளிருத்தலாலும் சுருதிவிரோதமின்றி பிராணனீங்குதற்கு சிலகணத்தின்முன் பாவிகட்கு சொப்பனாவஸ்தைபோல நானாவித யாதனையுங் கொடுக்கப்படும் அதன்மேல் பிராணனீங்குங்கால் திவ்வியசரீரங்கொடுத்து

உபதேசிக்கப்படு மென்றும் மிருதிமோக்ஷ நிர்ணயத்தில் கூறப்பட்டதே யெனின்!

வர்த்தமானச் சுருதிக்கு முமூக்ஷுக்களாகிய தன்மாத்மா பரமென்பதே நிச்சயமாதலாலும் பாவிகட்குப் பிராணனீங்கியதன்மேல் யாதனுசரீரங் கொடுக்கப்படுகிறதென்று சுருதிக்கு அநுவாதங்களான புராணவசனங்க ளனேகமிருத்தலினாலும் அது பொருந்தாதென்க.

பிராண னீங்கியதன்மேல் யாதனுசரீரக் கொடுக்கப்படுமென்பது பதுமபுராணத்தில் கிரமேளகனென்றொரு சூத்திரன் காசியில் மணிகர்ணிகாதீரத்தில் தயையுடையனும் மாற்சரிய மில்லாதவனும் பிராமணர்களிடத்தில் பத்தியுள்ளவனும் புண்ணிய ஆன்மாவாயுமிருந்தான் அவனிடத்தில் சாங்காத்தியயனஞ் செய்தவனாய் ஓர் பிராமணோத்தமன் வந்து யாசித்தான் யாசிக்குங்கால் அவனில்லையென்று மறுக்கவும் திரும்பவும் யாசிக்க அவன் அவனைப்பார்த்து வைது கையாலடித்தான் அப்பாவத்தால் வியாதியுள்ளவனாய் பாவான்மாவாய் சிலகாலஞ்சென்று இறந்தான் அவனுக்கு வயிரவகணங்கள் யாதனுசரீரத்தைக் கொடுத்து கிருமி சுவானம் முதலிய யோனிகளில் முப்பதினாயிரம் வருடம் தண்டித்து சங்கீரணயோனி சரீரமும் சூத்திரசரீரமுங் கொடுத்து அதன்மேல் காலவயிரவரால் உருத்திரபசாசத்துவங் கொடுக்கப்பட்டு அதில் முப்பதினாயிரவருடம் சென்றதன்மேல் உபதேசிக்கப்பட்டு முத்தியடைந்தானென்று கூறும் இதிகாசத்தானுங் காண்க.

இக்காலத்தில் சிலர் உபதேசத்துக்கடுத்த பிறக்கணத்தில் ஞானம் உதிக்கின்றமையால் வயிரவயாதனை மரித்தவர்க்கு உண்டாகாதென்றும் உண்டாமெனில் காரணமில்லாவிடத்தில் காரியமிருந்தால் வியதிரேக வியபிசாரமு மாமென்பர்.

மேற்கூறிய நியாயத்தால் பாவிகள் யாதனுனந்தத்து முத்தியடைவரென்பது சித்தித்தலானும் சாபாலச்சுருதியில் பாவிகள் கோரமான வயிரவ யாதனுனந்தரம் காசியில் ஜனித்து முத்தியடைவரென்று கூறப்படுதலாலும் அது பொருந்தாது. மேலும் அதிகபாவமாகிய காரணமுள்ளவிடத்துக் காரியமாகிய யாதனையின்றென்றற்குப் பிரமாணமின்மையால் அன்வய வியபிசாரமுமாம்.

புண்ணியபாவமென்னும் வித்துக்கு காசி உவர்ப்பூமிபோலாம். என்னும் வசனத்தால் புண்ணியபாவங்கள் நசித்தலில் ஜன்மாந்த்ரமுண்டாகாமையால் யாதனையு முண்டாகாதெனின் அது நிட்காமிய கன்மிகளாகிய உத்தமர் மகாபாவஞ் செய்யாமையாலுஞ் சொற்பமான பாவங்கள் சிலவுளதேல் கங்காஸ்நானம் தேவதரிசனம் இவைகளால் நிவர்த்திக்கப்படுதலானும் மேலவர்செய்யுஞ் ஜபம் தவம் முதலிய விசேடபுண்ணியங்கள் நிட்காமியமாதலில் பலத்துக்கு வாராமையாலும்

அவர் பரமென்றே நிச்சயிக்கப்படுதலின் அங்ஙன மாகாமையறிக.

---

## காலவரையறை.

—:*:—

சொப்பன சரீரத்துக்கு வேறும் நரகயாதனுசரீரத்துக்கு வேறும் அயோநிசமாய்க் கொடுக்கப்படும் யாதனுசரீரத்தில் முப்பதினுயிரம்வருடம் ஓரோர் யோனிகளிலுந் தனித்தனி அற்பகாலஞ் சங்குசிதமாய் ஓர் கற்பமளவில் அநுபவிக்கத்தக்கதாயிருக்கும் யாதனைகளும் வயிரவராணையால் அநுபவிக்கப்படும்.

அவ்வாறு சொப்பன சரீரத்துக்குஞ் சுவர்க்க சரீரத்துக்கும் வேறுய் அயோநிசமாய் மாயையினின்றுஞ் சிவபிரானுல் போகாநுபவ புண்ணியசரீரம் கொடுக்கப்பட்டு கற்பாந்த போகாநுபவ மொவ்வொன்றும் முறையே யாதனுந்த முத்திக்கும் போகாந்தமுத்திக்கும் சங்குசிதமாய் அநுபவிக்கப்படுமெனக் கொள்க.

---

## கலியுகத்தும்முத்தியுண்டெனல்.

—:*:—

அதிக வுக்கிரமான பாவமிக்க யிக்கலியுகத்தில் திவ்விய லிங்கங்களோடு காசி பூப்பரிசமின்றி அந்தர்த்

தான மாயினவென்று காஞ்சிமான்மிய முதலியவற்றிற் கூறுதலில் முத்தி யெவ்வாறுமெனில் மாமசானபூமியாகிய காசிபூப்பரிசமின்றிப் பரமவியோமத்தில் அந்தர்த்தானமாயினும் அதில் வீசுவேசர் நீங்காதிருந்து முத்திகொடுக்கின்றார் என்றேனைய புராணங்களிற் கூறப்படுதலாலும் அந்தர்த்தான மாயிற்றென்ற புராணங்கட்கு கலியுகத்து முத்தியின்றென்றது கருத்தன்மையாலும் கலியுகத்தும் முத்தியுண்டென்பதே நிச்சயம்.

## ஸ்ரீ காசிமான்மியம்

முற்றுப்பெற்றது.

---

துண்டிவிநாயகர் துணை.